கல்வெட்டுக் கருத்தரங்கு

SEMINAR ON INSCRIPTIONS

1966

உரைகளும் எழுத்துரைகளும்

SPEECHES AND PAPERS

Edited by

R. NAGASWAMY, M.A.,
Director of Archaeology, Government of Madras

BOOKS (INDIA) PRIVATE LTD.,
135, CORAL MERCHANT STREET :: MADRAS - 1

கல்வெட்டுக் கருத்தரங்கு

SEMINAR ON INSCRIPTIONS

1966

425

உரைகளும் எழுத்துரைகளும்

SPEECHES AND PAPERS

Edited by

R. NAGASWAMY, M.A.,

Director of Archaeology, Government of Madras

BOOKS (INDIA) PRIVATE LTD.,

135, CORAL MERCHANT STREET :: MADRAS - 1

First Edition
February 1968

Price Rs. 15/-

Shanti Press, Madras - 1

படையல்

பிராமி என எண்ணிய எழுத்துக்கள் தமிழ் வரிவடிவமே என உலகிற்குணர்த்திய முதலறிஞர் - முதுபெரும் ஆராய்ச்சியாளர் திரு. கே. வி. சுப்பிரமணிய ஐயரவர்கட்கு

பணிவார்ந்த நன்றியுடன்.

பதிப்புரை

ஒரு நாட்டின் வரலாற்றை அறிவதற்குக் கருவிகளாக இருப்பவை அந்நாட்டு இலக்கியங்கள், தொல்பொருள் சின்னங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள் முதலியனவாகும். நம்நாட்டு வரலாறு மேலைநாட்டினர் வரலாற்றைப்போல முறையாக எழுதப்படவில்லையெனினும் ஆங்காங்கே காணப்படும் கல்வெட்டுக்கள்மூலம் நம் முன்னோர்களின் வரலாற்றை நாம் ஒருவகையில் அறிந்துகொள்கிறோம்.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் கல்வெட்டுக்கள் பழந்தமிழரின் ஆட்சிமுறை, வாணிகம், போர்த்திறன், நாகரிகம், பண்பாடு சமயவாழ்க்கை, அறச்செயல்கள் ஆகியவற்றைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகின்றன. ஏட்டில் எழுதும் எழுத்தை விடக் கல்லில் எழுதும் எழுத்துக்கள் காலமெல்லாம் அழியாமல் நம் நாட்டின் வரலாற்றைப் பேசிக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சென்னைமாநகரில் 1966 அக்டோபரில் ராஜாஜி மண்டபத்தில் தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் நடத்திய கல்வெட்டுக் கருத்தரங்கு ஆய்வுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிஞர் பலரின் கல்வெட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளடங்கிய அரிய தொகுப்பாகிய இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்நூலுக்கு அணிந்துரை நல்கிப் பொலிவளித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு எங்கள் நன்றியை முதற்கண் புலப்படுத்திக் கொள்ளுகிறோம்.

இந்நூலைத் தொகுத்து வெளியிடுவதில் எங்களுக்குப் பேருதவியாக இருந்த அறிஞர் திரு. சா. கணேசன் அவர்களுக்கும், இதனைச் சிறந்த முறையில் பதிப்பிப்பதில் எங்களுக்கு உறுதுணையாக இருந்த தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்களுக்கும், அச்சுத் தாள்களைச் செம்மையுறத் திருத்தி யுதவிய திரு. எம். டி. சம்பத், எம்.ஏ., திரு. என். எஸ். ராமசாமி, திரு. என். செல்வகுமாரசாமி அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூல் வரலாற்றுத்துறையில் ஈடுபடும் அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் கைவிளக்குப்போல் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றோம்.

சித. இராமநாதன்

CONTENTS

INTRODUCTION

The Tamil country is very rich in monuments and inscriptions. With a view to focus the attention of the public on the great cultural heritage of Tamilnad, the State Department of Archaeology, Madras, organised a special exhibition at Rajaji Hall, Madras from 12th to 26th December 1965. The exhibition was opened by Thiru M. Bhaktavatsalam, Hon'ble Chief Minister of Madras. The exhibition consisted of some masterpieces of Tamil bronzes like Vrishavahana from Tanjore Art Gallery, select ivory carvings, wood carvings, copper—plates and ancient coins of the Tamil country besides photographic enlargements of monuments of Tamilnad. The exhibition was by far the best and biggest organised in recent years in Madras. It was well received by both scholars and the public. During the exhibition a suggestion was made by the public to hold similar exhibitions at regular intervals in various parts of Tamilnad.

The Department also had the privilege of carrying the exhibition *Know your monuments* to Kuala Lumpur, Malaysia, in connection with the 1st International Conference of Tamil Studies. Thiru M. Bhaktavatsalam, who led the Indian delegates, declared the exhibition open. The exhibition received the admiration of the international gathering.

There are over 25,000 inscriptions so far noticed in the Tamil country, of which only 5,000 have been critically edited and published. A good number of the inscriptions have been lost while many of them are getting damaged due to vandalism or natural causes. The Government of Madras took up the publication of all the inscriptions of Tamilnad, under a phased programme in 1966 and sanctioned necessary staff for that purpose. To emphasize the role of inscriptions in reconstructing history, a two-day Seminar on Inscriptions was organised by the Madras State Department of Archaeology on 8th and 9th October 1966 at Madras. The Seminar was inaugurated by Thiru Bhaktavatsalam, and was presided over by Thiru T. P. Meenakshisundaran, Vice-Chancellor of the Madurai University. Thiru V. Karthikeyan Director of Tamil Development, Government of Madras, welcomed the eminent scholars research students and the public who participated in the proceedings of the Seminar. The Seminar was divided into various sections dealing with religion, Fine Arts, Damili inscriptions, Linguistics, General History, Economic History, and Epigraphical Researches. Eminent scholars like Prof. K. A. Nilakanta Sastri, Dr. Filliozat, Thiru T. N. Ramachandran,

Dr. M. Rajamanikkam, Prof. K. K. Pillay and Thiru H. K. Narasimhaswamy presided over various sessions. The Seminar was the first of its kind to be held solely devoted to the study of inscriptions and attracted large gathering.

A special exhibition *Know your heritage* was also organised on the occasion. The exhibition was also opened by the Chief Minister of Madras on 8th and was kept open to the public till 22nd October 1966. It was organised on a large scale, with the kind co-operation of the Government Epigraphist, Mysore; the Government Museum Madras; the University of Madras; the French Institute of Indology, Pondicherry and private collectors. The exhibition was so designed to focus the attention of the public on the epigraphical wealth of the country and the need to preserve and conserve valuable records. It dealt with the development of various scripts, the economic, political, religious and artistic heritage of the country as gleaned from inscriptions. The estampages of all the historic inscriptions of Tamilnad were exhibited. The exhibition was illustrated with large size photographs, charts, drawings, copper plates, inscribed potsherds, utensils etc. Photographs of eminent epigraphists were also on view. A separate section was devoted to children for learning ancient letters through illustrated books and letter cubes. A few estampages of inscriptions in Grantha and Nagari characters from Cambodia were specially brought for the exhibition by Dr. Filliozat.

In response to our call, many scholars participated in the Seminar by presenting valuable papers. Thiru Saw. Ganesan who has an abiding interest in the inscriptions of Tamilnad has suggested that these papers could be collected and published in the form of a book. At his suggestion Messrs. Books (India) Private Ltd., Madras, came readily forward to undertake this work. The Government of Madras were pleased to accord necessary permission to the printing of the publication: vide G.O. Ms. No. 2042 Education dated 27th November 1966.

A paper on a bilingual coin of Satavahana king Vacittiputra Satakarni published by me in the "Sunday Standard", Madras on 26th March 1967, evoked great interest among eminent scholars. Since then a number of articles have been written on this paper and coin. Though this paper was not presented before the Seminar it has been included in this collection, in view of its importance.

I take this opportunity of expressing my thanks to Navalar Thiru. V. R. Nedunchezhian Hon'ble Minister for Education for his foreword.

It is hoped that this book would be of great use to scholars and the public interested in the study of South Indian epigraphy.

R. NAGASWAMY

மாண்புமிகு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின்

அணிந்துரை

பல ஆயிரம் ஆண்டுகளாக மொழி, கலை வரலாறு ஆய அனைத்திலும் சீரான வளத்தினையும், வளர்ச்சியையும் பெற்றுத் திகழும் தமிழகத்தின் பண்டைப் பெருமையினை அறியும்போது நம்மிடையே பூரிப்பும், பெருமிதமும் ஏற்படுவது இயல்பே. அந்த வகையில் தொல்பொருள் ஆராய்ச்சி ஒரு சிறப்பைப் பெறுகிறது.

1965ம் ஆண்டில், தமிழகத்துக் கட்டடக் கலையின் பெருமையையும், சிற்பக்கலையின் செழுமையையும் படிமக்கலையின் பண்பையும், இன்னபிற கலைகளின் ஏற்றத்தையும், தமிழக அரசின் தொல்பொருள்துறை ஒரு கலைக்காட்சியில் பாங்குற அமைத்து மக்களின் கவனத்தை ஈர்த்தது. முதல் அனைத்துலகத் தமிழ்க் கருத்தரங்கை ஒட்டிக் கோலாலம்பூரிலும் இக் காட்சியை அமைத்து, அனைத்துலக அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தது. 1966ம் ஆண்டில் கல்வெட்டுகளைப் பற்றிய காட்சி ஒன்றை அமைத்து, அத்துடன் கருத்தரங்கு ஒன்றையும் கூட்டி, அதில் அளிக்கப்பட்ட கட்டுரைகளைத் திரட்டி இந்நூல்வடிவில் கொண்டு வந்துள்ளது. மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் அவர்களும் பிறநாட்டு அறிஞர்களான பேராசிரியர் பிலியோசா, டாக்டர் ஸ்மித் முதலியோரும் இன்னபிற அறிஞர்களும் கலந்து கொண்டு இக் கருத்தரங்கைச் சிறப்பித்துள்ளனர்.

மற்ற எந்நாட்டிலும் காணக்கிடைக்காத அளவுக்குத் தமிழகத்தில் கல்வெட்டுக்கள் உள்ளன. தமிழக வரலாற்றை வரையறுத்துக் கூறும் இவற்றைக் காத்தலும், போற்றலும், வேண்டும். அதில் தமிழக அரசு ஆர்வத்தோடு முன்னின்று ஆவன செய்து வருகிறது. இதுபோன்ற பல நூல்கள் வெளி வருதல் வரலாற்று வல்லுநர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும், மாணவர்க்கும் பயனுடைத்தாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சென்னை
2-2-'68.

இரா. நெடுஞ்செழியன்

WELCOME ADDRESS

by

V. KARTHIKEYAN, I. A. S.
Ex-officio Secretary to Government, Public Department.

The Tamil inscriptions on rocks, temple walls, copper plates, terracotta etc. are veritable sources of history and it must be admitted that we have not yet unearthed all of them, nor have we deciphered, interpreted and drawn the correct conclusion from those that have been already brought to light. A good deal of work by way of conservation, discovery and research remains to be done in Tamilnad in relation to these inscriptions. The present Seminar and Exhibition on Inscriptions has therefore come in very timely and they should serve to open the eyes of the public to the importance and value of our ancient recorded data. In fact, it is surprising that while people outside Tamilnad are evincing so much interest in our culture, history, language and literature and are anxious to go to the original sources, adequate attention has not been paid within the State all these years. I would therefore urge that similar exhibitions of our inscriptions and information about the development of the Tamil script should be held at important centres in Tamilnad such as Madurai, Coimbatore, Tiruchiraplli etc. and the state Department of Archaeology should be strengthened for the purpose. I have great pleasure in welcoming the Chief Minister and others gathered at this function and would like to thank them for their continued interest and support given to our efforts in this direction.

திரு. சா. கணேசன் ஆற்றிய சிறப்புரையின் சாரம் :

கருத்தரங்கின் தலைவரவர்களே !

கனம் முதலமைச்சர் அவர்களே !

ஆராய்ச்சியாளர்களே !

சகோதர சகோதரிகளே !

வணக்கம். தமிழகத்திலே கல்வெட்டுக் கருத்தரங்கு நடைபெறுவது இதுதான் முதன் முறை. இதில் கலந்துகொள்ள வந்திருப்பவர்கள் இத் துறையில் பேரும் புகழும் ஈட்டிய பெரும்பணிச் செல்வர்கள். இவ்வளவு பெயரும் இதில் கலந்துகொள்ள முன் வந்திருப்பதே இதன் வெற்றிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இக்கருத்தரங்கில் பேரார்வமும் பேரக் கறையும் காட்டி, வந்திருக்கும் அறிஞர் பெருமக்களையும் பொதுமக்களையும் மனமார வாய்மணக்க நல்வரவு கூறி வரவேற்கிறேன்.

எல்லா வகையாலும் மிகவும் பொருத்தமான குருதேவர் தெ. பொ. மீ. அவர்கள் தலைமை தாங்க இசைந்ததன் மூலம் இக்கருத்தரங்கிற்குப் பொலிவையும், புகழையும் தந்திருக்கிறார்கள். இத்தகைய கருத்தரங்கு ஏற் பாட்டின் பயனை நன்குணர்ந்து பேராதரவு தருகின்ற நமது முதலமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைக்க இசைந்துள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுடன் கூடிய நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளு கிறேன். அங்ஙனமே தமிழ்த் துறைக்குச் செயலாளராக இருக்கும் திரு. கார்த்திகேயன் அவர்களையும், கல்வித்துறை செயலாளர் துணைச்செயலாளர் உள்ளிட்ட மற்ற அரசாங்க அலுவலர்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்களின் ஆக்கமும் ஊக்கவுரையும் இன்றேல் இக் கருத்தரங்கு உருவாகியிருக்க முடியாது.

இத்துறைக்குத் தனி அலுவலராக இருக்கும் திரு. நாகசாமி அவர்கள் தம் துணைவர்கள் பலருடனும் கூடி அல்லும் பகலும் அயராதுழைத்த ஆர்வத் தையும் நான் போற்றாமலிருக்க முடியாது.

எல்லாவற்றிற்கும் தோன்றாத் துணையாய் விளங்கி நம்மை எல்லாம் நடத்திச் செல்லும் ஒரு பரம்பொருளை வணங்கி என் சிறப்புரையைத் தொடங்குகிறேன்.

நம் வரலாறு தெற்கிலிருந்து தொடங்கவேண்டும். பல்வேறு காரணங்க ளால் இந்திய வரலாறு வடக்கிலிருந்தே தொடங்கி விட்டது. தென்னகத் தில் உள்ள வரலாற்றுச் செய்திகளும், செய்தித் துணுக்குகளும் ஏராள மானவை. எல்லாம் கல்லிலும், பாறையிம்லு, செம்பிலும், ஓட்டிலும் நெறிப் படி பதிவானவை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை, சங்கிலி வளையம்போல், தொடர்ந்து வருபவை. தமிழகத்தில் மட்டும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன.

அவற்றுள் சுமார் இருபத்தையாயிரம் மட்டுமே இத்துறையாளர் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவையும் முழுதும் படிஎடுத்து ஆய்ந்து தெளிந்து அச்சாகி முடியவில்லை. சுமார் 5000 கல்வெட்டுக்களே அச்சானவை. அவற்றிலும் மிகப் பெரும்பாலானவை இன்று கிடைப்பதில்லை.

மேலும் எண்ணற்ற கோயில்களும், மண்டபங்களும் இடிந்தும், இடிக்கப்பட்டும் போயின. அவற்றில் இருந்த கல்வெட்டுக்கள் யாவும் மறைந்தொழிந்தன. அக் கல்வெட்டுக்களில் என்னென்ன அருமைச் செய்திகள் இருந்தனவோ, அவை முற்றும் நாமறியுமாறில்லை. போனது போனதே! இனி இருப்பனவற்றையாவது காத்துப் படி எடுத்துக் கணிக்க வேண்டுமன்றோ !

உள்ளனவற்றில் பல பேணுவாரற்றுப் பெரிதும் சிதிலமாகிக் கொண்டு வருகின்றன. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வாயலூர் என்ற ஒரு சிற்றூர்; அதில் ஓர் அருமையான கோயில்; பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது. பெரும்பாலும் இடிபாடுகளாகவே இன்று காணப்படுகிறது. பூசைமட்டும் என்னவோ நடந்து கொண்டிருக்கிறது. அங்கு நுழைவாயிலில் கோபுரமில்லா மண்டபம்தான் இருக்கிறது. அதில் ஒரு கற்றூணில் பல்லவர் குடிவழி வரிசையாக பொளியப்பட்டுள்ளது. அத்தூண் விலை மதிப்பற்ற ஒரு வரலாற்றுச் செல்வம். அது மழையாலும் வெயிலாலும் பெரும்பாலும் பழுதுபட்டு விட்டது. அதை ஒருவர் 5000 ரூபாய் வரை பேரம் செய்திருக்கிறார். கிராமத்தார் விற்க மறுத்து விட்டனர். இப்பொழுது அதை மியூசியத்தில் வைத்துப் பரிபாலிக்க அவர்கள் அன்புடன் இசைகிறார்கள்.

இங்கே திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் பல கல்வெட்டுக்கள் மதிப்பாரற்று மிதிக்கப்படுகின்றன. ராமன் சந்நிதிக்கு முன் தரையில் பாவப்பட்டுள்ள ஒரு சிறு கல்தகடு "குலோத்துங்கன் திருமாளிகை" என்ற எழுத்துக்களுடன் காணப்படுகின்றது.

அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய பட்டிகைக் கல் (சுமார் 20 சதுர அடியுள்ளது.) நந்திவர்மன் கல்வெட்டுடன் கூடியது. இன்று அது புளியோதரை, தயிர்ச்சாதம் பிசையும் தகட்டுக்கல்லாகப் பயன்பட்டு வருகிறது.

திருவதிகைக் கோயிலில் ராஜகோபுரத்தின் உட்படியாக ஒரு அருமையான கல் (சுமார் 25 சதுர அடியுள்ளது) கிடத்தப்பட்டிருக்கிறது. அதில் பரமேச்வரவர்மன் கல்வெட்டுள்ளது. அது ஒரு அருமயான கல்லெழுத்துச் சான்று.

இங்ஙனமே சிதம்பரம், திருவண்ணாமலை, திருவொற்றியூர் போன்ற பெருங்கோயில்களில் எண்ணற்ற கல்வெட்டுக்கள் சுற்றுப் பிரகாரங்களில் பாவுகல்லாகக் கிடந்து பரிசழிகின்றன. இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு எல்லாவற்றிற்கும் படி எடுத்து விரைவில் ஆராய்ச்சி யுலகத்திற்குக் கிடைக்கச் செய்யவேண்டும். கல்வெட்டுப் போன்றவையே வரலாற்றை எழுத அடிப்படையான ஒப்பற்ற சான்றுகள்.

இத்தகைய சான்றுகள் உலகத்திலேயே தமிழர்க்குத்தான் வளமாக விளங்குகின்றன. தொடர்ந்து, மறுக்க முடியாத, பிடிபாட்டுச் சான்றுகளுடன் கூடிய வரலாற்றுச் செய்திகள் இரண்டாயிரம் ஆண்டுகட்கும் மேலான காலத்திற்குக் கிடைக்கின்றன.

ஆகவேதான் தமிழ் நாட்டிற்கென்றே தனியாக தொல்பொருள் துறை இருக்க வேண்டுமென்று பல்காலும் சட்டசபையிலும், தனியாகவும் வற்புறுத்திக் கொண்டே வந்தேன். முதலமைச்சர் அவர்களையும் நீலகிரியில் கல்வெட்டிலாகாவுக்குக் கூட்டிச் சென்று அங்குள்ளவற்றையும் அதன் அருமையையும், நாம் மேற்கொள்ள வேண்டிய பணியையும் பற்றி அவர்கட்குப் புலப்படுத்திக் கொண்டேன். அவர்களும் பேரார்வங் கொண்டு இத்துறையின் இன்றி யமையாமையை மதித்து எல்லா ஏற்பாடுகளும் செய்வதாக வாக்களித்தனர்.

அதன்பின், இந்தத் துறை அமையச்செய்து ஊக்கமும் அளித்தார்கள். அவசர அவசரமாகப் பணியாற்றி மலேசியாவில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மாநாட்டிற்குப் பல புகைப்படங்கள் கொண்டு செல்லப் பெற்றுக் காட்சிக்கூடமும் அமைக்கப்பட்டது. ஏராளமான அறிஞர்கள், பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள், கண்டு மகிழ்ந்து களிபேருவகை கொண்டு வாயாரப் பாராட்டினர். அவற்றை யெல்லாம் நேரில் அறிந்த நமது முதலமைச்சர் இத்துறைக்கு மேலும் ஆதரவு நல்கினார்கள். அந்த ஆக்கமே இந்தக் கருத்தரங்கைத் தொடங்க எங்கட்கு ஊக்கம் அளித்தது.

நமது வரலாற்றுச் சான்றுகள் தரும் கல்வெட்டுக்களில் மிகமிகப் பெரும் பான்மையானவை திருக்கோயில்களிலேயே உள்ளன. எனவே கோயில் அறங்காவலர்களின் உதவியும் ஒத்துழைப்பும் இத்துறைக்குப் பெரிதும் தேவையான ஒன்று. அதை முழுதும் தருதற்கு இந்து சமய அறத்துறைத் தலைவர் திரு. சாரங்கபாணி முதலியார் அவர்கள் என்றும் முந்தி நிற்பவர். அவர்களின் ஆதரவு இந்த நற்பயிர்க்குச் சிறந்த உரமாகும். அது பயிரை வளர்ப்பதுடன் பலனையும் மிகுப்பதாகும். அந்த நல்லெண்ணத்துடனேயே அவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வருகைக்கும் செய்துவரும் உதவிக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கருத்தரங்கிலே ஒரு தனிச்சிறப்பு. இந்தியாவிலேயே முதன் முதலாக நமது துறைதான் கல்வெட்டுப் படி எடுப்பதில் ஒரு முன்னேற்றப் பாதையை வகுத்திருக்கிறது. கண்பிரதி, காகித அழுத்தப்பிரதி, புகைப் படப் பிரதி ஆகிய மூன்று முறையைத்தான் கல்வெட்டுத்துறை இது வரைப் பின்பற்றி வந்தது.

நமது மாநிலத் துறைதான் முதன் முதலாக 'சிபா' கம்பெனியாரின் ரசாயனப் பொருள்களையும், கண்ணாடி இழையையும் கொண்டு படி எடுப்பதில் ஒரு செம்மையான வழியை மேற்கொண்டு நற்பயன் தந்திருக்கிறது. இந்த முறையில் கட்புலனாகாத, காமராக் கண்ணுக்கும் அகப்படாத, புள்ளிகள் கூடச் செம்மையாக, தெளிவாகப் படிமாறி யிருப்பதைப் பார்க்கும் போது எல்லையில்லாத மகிழ்ச்சி யுண்டாகிறது. இந்தப் புது முயற்சிக்குக் காரணஸ்தர்களாக இருந்தவர்கள் இருவர். ஒருவர் நமது பழம்பொருள் துறைத் தனியலுவலர் திரு. நாகசாமி, மற்றவர், அவருக்கு இம் முறையை எடுத்துக்காட்டி உடனிருந்து உதவிய 'சிபா' கம்பெனியைச் சேர்ந்த திரு. ஜெவந்திச்வரன்.

முதற்படி எடுக்கும்போது உடனிருந்து காணவும், துணையாயிருந்து பணி

யாற்றவும் எனக்கும் வாய்ப்புக் கிட்டியது என்று கூறிக்கொள்வதில் நான் பெருமையடைவது தவறில்லைத் தானே ?

இங்ஙனம் தோன்றும் போதே சித்தியுடன் தோன்றிய நமது தொல் பொருள் துறை ஆண்டவன் அருளாலும், அன்பர்கள் துணையாலும் அரசாங் கத்தின் ஆதரவாலும், வளம்பெற வளர்ந்து நலம் பல நல்க வேண்டும் என்று பிரார்த்தித்து என் சிறப்புரையை நிறைவு செய்து கொள்ளுகிறேன்.

திரு. மா. சே. சாரங்கபாணி

ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

தமிழகத்தில் உள்ள கோயில்களில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் இருக்கின்ற காரணத்தாலும், கோயில்கள் மற்றும் பல அறநிலையங்களின் பாதுகாப்பாளர் என்ற முறையிலும், இக்கல்வெட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சிக் கருத்தரங்கில் என்னையும் பங்குகொள்ள அழைத்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

நம் ஆலயங்களில் ஏராளமான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. பண்டைய காலத்திலிருந்து தற்காலம் வரையில் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை கோயில்களுக்காக அரசர்களால் கொடுக்கப்பட்ட நன்கொடைகளைக் குறிக்கின்றன. விளக்குகள் எரிக்க நெய் கொடுப்பதற்காக அன்பர்கள் பலர் பசுக்களையும் ஆடுகளையும் கொடுத்த செய்திகளைக் கூறுகின்றன.

அறநிலையங்களின் நிர்வாகங்கள் எவ்வாறு இருந்தன என்று இவற்றைக் கொண்டு நாம் அறிய முடிகிறது. பல கோயில்களில் கல்விச்சாலைகள் நிறுவப் பெற்று இருந்தன. பொதுமக்களின் வைத்திய வசதிகளுக்கென நிலங்கள் வழங்கப்பட்டமை பற்றியும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருமுக்கூடல் என்று காஞ்சிக்கு அருகில் ஓர் ஊர் இருக்கிறது. அங்கு மிகப் பெரிய கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதில் அந்தக் கோயிலில் ஏற்படுத்தப்பட்ட வைத்திய சாலையைப் பற்றியும், அங்கு எத்தனை பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது, என்னென்ன மருந்துகள் கொடுக்கப்பட்டன, ஓராண்டுக்கு எவ்வளவு மருந்துகள் சேகரித்து வைக்கப்பட்டன என்பனவற்றைப் பற்றியும், முழு விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

நாட்டியக் கலையும், இசைக்கலையும் பண்டைக் காலத்தில் கோயில்களில் எவ்வாறு போற்றப்பட்டன என்றும், பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. உத்தரமேரூர்க் கல்வெட்டில், ஊர்ச்சபைகளுக்கு மக்களைத் தேர்ந்தெடுக்கும் முறை தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது அறிஞர்கள் எல்லோரும் அறிந்த, புகழ் மிகுந்த கல்வெட்டு ஆகும்!

சமூக வரலாற்றையும், சமய வரலாற்றையும், சரித்திரக் குறிப்புகளையும் அறிவிக்கும் இந்தக் கல்வெட்டுக்களை யெல்லாம் நாம் நல்ல முறையில் காக்க வேண்டும். இதன் பொருட்டு ஆலய நிர்வாக அதிகாரிகளுக்குத் தகுந்த ஆணைகள் இடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்களை மக்கள் எல்லோரும் நன்கு படிக்க வேண்டும்; காக்க உதவவேண்டும். ஆலய நிர்வாக அதிகாரிகளுக்கு இது பற்றி ஒரு பயிற்சியையும் கூட மதுரையில் நடத்தினோம். பல சிறந்த அறிஞர்கள் அங்கு பயிற்சி யளித்தனர். அதுபோன்று இன்னும் பல பயிற்சி அளிக்கலாம் என்பது என் கருத்து.

PRESIDENTIAL ADDRESS

Prof. T. P. MEENAKSHISUNDARAN,
Vice Chancellor, Madurai University

The Hon'ble Chief Minister, Ladies and Gentlemen,

I am glad that there are foreign scholars in this meeting, anxious to know more about the basis of our culture as revealed by the inscriptions, and to interpret them to the modern world. Therefore, I may be pardoned for speaking in English, so that such of them who may not follow Tamil may better enjoy the poor fare I am offering them by way of introductory remarks.

I have to thank the organisers of this conference for having given me the opportunity of participating in this Seminar, which marks a new step in the progress of popularisation of the basis of our culture. This has been made possible by the interest which our Chief Minister, who is himself an embodiment of our culture, evinces in this matter. What may be called the special department of Tamil Development and Research is very well represented here by my good friend, Sri Karthikeyan, who comes of a family of Tamil poets and scholars and who is himself a lover of Tamil culture and learning. The department of Hindu Religious Endowment, which has developed a wing of architecture and epigraphy, is taking rapid strides, thanks to its commissioner, Sri Sarangapani Mudaliar, and is showing the way to the whole of India. Our special thanks are due to Sri. Nagaswamy, the Hindu temple archaeologist. He has received the cooperation of my friend, Sri Saw Ganesan, who, inspite of his political work, is in the forefront of all organisations interested in Tamil literature, temple arts and inscriptions. I have a grievance against him in that he has not chosen to organise this Seminar and exhibition within the area of the Madurai University of which he is a Senator.

As an educationist, I am specially interested in this Seminar. There is an unhappy tendency in our educational world to neglect a study of humanities. The blame is not only on the students who, in their struggle for existence, rush to study sciences in the fond hope of getting appointment as soon as they finish their studies, but also on the educational institutions, which close down the history and other departments. This was painfully brought to my notice, when the Tamil medium was introduced for studying the humanities. What was more alarming was that the teachers of history themselves lost faith in not

only the utility but also the significance of their study. As the Director of the Orientation Course, organised by the Madras Government, in connection with the College of Tamil Council, I found to my great regret that these teachers seriously believed that history had no place in the modern world, which showed respect only to laboratories and field surveys. Apart from the present, requiring a firm stand on the past, avoiding necessarily the old will-of-the wisp and eschewing the misleading false steps, all these being possible, only through a better understanding of the basis of our culture on its historical march, the perfect development of human personality and human group-life cannot be made possible by one-sided development of science and technology alone, if these are not integrated with humanistic studies. Even to a student of science and technology, there can be nothing more interesting than Man himself and the historical approach reveals to that student the great saga of scientific and technological development.

The other great defect, which we find in our education, is found magnified in our study of history. Our education is nearly verbal and our students therefore cram for the examination without understanding the significance of what they study, probably because they are taught in a foreign medium, which they have not mastered. We make our students mere passive recipients of undigested matter; unnaturally the creative effort natural in them gets stifled. The great historians are the creative artists and in addition great sages with a message. History today is taught as a series of dry-as-dust facts. Even here, if the historic method had been followed, they would have discovered these facts with a glow and joy of a creative artists. Especially in South India, where every name of the village the student comes from, every name of the city he studies, the classic Tamil poetry he recites, the folk-songs he listens to, the stories which narrate the traditions to him, and above all, all the walls of the temples around him with inscriptions thereon, form interesting and captivating sources of history. But these are so divorced from the study of history today that our students do not go directly to these sources to weave out scientifically a beautiful, and significant story of their culture. Any history department, in addition to having museums, can also go on field trips to study these and to take estampages of the inscriptions to be studied in their historical laboratories, with the help of other scientists if necessary. There can be place-name societies in every high school and college. In all these ways and means, history can be made as important as science and as interesting as fiction-writing. Then only education will become practical and scientific, ceasing to be verbal. I welcome this Exhibition, because this will open the eyes of the public

to what I have been emphasising this morning. I hope this Exhibition will become a permanant exhibition on wheels, to be taken from city to city and finally from village to village.

Unfortunately, the inscriptions collected so far had not all been printed. Even those already printed are not available for students. The Madras Government has a scheme to make all these available in print, but on account of various reasons this has not been possible till now. The study of inscriptions is necessary, not only to historian but also to the students of literature, anthropology and linguistics. I hope these would be published as early as possible. I have great pleasure once again in thanking the organisers for having given me the privilege of presiding over this Seminar. It is my proud privilege now to request the Hon'ble Chief Minister to declare open this Exhibition.

கனம் முதலமைச்சர்

திரு. எம். பக்தவத்சலம் அவர்கள்

கண்காட்சியையும், கருத்தரங்கையும் துவக்கிவைத்து ஆற்றிய உரையின் சாரம்

தலைவர் அவர்களே! சகோதர, சகோதரிகளே,

இக் கண்காட்சியைத் திறந்துவைக்கும் பாக்யத்தை எனக்குத் தந்ததற்காக என் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்று நாம் எழுதுவதற்குப் பயன்படுத்தும் தாள், பனை ஓலை முதலியவற்றைப் போல ஒரு காலத்தில் கற்களைப் பயன்படுத்தினார்கள். கல்லில் எழுத்துகள் வெட்டப்பட்ட காரணத்தால் கல்வெட்டு என்று பெயர் வந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்டும்கூடக் கல்வெட்டுக்கள் இருப்பதை அறிகின்றோம். அக் காலத்தில் அரசர்கள் கொடுக்கின்ற தானம் முதலியவற்றைக் கல்வெட்டுகளில் பொறித்தார்கள். இப்படிப்பட்ட கல்வெட்டுக்களின்மூலம் தானம் செய்யப்பட்டது, எதற்காகச் செய்யப்பெற்றது என்பன போன்ற பழைய வரலாற்று உண்மைகளை அறியமுடிகிறது. உண்மையாகச் சொல்லப்போனால் வரலாறு என்பதே இதுதான்.

தனி அரசர்களுடைய வரலாற்றை எழுதுவதைக் காட்டிலும் மக்களுடைய வரலாற்றை எழுதுவதுதான் உண்மையான வரலாறு என்று இக்காலத்தில் அறிஞர்கள் கருதுகிறார்கள். அந்த முறையில் பார்த்தால், தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் இந்நாட்டின் பழைய வரலாற்றை எடுத்துக் கூறும் கருவூலங்களாக அமைந்துள்ளன. கிறிஸ்துநாதருக்குப் பிற்பட்ட காலத்தில் ஓர் ஊரின் ரிஜிஸ்ட்ரார் அலுவலகமாக அவ்வூரின் கோயிலே இருந்ததை அறிகிறோம். ஆவணக்களறி என்ற பெயரோடு திருக் கோயில்களிலுள்ள கல்வெட்டுக்கள் இதனை நமக்கு அறிவுறுத்துகின்றன.

உதாரணமாக, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் என்ற ஊரிலுள்ள ஒரு கல்வெட்டு அவ்வூரில் அந்நாளில் நிறுவப்பெற்ற ஆதுலர் சாலை (ஆஸ்பத்திரி)பற்றிப் பேசுகிறது. எவ்வளவு மருந்து வாங்கினார்கள்; எத்தனை பேருக்குமருத்துவம் செய்தார்கள் என்ற விவரமெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற கருவூலமாக இது அமைந்திருக்கக் காண்கிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் ஓர் ஊரில் வைக்கப்பட்டிருந்த மருத்துவசாலைபற்றிய முழு விவரங்களைத் தருகின்ற இக் கல்வெட்டு அந்நாள் தமிழ் மக்களுடைய சமுதாய வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதை நமக்கு அறிவிக்கின்ற பெரும் பொக்கிஷமாகும்.

தற்காலத்தில் ஜனநாயக ஆட்சியில் வாக்கெடுப்பு முறையின்மூலம் அரசாங்கத்தை நடத்திச் செல்லும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றோம். பஞ்சாயத்து நடத்தும் ஆட்சியாளர்களையும் இதே முறையில்தான் தேர்வு செய்கின்றோம். நம்முடைய மாவட்டத்திலுள்ள உத்தரமேரூரில் பஞ்சாயத்து ஆட்சி செய்வதற்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் அற்புதமான தேர்தல்

முறைபற்றி ஒரு கல்வெட்டில் கி. பி. 10ஆம் நூற்றுண்டிலேயே மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. அதுபற்றிய ஓவியத்தைத்தான் இந்தக் கண் காட்சியின் முகப்பில் காண்கிறோம்.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களைப் பொறுத்தமட்டில் ஒரு தனிச் சிறப்பு என்னவென்றுல், பல கல்வெட்டுக்கள் இரு மொழி கல்வெட்டுக்களாக அமைந் திருப்பதேயாகும். சமஸ்கிருதத்திலும் அதனையடுத்து அதே விஷயத்தைத் தமிழிலும் சொல்லப்பட்டிருக்கின்ற சிறப்பு தமிழ்நாட்டு கல்வெட்டுக்களுக் குத் தனி அம்சமாகும்.

அக் காலத்தில் வழங்கிவந்த இசைபற்றிய விரிவான கல்வெட்டு ஒன்று புதுக்கோட்டையை அடுத்துள்ள குடுமியாமலையில் இருந்துவருகிறது. இசையைப்பற்றி இவ்வளவு விரிவான ஒரு செய்தியைக் கல்வெட்டின்மூலம் கி. பி. 7ஆம் நூற்றுண்டில் வெளியிடும் சிறப்புத் தமிழ்நாட்டைத் தவிர, வேறு எங்கும் காண முடியாது. அவ்வளவு பழங் காலந்தொட்டு இன்றுவரை நம்முடைய மொழியும், கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் ஆற்றெழுக்கு போல் இடையில் தடையில்லாமல் நடந்துவருகின்றன என்பதை நோக்கப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது.

சென்ற நூற்றுண்டில் பிரசித்திபெற்ற 'மெக்கன்ஸி' என்ற ஆங்கிலேயர் முதன்முதலில் 'தென் இந்தியக் கோயில் கல்வெட்டுக்கள்' என்ற நூலை இத் தமிழ்நாட்டில்தான் வெளியிட்டார். மேலும் 1898ஆம் ஆண்டிலேயேகூட "Annual Reports on South Indian Epigraphy" என்ற அறிக்கைகள் தமிழ் நாட்டில் வெளியிடப்பெற்றன. முதன்முதலில் இதனைச் செய்தவர் 'உல்ட்ஸ்' (Hultzsch) என்பவரேயாவர்.

இந்நாட்டில் கிடைக்கும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளைத் தனிப் பட்ட முறையில் வெளியிடுவதற்கு இதுவரை தக்க முயற்சி எடுக்கப்பட வில்லை. அக் குறையைப் போக்குவதற்கு இப்போது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் ஒரு சிறு அச்சுக்கூடத்தை நிர்மாணித்து வேலையைத் தொடங்குகிறோம். இதன் பயனுக இதுவரை வெளிவராத இருக் கின்ற கல்வெட்டுக்கள் மிக விரைவில் வெளியாகும் என்று நம்புகிறேன். இக் கல்வெட்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கவும் இக் கண் காட்சியைத் திறந்து வைக்கவும் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய பழைய வரலாற்றை எடுத்துக் கூறும் கண்ணுடி போல் அமைந் துள்ள கல்வெட்டுக்களை மேலும் மேலும் ஆராய்வது மிகமிக முக்கியமான ஒரு பகுதியாகும். அத்துறையில் இந்த இலாகா இதுபோன்ற கருத்தரங்குகளைக் கூட்டி மேலும் மேலும் நல்ல பணி செய்யும் என்று நம்புகிறேன்.

OBSERVATIONS OF

Prof. K. A. NILAKANTA SASTRI

I thank the organisers of the Seminar for kindly inviting me to preside over the section on Tamil Brahmi Inscriptions.

I am glad that the Government of Madras have come forward to give a fillip to the study of Inscriptions of Tamil Nad. I have no doubt that this seminar will focus the attention of the public, on the importance of Epigraphical research as a source, for proper understanding and appreciation of our history and culture. Of the paper, presented before the section on Tamil-Brahmi inscriptions, the paper by Sri Saw. Ganesan, was the least controversial of all. While focussing our attention on some of the salient features of ancient Tamil script particularly its relation to early Tamil literature, Sri Ganesan has left most of the questions open for further research. Dr. Mahalingam's excavation at Uraiyur has yielded a pot-sherd with ancient inscription which throws interesting light which is of great interest. Sri Iravatham Mahadevan has been working enthusiastically at the cave inscriptions of Tamil Nad for over 7 years now and has decipherd most of the inscriptions. Though some of his readings may need rechecking, his studies on the whole have been highly rewarding and has given a fillip to the study of cave inscriptions of the Tamil country. I must compliment the organisers of this seminar particularly our young friend Sri. Nagaswamy, for bringing together erudite scholars in the field and making this a grand success.

INSCRIPTIONS AND THE HISTORY OF TAMIL LANGUAGE

Prof. **T. P. MEENAKSHISUNDARANAR,**
Vice-Chancellor, Madurai University

Dr. Filliozat and friends,

As it is already late and as there are many other papers to be discussed in this group, I do not want to take up much of your time. I have already explained my views on the importance of inscriptions in the study of the history of Tamil language in various publications of mine. I must refer to my latest work on the history of Tamil language published by the Deccan College, Poona. Just by way of an example let me illustrate the importance of inscriptions in the study of their history. There is the well known law of Dr. Caldwell, the law of convertibility of surds into sonants in the middle of a word except when not preceded by another plosive and especially when preceded by a nasal. This he calls the characteristic feature of the Dravidian sound system. It is very difficult to believe that a sound law can exist without occupying only a definite portion of the space-time continuum i. e. a sound law can be proved only within a limited area or within a limited time period. How then to examine the truth of Dr. Caldwell's rule? There is also the question whether the voiced plosives like g, j, d, b, etc., were phonemes in the Dravidian or Tamil language. Our Tamil alphabet cannot reveal any sound change. We write both the voiced and voiceless plosives alike. The phonetic value therefore has to be determined otherwise. It is here the inscriptions throw a flood of light because some of them are bilinguals and write the proper names in the grantha script which unlike Tamil has separate scripts for voiced and voiceless sounds e. g. g. is written differently from k and so on. It is interesting to note that even after the nasal the voiceless plosives were found in such enscuphess, thus disproving Dr. Caldwell. There is also the problem of the original phonetic value of what we now call a trilled r. *Perunarkilli* is written as *Perunatkilli* which shows this phoneme as a voiceless plosive.

Our literary classics do not give any glimpse into the history of the language. Many archaic forms still continue to live in that glorious museum. It is only when you study the colloquial language that you can justify the very conception of a history of a language. The inscriptions form the greatest source of the history of Tamil language changing from century to century. The inscriptions represent the language spoken to and as heard by the authors of the inscriptions. We find even as early as the 14th century i and e with a *y* on glide. Earlier final í was pronounced probably as a diphthong with an off-glide of a y.

Not only are the phonetics and phonemics classified by the study of these inscriptions, the morphology and syntax are also better explained since these are also going on changing. Instead of case signs we get perephrastic constructions. We actually trace through the inscriptions the development of the honorific language. We also get a picture of the legalistic terms and idioms. Look at the new viyankol "*kotukka-k-kataven aakavum*". As I have already discussed these at length I do not propose to take up your valuable time.

AN INTERESTING AWARD

(13th Century)

K. R. VENKATARAMAN

Tirumayam (Tirumeyyam or Satyakshetra) is a taluk head-quarters in the Tiruchirapalli district, formerly in the Pudukottai State. The principal landmark in this town is a hill, on the south face of which are two early Pandyan cave temples, one dedicated to Siva and the other to Vishnu as Seshasaayee. On the rock face is an inscription, in duplicate (numbered as 340 and 341 in the list of *Inscriptions in the Pudukkottai State*), dated in the seventh year of Maravarman Sundara Pandya II (acc. 1238), corresponding to A. D. 1245; the astronomical details are Rishabha, Śukla 10, Tamil date 13, Sunday, constellation Uttiram. It records the findings of a grand tribunal presided over by the Hoysala Dandanayaka, Appanna, a brother-in-law of Dandanayaka Ravi Deva, who had conquered the territory for his sovereign Vira Somesvara (acc. 1233–4). Somesvara, and before him his father, ruled over a considerable territory in the Chola country with their capital at Kannanur, some nine miles north of Tiruchirapalli. The Hoysalas maintained their rule and prestige by holding the balance of power between the Cholas and the Pandyas. The Hoysala army made an incursion into the Pandya country and captured Tirumayam. Appanna Dandanayaka was in administrative charge of this occupied territory.

The matter for investigation arose out of a serious dispute between the priests of the two temples, with the result that daily worship in both of them was suspended. The Dandanayaka convened a court of inquiry consisting of the representatives of the *nāḍus*, *nagarams*, *ūrs*, the *arayars* who administered the *nāḍus*, *samaya-mantris*, *Rudramahēśvaras* of the *nādu*, Irevana Mudaliyar, Picca Mudaliyar, the superintendent of the temples, the Sri Vaishnavas and Sri Mahesvaras of Tirumayam, the Sri Rudramahesvaras of the temple of Tirumalai nadu, Tirukodumkunram (modern Piranmalai, Ramanathapuram district) and Bharadvaji Narayanan, also called Sri Kumara Bhattan Udaiyar Tiruppanatatar, 'the

propounder of Vaishnava lore' in the 18 mandalas attached to Tirukkottiyur in Keralasingavalanadu, (also in Ramanathapuram district).

After a careful scrutiny of the accounts, the tribunal made the following award: The net produce of the temple lands, after payment of all revenue dues, was divided between the Siva and Vishnu temples in the ratio of 2 : 3; the *devadanam* and *tiruviḍaiyāṭṭam* lands were so redistributed that no plot belonging to one temple should be surrounded by the lands of the other. It was ordered that a partition wall of a width of one cubit according to the carpenter's standard yard-measurment should be put up at a specified place separating the two shrines, each party contributing its share of the expenses in proportion to the taxes that it paid. The pool on the extreme side of the Vishnu shrine was allotted to it with the proviso that the water should be baled out and that any Saivite or Vaishnavite idol found in it was to be installed in the proper temple and all other valuable finds were to be divided between the parties in proportion to the taxes that each paid. The well inside the Siva temple was its property and a similar appropriation of anything found when baling out the water was ordered. The house sites adjoining the temples and the lands and gardens that they held in common were apportioned between the Saivites and Vaishnavites, and all lands that had been forfeited to the community in consequence of their owners' default in payment of taxes were assigned to both the temples with the stipulation that they should enjoy the produce in equal shares. Provision was made for the separate remuneration of drummers in the two temples. An odd clause in the award was that the old inscriptions recording prior grants superseded by the award be obliterated, and all other inscriptions pertaining to one temple but found in the other were to be copied and reinscribed in the proper temple. The inscriptions thus obliterated included one 'in an unknown script and language'. Violation of this settlement was made punishable with a heavy cash fine payable to the king.

Then follow the description of lands and the names of the witnesses who signed in the presence of the Dandanayaka.

Nāḍu is the territorial assembly; *nagaram*, the assembly of merchants, and *ūr*, of the village. *Samaya-mantris* (lit. 'advisers in the *Samaya lore*') were men proficient in the religious texts of the persuasion to which the particular community belonged. The principal *samaya-mantri* in the royal court was designated the Svami Devar, and, as several inscriptions tell us, he belonged to one of the branches of the *Gōlaki* or *Lakshādhyayi santanams*, some of whom were known as the *Narpatteṇṇayirattavar* (the '48,000'), all adepts in Saiva Siddhanta. The general body of Saivites, who exercised control over the affairs, including rituals, of Siva temples constituted the Rudra Mahesvaras. They were recruited

both from the laity and the priesthood. Their opposite numbers in Vishnu temples constituted the Sri Vaishnavas.

Irevana Mudaliyār (not Iravana as has been wrongly printed in the published text), was called after the famous Revana Siddha, a great Saivite leader born in Kollipak in the Deccan. *Mudaliyār*, like *Pillai* and *Uḍayar*, was an honorific title of men of eminence. Revana is described in the record as *nallatariyum perumāl*,—'the puissant one who knew the dharma' (lit. 'what was good').

Piranmalai (Kodumkunram) was one of the ancient cities of renown situated on the old highway from Uraiyur (Tiruchirapalli) to Madurai. It was an important commercial mart of the great merchant and trade guild, the *nāna dēśiya tiśai-āyirattuaiññūṟṟuvar* (the '500'). It had several Saiva monasteries, some endowed by the '500', with affiliated institutions distributed over this territory. On the Vaishnava side Tirukkottiyur was equally renowned.

The terminal ends of the separating wall that was ordered to be raised as a partition between the two temples were indicated by stones bearing the figures of a trident (tirusulam) and a discus (tiruvali), emblems respectively of the Saiva and Vaishnava sects. Though *devadanam* signified temple lands in general, the lands of Vishnu temples were referred to in the later inscriptions as *tiruviḍaiyāṭṭam*.

It was not a sense of loyalty to his king that prompted the scribe to date the record in the regnal years of the Pandya king. The *de facto* authority over the conquered territory was exercised by the Hoysalas, while at the same time the *de jure* sovereignty of the Pandya was not disputed. Somesvara was too astute a diplomat openly to antagonise the sentiments of the people of the country.

The award was an example of moral justice-of Equity-rather than an application of a definite principle of Law. It is well to recall that except in cases of mismanagement, embezzlement of funds and the like, changes in the affairs of temples were not made solely by executive orders. The Mahesvaras or the Sri Vaishnavas were consulted before orders were passed. They were the repositories of the Agamic lore, and they alone could advise on the maintenance of the *sampradāya* both in rituals and in the general administration of the temples.

It is rather disappointing that previous inscriptions of grants that were superseded by this grant were ordered to be wiped out. It might have simplified the revenue administration, but to the student of history the obliteration of what might give a clue to palaeography and contemporary events and persons is a loss indeed. Unfortunate again is the obliteration of the inscription described as one in an 'unknown language and script'. From fragments still left we can easily make out that it

was a remarkable treatise in music. We are able to read such bits as *Sa (dja), gāndara, dhaiva (ta)*. The inscription must have contained notations that could be played on the stringed instrument *Parivādini*. A few lines in a mutilated Tamil inscription just above mentions that Gunasena had authoritatively propounded this treatise (*pramanañceivitta*). Gunasena, who figures in several inscriptions in the Pandya country and elsewhere, was obviously one of those Jain monks, who, notwithstanding their austere celibacy, cultivated the fine arts, particularly music, as several inscriptions and literary references would testify. I had occasion to dwell on this in a paper that I once read before the Archaeological Society. It is surprising indeed that the Pallava grantha script was so completely forgotten as to make it unrecognisable in the land of its origin within four centuries of the disappearance of Pallava power, while it continued to influence for a longer period the scripts adopted in the countries of the Far East.

திருக்கோயில்களும் கல்வெட்டுக்களும்

பேராசிரியர் : பாலூர், கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.
(தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.)

கல்வெட்டு வழியாகப் பல அரிய குறிப்புக்களை உணர்த்தும் முறை இன்று நேற்றுத் தோன்றியதன்று. இது தமிழகத்தில் மிகப் பழமையான முறைகளில் ஒன்றாகும். தொல்காப்பியம் மிகத் தொன்மையானது. இது கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறாண்டுகட்கு முற்பட்டது. இதில் நடுகல் என்னும் தொடர் வருகிறது. இந்த நடுகல்லில் இறந்தவர்களின் சிறப்பு இயல்புகள் பொறிக்கப்பட்டன. அதாவது செதுக்கப்பட்ட இதனைப் "பெயர் பொறித்து இனி நட்டனரே கல்லும்" என்னும் புறநானூற்று அடியாலும், "ஆடவர் பீடும் பெயரும் எழுதி அதர்தொறும் பீலிசூட்டிய பிறங்கு நிலை நடுகல்" என்று குறிப்பிடப்படும் அகநானூற்று நூல்வழியாகவும், "அவன் பெயர் நல் இசைப் பொறித்துக் கவின்பெறக் கல்நாட் டின்று" என்ற புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலாலும் நன்கு தெளியலாம். இந்த முறையின் வளர்ச்சியே கல்வெட்டாகவும், செப்புப் பட்டயங்களாகவும் அமைந்தது. கல்லின் மீதோ, செப்புப் பட்டயங்களின் மீதோ எழுதினமைக்குக் காரணம் அவை எளிதில் அழியாது இருத்தலின் பொருட்டே ஆகும். இது குறித்தே "கல்மேல் எழுத்துப்போல் காணுமே" என்றனர் ஔவையார். மேலும், இக் கருத்தை வலியுறுத்தியே 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்றும் கூறிச் சென்றனர். கல்வெட்டுக் கருத்துக்களைச் செப்பேட்டில் எழுதி வைத்தமைக்குக் காரணம், அச் செப்பேடுகள் மூல எழுத்தாக (Original) இருக்கவேண்டும் என்பதற்காக ஆகும் இதனைக் கல்வெட்டில் காணப்படும் 'செம்பிலும் சிலையிலும் வெட்டி' எனவரும் தொடரால் நன்கு உணரலாம். கல்வெட்டினைச் சிலா லேகை என்றும் கூறுவர். கல்வெட்டுக்களைப் பாதுகாத்து வைப்பதில் முற்காலம் மிக்க விழிப்பாக இருந்தது. அடிக்கடி கல்வெட்டு எழுத்துக்கள் மறைந்துபோகாது இருக்கும்பொருட்டு எண்ணெய் பூசி வந்தனர், பழைய கோவில்களைப் புதிதாகக் கட்டி அமைக்கும்போதும் அங்குள்ள கல்வெட்டுக் கற்களை நன்கு பாதுகாத்து அவற்றில் அமைந்த கல்வெட்டு எழுத்துக்களைப் புதிய கற்களில், ஒன்றையும் விடாமல் பெயர்த்துப் பொறிப்பர். இவ்வாறு செய்தனர் என்பது "முன் கல்வெட்டில் கண்டபடி" என்று கல்வெட்டில் குறித்திருப்பது கொண்டு தெளியலாம். இங்ஙனம் இருந்தும் இக்காலத்தில் கோவில் கல்வெட்டுக்களைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாது, அவற்றின்மீது சுண்ணும்பு அடித்து மறைத்துவிடுகின்றனர். அல்லது

அக் கல்வெட்டுக் கற்களை எடுத்து எறிந்துவிட்டு வெறும் புதுக் கற்களை அமைத்து விடுகின்றனர். அந்தோ! என்னே அறியாமை!

கல்வெட்டுக்களின் மூலம் பற்பல அரிய கருத்துக்களை உணர்கின்றோம்.

யாப்பருங்கலக்காரிகை என்பது ஓர் இலக்கண நூல். இதன் ஆசிரியரை அமுதசாகரர் என்று கூறிவந்தனர்; கூறிவருகின்றனர். ஆனால், அவரைப் பற்றிக் கூறும் பாயிரப் பாடலில் அவர் "அளப்பரும் கடற்பெயர் அருந்தவத் தோனே" என்று குறிக்கப்பட்டுள்ளார். அளப்பரும் என்னும் தொடரின் பொருள் அமிதம் என்பது. இந்தக் கருத்தில்தான் மாயூரம் தாலுக்காவில் உள்ள திருநீடூர்ச் சிவன் கோவில் தென் சுவரில் காணப்படும் கல்வெட்டுப் பாடலில் "தண்டமிழ் அமித சாகர முனியை" என வருகின்றது. இதனால் இப் புலவர் பெயர் அமிதசாகரர் என்பது புலப்படுகிறது. இந்த உண்மையை அறிவதற்குக் கல்வெட்டுத்தானே துணைசெய்கிறது? இன்னோரன்ன அரிய குறிப்புக்கள் பலவற்றை அறியக் கல்வெட்டுப் பெருந்துணை செய்கின்றது.

சிதம்பரத்தில் முருகப் பெருமானின் தனிக் கோவிலுக்கு அருகில் ஒரு சிறு கோவில் உள்ளது. இதில் ஒன்பது லிங்கங்கள் உள்ளன. இதனால் இதனை நவலிங்க ஆலயம் என்பர். இத்துடன் இன்றி நவக்கிரகங்கள் பூசித்த ஒன்பது இலிங்கங்கள் இவை என்றும் கூறுவர். ஆனால், கல்வெட்டின் வழி ஆராயும்போது, இது திருத்தொண்டத் தொகையில் கூறப்பெறும் ஒன்பது தொகை அடியாரை நினைவூட்டும் நவ (ஒன்பது) லிங்கங்கள் ஆகும். இது குறித்தே கல்வெட்டில் இது திருத்தொண்டர் தொகை ஈச்சுரம் எனப் பட்டது. சிதம்பரத்தின் பழைய பெயர் (கல்வெட்டுப் பெயர்) திருச்சிற் றம்பலம் என்பது. இங்குள்ள விநாயகர் இதுபோது முக்குறுணி விநாயகர் எனப்படுகிறார். சாசனப்படி இவர் பெயர் முகக் கட்டண விநாயகர் என் பது. இது நாளடைவில் முக்கணம் ஆகி, பின் முக்குணி ஆகி அதன்பின் முக்குறுணி ஆயிற்று. முக்குறுணி எனும் பெயர் ஏற்பட்டதும், முக்குறுணி நெல் அளந்து அரிசியாக்கி அதனால் ஒரே கொழுக்கட்டை செய்து இது போதும் படைத்து வருகின்றனர். இவ்வாறு படைப்பதனால் இவரை முக் குறுணி விநாயகர் என்றே கூறிவிட்டனர். சிதம்பரத்தின் தெற்கு, கிழக்கு, மேற்கு மதில்கள் சோழ அரசர்களால் கட்டப்பட்டவை என்பதும், வடக்கு மதில் இறைவனால் கட்டப்பட்டது என்பதும் அறியவருகின்றன. வடக்கு மதிலைக் கல்வெட்டு சொக்கசீயம் என்று கூறும்.

இறைவிக்கு எங்கும் ஆடி மாதமே பூர விழா நடத்தப்படும். இது குறித்தே இது ஆடிப் பூரம் எனப்படுகிறது. ஆனால், சிதம்பரத்தில் ஐப்பசி மாதம் பூர விழா நடத்தப்பட்டது. இந்த விழாவில் திருப்புதியது விழா என்னும் பெயரில் ஒரு விழா நடத்தப்பட்டது. அவ் விழாவில் அம்மனுக்கு (சிவகாமிக்கு) வெள் ஆடை அணிந்து அவ்வாடையில் நவதான்ய முளைகளைக் கட்டுவர். இவ்வாறு செய்வது நாட்டு வளர்ச்சியின் நன்மைக்கு ஆகும். இதனைத் திருப்பாலி விழா என்றும் கூறினர்.

இறைவர்க்கு (சிதம்பர நடராசருக்கு) மாசி மாதமும் சிறப்பான விழா நடக்கும். அதுபோது திருத்தொண்டத் தொகையை விண்ணப்பம் செய்வர். சிதம்பரத்தில் சம்பந்தருக்குத் தனிக் கோவில் இருந்தது. அதற்கும் பொன் வேயப்பட்டது.

சிவனடியார்களில் ஒருவர் அதி பத்தர். அவர் செம்படவ மரபினர். அதனுல் செம்படவன் ஒருவன், இவ்வடியாரின் உருவம் ஒன்றைத் தன் செல வில் திருக்கோளிலியில் நிறுவினுன்.

பொன் வேயப்பட்ட பெருமை சிதம்பரத்திற்கே என்ருலும் பல கோவில் களிலும் பொன் வேயப்பட்ட குறிப்புக்கள் கல்வெட்டின் வழி அறியவருகின் றன. திருவாரூர் வீதிவிடங்கநாதர் கர்ப்பக் கிருகத்திற்கும், வன்மீகநாதர் கோவிலுக்கும் பொன் வேய்ந்த செய்தி தெரிய வருகின்றது. திருவீழிமிழலை யுடைய மாதேவர் விமானத்திற்கும் பொன்வேயப்பட்டது.

பெரிய புராணத்தில் கூறப்பெருத பல அரிய குறிப்புக்களைக் கல்வெட் டின் வழி அறிகின்ருேம். திருஞான சம்பந்தரின் மனைவியார் பெயர் சொக்கி யார் என்பதைத் திருப்பெருமணநல்லூர்க் கல்வெட்டின் வழியும், சுந்தரரின் தாயார் கௌதம கோத்திர ஞானசிவாசாரியார் திருமகளார் என்பதும், மனுச் சோழன் முதல் மந்திரி உபயகுலாமவன் என்பதும், மனுச்சோழன் மகன் பிரிய விருத்தன் என்பதும், திருவாரூர்க் கல்வெட்டின் வழி அறிகின்ருேம். குங் கிலியக்கலைய நாயனுர் மனைவியார் பெயர் நீலாயீ என்பதையும் உணர் கிருேம். சேக்கிழார் மனுநீதி கண்ட சோழன் வரலாற்றை விரிவாக எழுதி யுள்ளனர். அவர் இவ்வாறு எழுதுதற்குப் பெருந் துணை செய்தது திருவாரூர்க் கோயில் இரண்டாம் பிராகாரத்தின் வடப்பக்கச் சுவரில் காணப்படும் கல்வெட்டே ஆகும். திருவாரூர் தியாகேசர், சுந்தரர் பொருட்டுப் பரவை யார் திருமாளிகைக்குத் தூது சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற வீதி கல் வெட்டில் திருவடிப்போது நாறிய திருவடி வீதி எனப்பட்டது.

ஆரியக் கூத்து ஆடினுலும் காரியத்தில் கண்ணுய் இருக்கவேண்டும் என் பது ஒரு பழமொழி. இதனுல், ஆரியக் கூத்து என்னும் பெயரில் பண்டைக் காலத்தில் ஒரு கூத்து இருந்து நடத்தப்பட்டது என்பது உண்மை ஆகிறது. இந்தக் கூத்துத் திருவிடைமருதூரில் தைப்பூசத் திருவிழாவிலும், வைகாசி மாதம் திருவாதிரைத் திருநாளிலும் மூன்று நாட்கள் நடந்தது என்பது கல் வெட்டால் அறியும் செய்தி ஆகும். ஈண்டு மார்கழி மாதத் திருவாதிரை விழாவே அன்றி வைகாசி திருவாதிரை விழாவும் சிறப்பாக நடத்தப்பட்டது என்பது தெரியவருகின்றது. இவ்வூரில் நாடகப் பயிற்சி அளிக்க ஒரு நாடக சாலையே இருந்ததாகவும் தெரிகின்றது. இவ் வமைப்பு இக்காலத்திய (Dramatic Society)க்களை நினைவூட்டுகின்றதன்ருே !

தமிழக மன்னர்கள் இயற்கையை அடக்கி ஆண்டுள்ளனர். அதாவது கடலில் செல்லவும், ஆகாயத்தில் பறக்கவும் தெரிந்தவர்களாய் இருந்தனர் என்பது. இதனை ஒரு மன்னனைப்பற்றிக் கூற வரும்போது பெரும் பூ நத்தைப் பணி கொண்டவன் என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அறியவருகின் றது. பாலாற்றில் கலக்கும் ஒரு நதியின் பெயர் நுகா என்பது. வன்னியர், படைத்தலைவர்களாக இருந்தனர். இவர்களே இக்காலத்தில்:படை ஆட்சி, நாய்க்கர் எனப்படுவோர். இந்தப் பெயர்கள் இக்காலத்தில் ஒரு இனத்தா ரைக் குறிக்கும் பெயர்களாக உள்ளன. அக்காலத்தில் படையில் கலந்து கொண்டு போரிட்டவர்களைக் குறித்துவந்தன.

அந்நியர் படை எடுப்பால் கோயில்கள் பாழ்பட்டதும் உண்டு. இத னைத் திருமருதந்துறைக் கல்வெட்டு உணர்த்துகிறது. இந்தக் கோவில்

பத்து ஆண்டுகளாகப் பாலைவனமாக இருந்தது; இதற்குக் காரணம் ஒரிசா தேசத்துக் கஜபதியின் படை எடுப்பே ஆகும்.

சேர சோழ பாண்டியர்கள் தனித்தனி நாட்டு மன்னர்களேயானாலும் ஒருவர்க்கொருவர் உறவுடையவர்களாகவே இருந்தனர். இதனை முதலில் இராஜராஜ சோழன், பாண்டியன் மகளான அருமொழி என்பாளை மணந்ததனுலும், முதல் பராந்தகன் தேவியான கோக்கிழான் அடிகள் சேரனது திருமகளாக இருந்ததனுலும் அறிந்துகொள்ளலாம்.

பழங்காலத்தில் தேவாரம் ஓதுபவர்கள் சிவதீட்சை பெற்றிருக்கவேண்டும். திருப்பாம்புரத்தில் ஒரு பெரும் பஞ்சம் தோன்றியது. அப் பஞ்சத்தில் ஒரு பொன்னுக்கு மூன்று படி நெல் விற்கப்பட்டது. ஒரு வேளாளன் பஞ்சத்தின் கொடுமையால் தன் இரு பெண்களை நாலு பொன்னுக்குக் கோவிலுக்கு விற்றனன்.

இக்காலத்தில் அறிந்திராத நகைகள் பல அக்காலத்தில் இருந்தன. அவற்றுள் இரண்டு உழுத்து, நட்டல் என்பன. பாத்திரங்களில் சில தாலம், ஒட்டுட்டி என்னும் பெயருடன் இருந்தன.

நம் தமிழக மன்னர்கள் ஒட்டகச் சேனையையும் உடையவராய் இருந்தனர். கடல் படையும் கொண்டிருந்தனர். 'அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி' என்று கல்வெட்டில் வருதல் கொண்டு தெளியலாம்.

முத்தநாதன் என்பவன் மெய்ப்பொருள் நாயனுரைக் கத்தியால் குத்திவிட்டனன். அதனை உணர்ந்த நாயனுரின் மெய்க்காவலாளனுன தத்தன் என்பான் முத்தநாதனைக் கொல்ல வாளை ஓச்சினன். அந்த நிலையில் மெய்ப்பொருளார் "தத்தா நமர்" என்று கூறித் தடுத்தார். இவ்வாறு பெரிய புராணம் கூறுகிறது. இங்ஙனம் கூறுதற்கு ஆதாரம் கல்வெட்டே ஆகும். இதனை இராசராசன் காலத்துக் கல்வெட்டின் மூலம் உணர்கின்ருேம். "தத்தா நமரே காண்" என்பது கல்வெட்டுத் தொடர்

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழிகளின் வரிகள் திருமால்பேறு எனும் தலத்தின் உட்சுவரில் காணப்படுகின்றன. இதுபோது திருக்கழுக்குன்றத்தில் இழ்க்கோவிலாகிய பக்தவத்சலர் ஆலயம் மலைமேல் இருந்த குறிப்புக்காணப்படுகிறது. கோவிலில் பூசை செய்யும் குருக்கள் அக்காலத்தில் பட்டுடையார் எனத் தமிழ்ப் பெயரால் அழைக்கப்பட்டனர். கோவிலில் பூசை செய்பவர்கள் சிறப்புடையவர்கள் ஆயினும், திருட்டுத் தொழில் உடையவராயின் அவர்களைக் கோவிலுக்குள் நுழையாதவாறு தடுத்தனர். இதனைத் திருப்பந்தணை நல்லூர்க் கல்வெட்டால் அறியலாம். உத்தண்ட வேலாயுத பாரதி என்பவர் திருவதிகை நாதர்மீது ஒரு கலம்பகம் பாடியதாகவும் அறிகிருேம். ஒரு நாணயம் 'ஆகவராமன் பணம்' என வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது.

தேவாரம் விண்ணப்பம் செய்தவர்கட்கு இராசராச பிச்சன் என்னும் பட்டம் சூட்டப்பட்டது. கோவில் காரியம் செய்பவர்களை ஸ்ரீகாரியம் என்ற பெயரால் குறித்துவந்தனர். கோவிலுக்குப் பொன்வேய்ந்த பெருமை அரசர்கட்கே அன்றிப் பொதுமக்களுக்கும் இருந்துவந்தது. கூத்தர் காளிங்கராயர் என்பவரும் பொன்வேய்ந் துள்ளனர்.

சேரி என்னும் சொல் பழங்காலத்தில் மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடத்தைக் குறித்து வந்தது. அந்தணர் வாழும் சேரி பார்ப்பனச் சேரி எனப்பட்

டது. வர்த்தமானச் சேரி என்பது தேவர் அடியார் வாழ்ந்த இடமாகும். ஆரூர் தேவர் அடியார்களைத் தளிச்சேரிப் பெண்டிர் என்றும் கூறிவந்தனர்.

கோவில் உரிமை, கோவில் புலம் என்றும், பசுக்களைக் காப்பவர்களைச் சுரபி மன்றாடிகள் என்றும் அழைத்தனர்; கோவில் விசாரணை மாடாபத்தியம் எனப்பட்டது.

சாத்தனார் என்பவர் ஒரு புலவர். இவர் மணிமேகலை ஆசிரியரினும் வேறானவர். இவர் சாத்தனார் முத்தமிழ் ஆசிரியர் எனப்பட்டார். இவர் கச்சூர் கடிகையில் (ஊர்ச் சபை) ஓர் உறுப்பினராக இருந்தவர். இக்காலத்தில் சட்டசபைகளில் ஆசிரியர் தொகுதிக்கு ஓர் உறுப்பினர் அமைவது போன்ற அமைப்பை இப் புலவர் ஏற்றார் என்பது தெரிகிறது.

கோவில் நிலங்கள் விற்கப்படுமானல், சண்டேசுரர் பெயரால் விற்கப்பட்டன. நிலங்கள் கோவிலுக்குக் கொடுக்கப்பட்டாலும் சண்டேசுவரர் பெயரால்தான் கொடுக்கப்பட்டன. இம் முறை பெரிதும் சிதம்பரத்தில் கையாளப்பட்டது.

சில பழக்கவழக்கங்களும் கல்வெட்டுக்களால் அறியவருகின்றன. திருபட்டீச்சுரத்தில் வாழ்பவர் கலியாண காலங்களில் பட்டுநூல்காரர்கட்கு முதல் தாம்பூலம் அளிப்பதா? அன்றிச் செட்டியார் மரபினர்கட்கு முதல் தாம்பூலம் அளிப்பதா என்னும் சிக்கல் ஏற்படும்போது, கோயில் அம்மன் மடியில் வெற்றிலையை வைத்துவிடுவர். அதன்பின் இரு மரபினரும் சென்று எடுத்துக்கொள்வர்.

பிராம்மணர்கள் சேனபதிகளாகவும் இருந்திருக்கின்றனர். அவ்வாறு சேனதிபதியாக இருந்த பிராமணர் ஜயம்கொண்ட சோழ பிரமாதிராஜன் என்பவர். உடுக்கை வாசித்த பிராமணர்களும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். உடுக்கை விஜ்ஜாதிரன் என்பவர் அத்தகையவர். விக்கிரம சோழன்மீது ஒட்டக்கூத்தர் ஒரு பரணி பாடி இருப்பதை அறிகிறோம். மக்கள் உருவங்கள் பிரதிமங்கள் என்றும்; தெய்வ உருவங்கள் திருமேனி என்றும் குறிக்கப்பட்டன. இனத்தை இடைவிடாமல் பெருக்கும் ஆடுமாடுகள், சாவா மூவாப் பேராடுகள், மாடுகள் எனப்பட்டன. இக்காலத்தில் நாவுக்கரசர் ஆளுடைய அரசுகள் என்றும், மாணிக்கவாசகர் ஆளுடைய அடிகள் என்றும் கூறப்படுகின்றனர். ஆனல் ஆளுடைய என்னும் அடைகொடுத்துக் குறிப்பிடப்பட்டவர்கள் (கல்வெட்டின்படி) திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்திகளுமே ஆவர்.

திருநல்லூரில் வழக்குவென்ற மண்டபம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. இவ்வூரின் ஆலயச் சின்னங்களில் ஒன்று "பிச்சன் என்று பாடச் சொன்னன்" என்னும் பெயரில் இருந்துளது. இவ் விரண்டு குறிப்புக்கள் சுந்தரரது வரலாற்றை ஒட்டிய குறிப்புக்களாகும். இத்துடன் இன்றி ஆலாலசுந்தரப் பெருந்தகை தடுத்தாட்கொண்ட நல்லூர் என்ற பெயருடன் திருவெண்ணெய்நல்லூர் விளங்கியதாகவும் திருவெண்ணெய்நல்லூர்க் கல்வெட்டால் அறிகிறோம்.

அக்காலத்தில் அளக்கும் கருவிகட்கும் நிறுக்கும் கருவிகட்கும் அமைந்த பெயர்கள் கடவுளிடத்தும், அடியார்களிடத்தும், அரசர்களிடத்தும் மக்கள் கொண்ட பற்றை நமக்கு அறிவித்துக்கொண்டுள்ளன.

நெய் அளக்கும் கருவி திருவெண்காட்டன் நாழி எனவும், திருமுதுகுன்ற கல்வெட்டு நெய்யளக்கும் கருவிக்குத் தேவாசிரியன் உழக்கு எனவும் (தேவாசிரியன் என்னும் பெயரிய மண்டபம் திருவாரூரில் உள்ளது. இங்கு அடியார்கள் கூடி இருப்பர்) நெல் அளக்கும் கருவி தேவாசிரியன் மரக்கால் எனவும், திருவீழிமிழலை கல்வெட்டில் திருஞானசம்பந்தர் நாழி எனவும், ஆடவல்லான் மரக்கால் அதிகை நாயகன் நாழி எனவும் வழங்கப்பட்டு வந்ததை அறியவும். காசுக் கற்களை நிறுக்கும் எடைக்கல், தட்சணமேரு விடங்கர் காசுக் கல் எனவும், பொன்னின் நிறையை அளக்கும் கல் ஆடவல்லான் கல் எனவும் குறிக்கப்பட்டன. அரசனது அரண்மனையில் நெல் அளக்கும் கருவி இராசகேசரி மரக்கால், அருமொழித் தேவர் மரக்கால் எனப்பட்டது.

திருக்கோவில்களைப்பற்றிய பல அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. முன்னர் இறைவனைப்பற்றி அறிவோமாக. ஆழ்வார் என்பது இக்காலத்தில் வைஷ்ணவ அடியார்களைக் குறிக்கும் சொல்லாக நின்று நிலவுகிறது. அக்காலத்தில் சிறப்பாகச் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்பட்டது. இதற்குச் சான்றாகத் திருவலஞ்சுழி ஆழ்வார், திருவெறும்பியூர் ஆழ்வார், திருப்பாதிரிப்புலியூர் ஆழ்வார், திருக்கடை ஞாழல் ஆழ்வார், வேள்விக்குடி ஆழ்வார், திருவாரூர் அறநெறி ஆழ்வார் என்பனவற்றைக் காட்டலாம்.

திருமாலுக்கும் ஆழ்வார் என்னும் பெயர் இருந்திருக்கிறது. திருமணஞ்சேரி கல்வெட்டில் திருமால் சோழ விண்ணகர ஆழ்வார் எனப்பட்டார் காமகோடி விண்ணகர ஆழ்வார் என்னும் பெயருடனும் திருமால் திகழ்ந்தனர்.

முருகப் பெருமான், கலியுக ராமன் பிள்ளையார் எனும் பெயருடையராய் இருந்தார் என்பதைக் கல்வெட்டால் அறிகிறோம்.

திருவலம்புரம் கல்வெட்டில் இறைவியார் தடங்கண் நாச்சியார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதுவே விசாலாட்சி என்று வடமொழியில் கூறப்படுகிறது.

கல்வெட்டில் திருவாரூர்ப் பெருமான் புற்றிடம் கொண்டான் எனப்பட்டனர். ஆனால், இதுபோது வன்மீக நாதன் என வடமொழிப் பெயரால் குறிக்கப்படுகின்றார். திருவானைக்காப் பெருமானைக் கல்வெட்டுச் சிலந்தியைச் சோழனாக்கினான் என்றும், என் ஆனைக் கன்று என்றும் குறிப்பிடுகின்றது. இந்த என்னானைக் கன்று என்னும் பெயரை அப்பர் தம் திருவாக்கில் ஆண்டுள்ளனர்.

சிதம்பர நடராசப் பெருமான் தட்சிணமேருவிடங்கர் என்றும், திருநாவலூர் நடராசர் ஆடி அருளுகிற கூத்தன் என்றும் கூறப்படுகின்றார்.

திருநாவுக்கரசர் குளிச்செழுந்த நாயனார் எனப்பட்டனர். இதனைத் திருப்புகலூர் கல்வெட்டுக் கொண்டு தெளிக.

கல்வெட்டின் வழி மக்கள் தேவாரத் திருமுறையினிடத்துக் கொண்ட பற்றும் அடியார்களிடத்தில் வைத்த அன்பும் தெரியவருகின்றன.

சிலர் திருமுறையில் வரும் தொடர்களையே பெயராகக்கொண் டிருந்தனர். சீருடைக் கழல் என்பது ஒருவர் பெயர். இத்தொடர் திருவாசகத்தில் வரும் தொடர் ஆகும். வேறு ஒருவர் எடுத்த பாதம் என்ற பெயர் தாங்கி இருந்தனர். இது அப்பர் தேவாரத்தில் வரும் தொடராகும்.

தேவாரம் ஓதுவதற்கென்றே ஒரு தனி இடம் இருந்தது. இது தேவாரச் சுற்றுக் கல்லூரி எனப்பட்டது. தேவாரத் திருமுறைகளைச் சேர்த்துவைத் துக் காப்பாற்றிய இடம் திருக்கை கோட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நன்கு கண்காணிக்க நிலங்களும் விடப்பட்டன. திருத்தொண்டத் தொகைக்குத் தனிச்சிறப்பு இருந்தது என்பது பல்லாற்றாலும் தெரியவரு கின்றது. தில்லையில் மாசி விழாவில் திருத்தொண்டத் தொகை விண்ணப் பம் செய்யப்பட்டது. திருப்புகலூரில் திருத்தொண்டத் தொகை மடம் இருந்தது. திருக்கருவூர் ஆனிலைக் கல்வெட்டின் மூலம் திருத்தொண்டத் தொகை மங்கலம் என்று ஓர் ஊருக்குப் பெயர் இட்டதை அறியலாம்.

திருவிஜயமங்கைக் கல்வெட்டு ''வாழ்க அந்தணர்'' என்று தொடங்கும் திருஞான சம்பந்தர் திருவாக்கையே முதலாகக் கொண்டு தொடங்குகிறது. திருமுறைகளை ஓதுவாரைத் தேவாரத்துக்குத் திருப்பதியம் பாடும் பெரியான் என்று போற்றியுள்ளனர். ஈண்டுத் தேவாரத்துக்கு என்பதன் பொருள், வழிபாட்டிற்கு என்பதாம்.

ஒருவர் குங்கிலியக் கலயர் என்றே பெயர் பூண்டு தமக்கு அப்பெய ருடைய நாயனாரிடம் கொண்ட அன்பை விளக்கினர்.

ஆலாலசுந்தரர் பெருந்தெரு என்றும், தடுத்தாட்கொண்ட நல்லூர் என்றும் பெயர்கள் இருந்தமை திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டின் வழி அறிகின்றோம். திருவதிகை வீரட்டானப் பதியில் திருநாவுக்கரசர் வீதி என்ற பெயரில் ஒரு தெரு இருந்தது. நாயன்மார்களின் பெயரால் பல மடங்கள் இருந்தன. அவையே வாகீசர் மடம், சுந்தரர் திருமடம், திருஞான சம்பந்தர் மடம், திருமுருகன் மடம், திருமூலர் மடம், சீராளன் திருத்தொண்டன் மடம் முதலியன. திருப்பட்டீச்சுரத்திலும் திருப்பாம்புரத்திலும் திருமூலர் மடமும், திருவீழிமிழலையில் மாணிக்கர் மடமும் இருந்தன.

இனிக் கல்வெட்டுக்களின் மூலம் நாட்டின் ஆட்சி முறைகளைப் பற்றியும், அரச மரபினரைப் பற்றியும் சில குறிப்புக்களையும் காண்போமாக.

சோழ அரசர்கள் சைவப் பற்றில் சிறந்து விளங்கினர். அவர்கள் தமது முடிசூட்டு விழாவினைச் சிதம்பரத்தில் நடத்திக்கொண்டனர். கோவில் களில் இறைவன் திருவுருவங்களைப் பொன்னாலேயே அமைத்திருந்தனர். திருவெண்காட்டுச் சந்திரசேகரர் திருவுருவத்தைச் செம்பியன்மாதேவியார் 4898 கழஞ்சு பொன்னால் செய்து அமைத்தனர். நடராசர், சோழர் குல தெய்வம் என்பதைக் கல்வெட்டில் வரும் "தன்குல நாயகன் தாண்டவம் பயிலும் செம்பொன் அம்பலம்" எனவரும் கல்வெட்டுத் தொடரால் அறிக. பஞ்சவன்மாதேவி என்பார் உமா சகித உருவத்தைப் பொன்னால் செய் தமைத்தனர். திருவையாற்று வீதிவிடங்கர் திருவுருவத்தை உலோகமா தேவியார் செய்து அமைத்ததாகும்.

விக்கிரமசோழன் சிதம்பரம் அம்பலத்தையும், திருமாளிகையினையும், கோபுரவாயிலையும் பொன்வேய்ந்தான் என்பது தெரிகிறது.

இராசராசன் காலத்தில் அவன் பெயரால் இரண்டு நாடகங்கள் இருந் தன. அவை இராசராச நாடகம், ராஜராஜ விஜயம் என்பன.

ஊர்ச்சபை உறுப்பினர்கள் பெருமக்கள் எனப்பட்டனர். பல குழுக்கள் நாட்டு நடப்பு முறைகளைக் கண்காணிக்க அமைக்கப்பட்டன. அரசனது

425

ஆணையை எழுதுவோன், திருமந்திர ஓலை எனப்பட்டான். அரசனது ஆணையை உணர்த்துவோன், திருவாய்க் கேள்வி எனப்பட்டான். அரச காரியம் பார்த்தவர் தில்லை அம்பலப் பல்லவரானத் திருச்சிற்றம்பல உடையார் எனப்பட்டார். இறந்த அரசனைப் புதைத்த இடம் பள்ளிப்படை எனப்பட்டது. அந்த இடத்தில் ஒரு கோவிலையும் எழுப்பினர். இஃது இக்காலத்துச் சமாதிவைக்கும் முறைபோன்றது. அரசனது முதல் வெற்றி புதுமணம் புணர்தல் எனப்பட்டது.

நாட்டில் நாட்டுப் பண்டாரம், உள்ளூர்ப் பண்டாரம் என இருவகையான பொருள் வாங்கும் இடங்கள் இருந்தன. இவை இக்காலத்தில் (Treasury) 'டிரஷரி' என்னும் அமைப்பைப் போன்றன.

கூட்டம் கூட்டுதற்கு முன்னால் தாரை ஊதி அறிவித்துக் கூட்டுவர். இதனைக் கல்வெட்டில் 'தன்மி செய்து' என்ற தொடரால் குறித்துள்ளனர்.

கோவில் சாசன முறை ஒழுங்காக நடக்கிறதா என்பதைக் கவனிக்க ஓர் அதிகாரியை ஏற்பாடு செய்துவைத்தனர். அவர் கோவில் அதிகாரி ஆவார். சிலரை ஸ்ரீ மாகேஸ்வரர் என்று குறிப்பிட்டனர். இம்முறை இக்காலத்தில் (Religious Endowment Board Commissionar) அமைந்துள்ள முறை போன்றது.

திருக்கொடுங்குன்றக் கல்வெட்டில் கண்டபடி வியாபாரிகள் சங்கம் ஒன்று இருந்ததை அறிகிறோம். இது இக்காலத்து (Chamber of Commerce) அமைப்பு முறையைப் போன்றது.

இவ்வாறு கல்வெட்டுக்களின் மூலம் பல செய்திகளை அறிகிறோம்.

RELEVANCE OF EPIGRAPHICAL EVIDENCE FROM PANCARATRA STUDIES

Professor **H. DANIEL SMITH,**
Religion Department, Syracause University (USA)

Gentlemen—

I come here seeking your help. The title of my paper is not a declaration; it is, rather, a question. I wish to learn what data epigraphical studies have of direct relevance to the field of Pancaratra studies. More specifically, I am particularly concerned with the problem or dating the individual primary documents of the Pancaratragama canon, namely the various *Saṁhitas.* By coming here before you, I am displaying by my action an underlying assumption on my part, that all fields of scholarly study are interdependent; for that reason, though I know next to nothing about epigraphy as a science, I am taking part in these colloquia because there may eventuate mutual benefits. Certainly I shall come away richer for the experience; it may also be that my concerns may possibly be of interest to some of you.

There is, of course, within the sector of Srivaishnavism adhering to the Pancaratra doctrines a traditional element to whom matters of dating the documents comprising the Pancaratragama canon are irrelevant if not irreverent. These traditionalists claim those teachings to have come through the rishis from the Lord himself; therefore the *saṁhita* texts are eternal. Our concern is with those among the Pancaratra and other communities who—quite the contrary—see those texts as historical documents, indeed as specific responses to particular needs of given times and places. To them—and to us, at least for the moment—determining the period which gave rise to a specific *saṁhita*-text leads to a deeper and richer understanding of the meaning not only of the text itself but also of the literature as a whole and of the entire system of Pancaratra thought and practice adhering to the textual admonitions.

Time does not permit here giving in detail the titles of all of the works nor their individual characteristics. But generally speaking, of the

many texts of the school extant it seems clear that some at least can be labeled "earlier" and some labeled "later". And, as with the historical analysis of any other literary documents, certain considerations lead us to these general conclusions.

On the one hand, given an individual text-let us take here as an example the respected *Iśvara- saṁhita*—the contents of the work give us certain clues. Such things as the grammar and the matter tell us it is probably no earlier than a certain period when such composition became popular and accepted, even though, by the same token, it could also be a late imitation of that earlier type. So also style can give us certain rough indications of time, or even place, of origin. But these are approximate dates at best. So, too, therefore, one is always on the alert for proper names and for revealing geographical place-names that may be indicative of dating—as for example in the *Isvarsaṁhita* again (VIII: 175b) we find the name of Sathakopa mentioned: This could indicate that the text can be no earlier than the time of the famous Alvar poet, unless, of course, the passage in question (along with other tantaliz ing hints found elsewhere, e. g., Ch. XX) is to be presumed a late-interpolation in an earlier work. Further evidence, then, for dating a *saṁhita*-text can be sought and sometimes found in passages describing how and with what a temple should be built, how icons should be fashioned how a *vaiṣṇava-bhakta* is to behave toward non-believers, etc. For such architectural, iconographical and communal details one may confidently assign dates in accordance with known structural examples of particular periods, with identifiable sculptural styles and details used in specific times, and by accepted standards of tolerance or bigotry during certain eras. Still other clues can be culled for purposes of dating a work from the spirit pervading that work as a whole—whether, for example, it is generally "prayogic" in character, or defensive against such charges; whether it is anti Vaikhanasa, or quite hospitable to its "more vaidika" counterpart within Srivaishnavism; and so forth. These things, then, on the one hand can help us in assigning an approximate date to a text from the evidence found within it.

On the other hand, we are aided in some few cases by external evidence of a text. The most obvious example here is when a Sanskrit, Tamil or other language-work cites by title or quotes an identifiable passage of a specific *saṁhita*.* Such citations should be a great help to us in setting terminal dating for a work, but the clue may not always be as helpful as it at first appears. Again take for example the

---

* Note here we are not concerned with general, references to the Pancaratra, Satvata. Ekayana. *et. al.* system or to "*agamas*" generally, but to specific titles only.

Īśvarasaṁhita. Because an *Īśvarasaṁhita* is mentioned and passages from it are quoted by Yamunacarya in his *Āgamaprāmanya*, the currently circulated 25—chapter version narrated by Narada concerning itself with various aspects of *nitya*, *naimitika* and *kāmya* worship in a temple is usually assumed to be considerably earlier than the late tenth century or early eleventh century times of Yamuna and said to be coming from about the eighth century or before (necessitating the theory that the aforementioned allusion to Sathakopa is a later interpolation). Unfortunately, however, the passages actually quoted by Yamuna cannot be found in the currently available *Īśvarasaṁhita* text. Moreover, some secondary works of the Pancaratra school, bringing together passages on particular subjects from a variety of primary texts, quote from an *Īśvarasaṁhita* that bears little resemblance to the normally accepted text of that name.* The conclusion is that there are two *Īśvarasaṁhitas*, the currently available one being later and the other, perhaps "lost" one being the work quoted by Yamuna and understandably so important to the Srivaishnava cause. As a matter of fact, once this conclusion that there are two *Īśvarasaṁhitas* is adopted a number of otherwise inexplicable contradictions and supposed "interpolations" in the currently accepted text fall into place. The point of the foregoing example is simple: the mere mention of a title, or the allusion to a Pancaratra text, is in itself not always enough to yield conclusively a reliable date for it.

Further clues coming from outside the *saṁhita*-text tradition may be found when a given Vaisnava temple following Pancaratra rules at the time is known to have celebrated in a particular year rituals of a specified type known to be recommended in detail in that particular text in question But this is the sort of data that is most likely to come to us through inscriptional evidence, and this brings me to what I have been leading up to—my concluding question.

It seems to this observer that there is a paucity of unambiguous references to specific *saṁhita* titles in epigraphs, either early or late. Indeed, the only inscription I know of that approaches in any way the mention of Pancaratra samhitas is the lengthy one at Tirumukkudal by Virarajendra, dated 1067 C. E. (Common Era); † and this only suggested that there was a curriculum in which Pancaratra and other *agamas* were included, mentioning the system by name but not revealing to us any specific titles comprising that curriculum. Moreover this inscription comes to us from a period during which we have already some knowledge as to the constitution of the Pancaratra canon; it is the period

* *Prayascittasamgrahah* (MGOML R. 3743).

† *Epigraphia Indica*, Vol. 21

prior to this—perhaps as much half a millennium before the eleventh century—that is the time when we know the least about the status of the canonical formulation, yet which must have been the era of most significant creativity within the school.*

In closing, then, I ask as plainly as possible : what evidence is there, if any, coming from inscriptions from the late 4th to the early 10th centuries that might throw light on to the chronological understanding of the composition of the *saṁhitas* of the Pancaratra canon ? The importance of the answers lies in the fact that they may well challenge the complacent assumptions made by some recent Pancaratra scholars that the "early" *saṁhitas* are easily to be assigned to the mid-third and fourth centuries.

---

* An earlier literary citation than Yamuna is, of course, Utpala Vaisnava who in his *Spandapradipika*, written perhaps a generation before Yamuna's time, mentions by name perhaps four works—including the famous title *Jayakhya*. However, the same difficulties apply in using these rather imprecise references for a sure basis in assigning dates as prevail in the dating of our example, the *Isvarasamhita*.

DATE OF PERIYALVAR FROM INSCRIPTIONS

by

A. N. KRISHNA AIYANGAR, M.A., L.T.

Vaishnava religion has a hoary antiquity as evidenced by the references in the vedas, the itihasas, the puranas etc. In the Sangam literature, the lord of the section of land named *Mullai* was Mayon or Vishnu. There are a large number of references to Mayon. Ayarkuravai mentioned in the *Silappadikaram* and *Manimekhalai* points out to Vishnu in the form of Krshna. Among the oldest of the shrines of Tirumal may be mentioned Srirangam, Tiruvengadam, Tiruvehka, Tirumalirunjolai and other places[2]. In South India, particularly, Tiruvengadam as the hill of Nediyon was an ancient accepted boundary of the Tamilnad. Tankal near Sivakasi is mentioned as the birthplace of some poets of the Sangam classics, contains a shrine of Vishnu in the standing, lying and sitting postures, and is sanctified by the hymns of Pudattalvar and others. Such a religion, greatly encouraged by the kings of the times and followed by the people at large, was in a flourishing state in the Tamil country.

In Vaishnava religious thought the Lord condescended to assume human forms as *avataras* and live among the people as an example of how to live and practise Dharma and religion, besides having given the vedas and other relevant literature to guide the people. It is stated that not having succeeded in weening the people from their mundane attractions, he sent his *nityasuris*, the divine weapons, Garuda etc. to demonstrate to the people the divine qualities of the Lord, his all merciful attitude and his many notable auspicious attributes, to live in this world as Alvars men immersed deeply in the Kalyanagunas of the Lord and whose depth of devotion to the Lord entitled them to be called as such. Ten such Alvars are accepted and they have been hailed as a fresh group of ten avataras of nitya sivas by the vaishnava acaryas, brought about by the Lord in his infinite mercy to reclaim His flock to lead a dharmic life and attain salvation.

Among these Alvars-who occupied a middle position between the *avataras* of the Lord and the appearance of the Acaryas beginning with Nathamuni, Periyalvar occupies a very important position. As the father of Koda or Andal he attained the status of being hailed as the father in-law of Sriranganatha and hence called Periya-Alvar. Since his mind was filled with thoughts of the Lord, with intense devotion, he was called Visnucitta. The Pandya Emperor who is stated to have become his disciple and honoured his teacher by a procession of Periyalvar on an elephant with all honours, round the streets of his capital, distinguished him with the title, Pattar-piran. Periyalvar, the great devotee of Vatapatrasayin of Srivilliputtur derived his descent from one Kukunda, himself a great devotee of Vishnu and of the family of Murigilkudiyar.

The task of determining the time in which Periyalvar lived has not been easy, though at present it has been possible to assign him to a period between the reigns of Rajasimha (Maravarman) and Srimara Srivallabha. In this paper I have attempted to bring out certain facts that help in approximately fixing the date of Periyalvar. No claim is however made that the final solution to the problem has been found.

In arriving at a decision on this question the internal evidence of the hymns sung by Periyalvar furnishes some clue in four places. Two of them relate to *Anikōttiyar kon Abhimānatungan Selvan* - reference to Selva Nambi the royal prohita. A third reference mentions the traditional achievements of the Pandyas of fixing the emblem of the carp on the Himalayas. [7](5 : 4 : 7) The fourth which occurs among the hymns addressed to the Lord of Tirumalirumsolai refers to a Ko Nedumaran the lord of Kudal or Madurai and a great devotee of the Lord of Tirumalirumsolai. [8](4 : 2 : 7)

Opinion has been divided as to the identity of this Ko Nedumaran. Some earlier scholars identified him with Maravarman Arikesari (670 - 700 A. D.). Other difficulties to this view cropped up, and some others preferred Parantaka Nedumsadaiyan whose devotion to Vhisnu found expression in his copper plates and the phrase *parama vaiṣhṇavan tānāki* occurred. His construction of a temple to Vishnu at Kanjivaipperur is held as referred to by Periyalvar in 2.6.2. But then, this identity has been questioned strongly on the ground that while Periyalvar has. mentioned a *Ko Nedumaran*, Parantaka Nedunjadaiyan was a Sadaiyan and not a Maran. Professor Sastri held the view that the reference of

---

7. Astronomical details contained in pasuram 13 of *Tiruppavai* of Andal வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று and the far calculated dates furnished by the late Diwan Bahadur L. D. Swamikannu Pillai are of which 731 falls in the period indicated by him.

Periyalvar to Ko Nedumaran was more probably to Srimara Srivallabha, the son and successor of Parantaka Nedumsadaiyan and himself a Maran.

The late Pandit M. Raghava Aiyangar in his *Alvarkalanilai* (p 74) suggested 690 to 775 A. D. as the probable period of the time of Periyalvar, holding him as a contemporary of Koccadaiyan Ranadhira, his son Rajasimha (Maravarman) and the latter's son Parantaka Nedumsadaiyan, thus bridging three eventful reigns of the first Pandya Empire of the line of Kadunkon. He argued that: 1. Rajasimha had the name Maran; 2. the two uttarmantrins Maran Kari and Maran Eyinan who served both Rajasimha and his son Parantaka were staunch vaishnavites; 3. Parantaka is given the epithet *parama-Vaiṣhṇavā* in his Srivaramangalam plates; 4. that Parantaka after subduing Kongu constructed a temple to Vishnu at Kanjivaypperur; this temple is referred to by Periyalvar in his pasuram 2. 6. 2 which should be taken deliberately to refer to a temple constructed by his great disciple; 5. to take over the period of Periyalvar to the time of Srimara Srivallabha which ended about 862 A. D. would bring him too near the later group of acaryas starting with Nathamuni and does not allow enough time or gap between the Alvars and the Acaryas and 6) the particular *pasuram* which mentions the name *Ko Nedumaran* and occurs in the decad on Tirumalirumsolai seems to refer to certain historical events of the time of Maravarman Rajasimha namely (a) his support of the claims of Citramaya to the Pallava throne against Nandivarman Pallavamalla—and Citramaya was the maternal uncle of Rajasimha according to Prof. Dubrueil (b) his campaigns in the north to marry the daughter of Ganga King—Bhusundari, the mother of Rajasimha's successor and son Parantaka. Thus interpreted the pasurams contain certain allusions mentioned by the late Pandit, that Periyalvar, when he sang his pasurams, had these events in his mind.

In his *Tamil Studies* M. Srinivasa Aiyangar averred that the village of Srivilliputtur itself could have come into existence only after 750 A. D. and concluded that Periyalvar may be placed between 840 and 915 A. D. In his scheme of chronology the period of the Alvars was placed during 550 to 950 A. D. when temples in honour of the Hindu trinity were being constructed in the Tamil land.

The help that we receive from the inscriptions in the temples at Srivilliputtur is now being pressed into service. The earliest inscription so far discovered is that of Sadaiyan Maran Rajasimha II (905-926 A. D.) dated in the 7th year of his reign. The place where it is found is in the centre of the temple—the *sanctum sanctorum* of the shrine of Lakshminarasimha on a pillar on the proper left in the ground floor. As the other portions are walled up and closed and the main shrine of Vatapatrasayin, said to be formerly on the ground floor, is now on the first

floor, the present inscription of Sadaiyan Maran may have been inscribed when the first floor was not constructed, and the shrine of Vatapatrasayin was still on the ground floor.

The inscription registers that the Mahasabha of Villiputtur assembled and named a culvert and a channel issuing from the great tank *Parankusappereri* after the name of the local headman of Anmar-nadu Sankaran Murti Arulakki as Arulakkip-perumadai and Arulakki-p-perunkal. The tern *nam-makan* is used to indicate the local chief. It is clear that in the varying fortunes of his fight with the Cola Parantaka Srivilliputhur remained under him. This is the earliest inscription on the stone pillar in the centre of the temple.

Periyalvar, according to traditional accounts, utilised the funds which he gained at Madurai in the King's court for the construction of the temple at Srivilliputtur. Fifty years from the date of this inscriptions backwards for the completion of the temple in stone will not be too early. Assuming A. D. 907 as the beginning of Rajasimha's reign we get A. D. 857 which falls within the period of the reign of Srimara Srivallabha. Vaishnava tradition has associated only the name of Srivallabha as a contemporary king of Madurai. We do not find the names of either Rajasimha or Parantaka Nedunjadaiyan. The reference in the decade on Tirumalirunjolai mentions the words Ko Nedumaran. One has to identify this *Ko Nedumaran* with one of the Pandyan Kings among these Rajasimhas who was a Maran, or Srivallabha who was also a Maran. Parantaka, who came in between the two, being a Sadaiyan is ruled out.

The earliest Pandya inscription on record is dated A. D. 770 at Anamalai. Records of Rajasimha have not come to light so far. Among the records that have come to light there is one which gives the title *Ko Nedumaran* to Srivallabha and reads thus :

Kunnur mudal Singalam varai kudata vayamannarai
vinnur pukara vekundu verrikalaip pala vilaitta
tennavar Ko Nedumar Sendalir kon Srivallabhanin
arulal pal sirappodu Iruppaikkudi kilavanennum etc.,

The record relates to Srivallabha who having conquered all in the regions from Kunnur to Singalam bestowed the title of Iluppaikkudi Kilavan on a certain Ettisattan and that the said Kilavan repaired several tanks in the Irunjolai nadu and also built some temples and ambalams. It is dated in the 18th year of this king or about 833 A. D. Thus the force of recorded evidence seems to be in favour of Srimara Srivallabha.

If this position is accepted the period of Periyalvar's literary activity, his visit to Madurai in answer to the question of *paratattava-nirdharana* held in the king's court at Madurai, his singing the *Pallāndu* etc should

be placed in the reign of Srivallabha after 815 A. D. Periyalvar lived according to tradition for about 85 years. It appears that he was probably past middle age when he visited Madurai. Andal's life of 15 years may be placed after 815 A. D. The birth of the Alvar may have been about 760 A. D. Thus Periyalvar may be placed during the period of the reigns of Parantaka Nedumsadaiyan and Srimara Srivallabha, the two long reigns of the dynasty. Since the marriage of Andal is described in the Guruparampara as having been conducted under royal escort to Srirangam from Srivilliputtur, it will be appropriate to put the event between 820 and 840 A. D.

In the circumstances and references stated in the above paragraphs it appears to me that Periyalvar may be placed as a contemporary of Parantaka as a junior and of Srimara Srivallabha as a senior. In this connection it is worth quoting a guess of Prof. K. A. N. Sastri :

" Periyalvar refers to a Pandya king Nedumaran in the lines. All that we can infer is that if this Nedumaran is the same as the contemporary of Jnanasambandar this Alvar may be assigned to their age and likewise his daughter Andal. It seems more likely, however, that the reference is to Srimara Srivallabha. But the inference can only be tentative and in any case there is no reason to assign Periyalvar to the times of Jatila Parantaka" (P. K., p. 98) In the same page under f. n. 2 Prof. Sastri questioned the correctness of the views of Pandit Raghava Aiyangar thus: "the Pandit does not say how Nedumaran can be identified with Nedumsadayan". Since the problem of Andal is to be taken up with Periyalvar and the astronomical data contained in the *Tiruppavai* pasuram number 13 *veḷḷi eḻundu vyaḻamuṟangiṟṟu*, the four dates given are 27th November, 600 ; 18th December 731; 25th November 885; and December 14, 886 A. D. and may be considered in this connection. If the identity of Ko-Nedumaran with Srivallabha is accepted, all the four dates given are wide of the mark and cannot apply. It seems to me too much to stretch the astronomical argument for this purpose. Unless we are sure as to the particular system of calculation of time Tiruppavai was composed importation or projection of existing systems of calculation into those times may not be fruitful in attaining the desired accurate result.

தென்னாட்டுக் கலைமன்றங்கள்

அ. ச. ஞானசம்பந்தன்

கலைகள் பலதிறப்படும். அவற்றை வளர்க்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட குழுக்கள் அனைத்துமே மன்றங்கள் என்று கூறப்பெறும். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கவிதைக்கலை ஆகிய ஐந்தையும் நுண்கலைகள் என்று கூறுவர். நாகரிகத்தில் மிகுந்த எந்த இனத்தாரும் தமக்கே உரிய தனி இயல்புகளுடன் இக் கலைகளை வளர்த்துள்ளனர்.

கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு முற்பட்டே தமிழ் நாட்டில் இத்தகைய நுண்கலைகள் சிறப்புடன் வளர்க்கப்பெற்றன. இத்துணைக் காலங்கழித்து அவர்களுடைய கட்டடக் கலை சிற்பக்கலை என்பவற்றை நாம் அறியவும், காணவும் வாய்ப்பில்லாமல் போனதில் வியப்பு ஒன்றும் இல்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தைக் கொண்டு தமிழ் நாட்டின் கலை மன்றங்கள் சிலபற்றி அறிய முடிகிறது. இதில் கூறப்பெற்ற செய்திகள் அப்பொழுதுதான் தோன்றியவை என்பதற்கில்லை. நாட்டிய அரங்கத்திற்குச் சிலப்பதிகாரம் கூறும் இலக்கணத்தைக் கண்டால் அந்த நூல் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னர்த் தொட்டே இக் கலை நன்கு வளர்ந்து சிறந்துள்ளது என்று நினைக்கத் தோன்றுகிறது. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் கூறவந்த சிலப்பதிகாரம் நாட்டியத்திற்கு உரிய பொருள்கள் அனைத்தையும் கூறுகின்றது.

யாழ் வாசிப்பவன், குழல் வாசிப்பவன், தண்ணுமை வாசிப்பவன், இசையாசிரியன், பாடல் ஆசிரியன் ஆகிய இவர்கட்கெலலாம் இலக்கணம் கூறுவதுடன் நாட்டிய அரங்கு அமைக்கப்பட வேண்டிய முறையையும் விரிவாகக் கூறுகிறது. நாட்டிய அரங்கில் ஒளி அமைப்பு முறையைக்கூட அந்நூல் மறக்கவில்லை. இடையே உள்ள தூண்களின் நிழல், அரங்கிலும், அவையின் கண்ணும் விழாதபடி விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. உலகம் போற்றும் ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களை எழுதி நடிக்கும் காலத்திற்கூட அரங்கை மறைப்பதற்குக் 'கரந்துவரல் எழினி' என்று சிலப்பதிகாரம் கூறும் 'Drop Scene' கிடையாது என அந்நாட்டுத் திறனாய்வாளர் கூறுகின்றனர். ஆனால், சிலப்பதிகார காலத்தில் 'ஒருமுக எழினி' 'பொருமுக எழினி' 'கரந்துவரல் எழினி' என மூன்று வகைத் திரைகள் இருந்தன என்றால் இக்கலை அன்று வளர்ந்திருந்த நிலைமைக்கு வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை.

நாடகங்கள் என்று எடுத்துக் கொண்டாலும் பல வகை நாடகங்கள் இருந்துள்ளன. 'கூத்து' என்று அழைக்கப்பட்ட இதில் நூற்றுக்கணக்கான

வகைகள் இருந்தன என்றும் அறிய முடிகிறது சிலம்பை அடுத்துத் தோன்றிய பெருங்கதையிலும் நாடகம்பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. பத்தாம் நூற்றுண்டில் தோன்றிய சிந்தாமணியும் நாட்டியம், நாடகம் என்பவைபற்றிக் குறித்துச் சொல்கிறது. ''நாறியும், சுவைத்தும் நரம்பின் இசை கூறியும் குளிர் நாடகம் நோக்கியும்'' எனவரும் சிந்தாமணிப்பாடல் தமிழ் நாட்டில் பெருவழக்காய் இருந்த நாடகம்பற்றி அறிவிக்கின்றது.

ஞானசம்பந்தர் தேவாரத்திலும் நாடகம்பற்றிய பேச்சைக் கேட்கிறோம். ''வலம்வந்த மடவார்கள் நடமாட முழவு அதிர மழை என்று அஞ்சி'' என வரும் தேவாரமும் ''ஆடல் நெறி பாடல் நெறி'' என வரும் அடியும் இக்கலையைத் தமிழர்கள் போற்றிய முறையை நமக்கு அறிவிக்கின்றன. மேல் நாடுகளில் பொது மக்களின் பயன் கருதிப் பொது இடங்களில் இக் கலைமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன; இப் பொது மன்றங்களிலேயே அரசர்களும் வந்து இவற்றை அனுபவித்தார்களாம். ஆனுல், தமிழ் நாட்டில் இவ்வாறு இல்லை. அரசனுடைய ஆதரவில் வாழும் இயல்புடையவை இக் கலைகளாதலின் அரசர்கள் தம்முடைய அரண்மனை எனப்படும் கோயில்களிலேயே அரங்குகள் அமைந்திருந்த முறையைச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய நூல்களிற் காண்கிறோம். நாடக, நாட்டியக் கலை மன்றங்களில் இருவகை உண்டென்றும், அவற்றுள் ஒருவகை பொதுமக்களின் அரங்குகள் எனவும் ஒருவகை அரசர்களின் அரங்குகள் எனவும் அறிகிறோம்.

பட்டிமண்டபம் என்று கூறப்பெறும் கலை மன்றங்களும் மிகுதியாக இருந்துள்ளன. 'Debating Societies' என்று தற்காலம் எவற்றைக் குறிக்கிறோமோ அவைகளே பட்டி மண்டபங்கள் என்று கூறப்பெற்றன. இவற்றிற் சென்று வாதிட வேண்டுமாயின் நிறைந்த கல்வியறிவும், சொல் வன்மையும் நிறைந்திருத்தல் வேண்டும். ''பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்'' என மணிமேகலையும், ''பட்டி மண்டபம் ஏற்றினை'' எனத் திருவாசகமும் பேசுவது கலை மன்றங்கள் தமிழ் நாட்டில் மிகுந்திருந்தன என்பதையே அறிவுறுத்தும்.

கம்பநாடன் காப்பியத்தில் ''சுந்தனை அனையவர் கலை தெரிகழகம்'' என்றும் ''பந்தினை இளையவர் பயிலிடம்'' என்றும் பேசப் பெறுவதால் உடற்பயிற்சி மன்றங்களும், அறிவுப் பயிற்சி, சொற் பயிற்சி மன்றங்களும் இருந்துள்ளன என அறிகிறோம். உடலைப் பேணிப் பாதுகாப்பதையும் ஒரு கலையாகவே தமிழர் கருதினர். ஆதலின் பந்தாடும் இடத்தையும் கம்பநாடன் குறித்துப் போனுன்.

பழைய காலங்களில் இருந்த இவற்றைவிட்டு இடைக் காலத்துக்கு வருவோமானுல் எல்லாக் கலை மன்றங்களும் ஒருசேரத் தங்கியிருந்த இடமாக ஒன்றிருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இவ்வாறு இருந்த இடம் திருக்கோயில்தான். இறைவனை வழிபட்டு வீடுபேறு அடையும் இடமாக மட்டும் திருக்கோயில்கள் இடைகாலச் சோழர் காலத்தில் இல்லை. நட்மாடும் கோயில்களான மக்கள் அறிவு வளர்ச்சிக்குரிய நாடகம், நாட்டியம் என்பவை நடைபெறுவதும் கோயிலில்தான்.

பொதுமக்களின் அறிவு வளர்ச்சி கருதிப் பாரதம், இராமாயணம் முதலியவற்றைச் சொற்பொழிவு மூலம் செய்பவர்க்குப் ''பாரதப் பங்கு''

என்று தனியே மானியம் விடப்பட்டு இருந்தது. திருப்பதியம் பாடுவார் என்பவர்கள் தனியே ஒரு கூட்டத்தாராக இருந்து வந்தனர். தேவாரம், பிரபந்தம் முதலியன பாடும் இவர்களும் இவர்கட்கு பக்க வாத்தியம் வாசிப்பவர்களும் இசைக் கலையையும், இயல் கலையையும் ஒருசேர வளர்த்தவர்களாவார்கள்.

பிரபாகர முறை மீமாம்சையும், வேதாந்தமும், வியாகரண பாடமும், தைத்திரீய, வாஜஸ்பேய பாடங்களும் முன்னரே ஓரளவு கல்வி பயின்றவர்கட்குப் போதிக்கப்பட்டு வந்தமையும் அறியப்படுகிறது. இதில் வியப்புக்குரியது யாதெனில் தமிழ்க் கல்வி போதிக்க நிலம் முதலியன விட்டதாக ஒரு கல்வெட்டுத்தானும் இல்லை. ஊர் தோறும் தமிழ்க் கல்வி போதிக்கப்பட்டமையாலும், ஒரு சில இடங்களில் மட்டும் வேதபாடம் போதிக்கப்பட்டமையாலும் பின்னது கல்வெட்டில் இடம் பெற்றது போலும்.

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் ராஷ்டிரகூட மன்னனுகிய மூன்ரும் கிருஷ்ணனிடம் அமைச்சராக இருந்த நாராயணன் என்பவர் பீஜப்பூர் ஜில்லாவில் "சலோட்கி" என்றவிடத்தில் ஒரு வடமொழிக் கல்லூரியை நிறுவினுர். நாளாவட்டத்தில் படிக்கும் பிள்ளைகள் தங்க மட்டும் 27 விடுதிகள் (Hostels) கட்டப்பட்டனவாம். 200 மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் வழங்க ஒருவர் 2500 ஏக்கர் நிலதானம் செய்தார்.

கி. பி. பதினெரும் நூற்றுண்டில் தென்னுர்க்காடு மாவட்டத்தில் 'எண்ணுயிரம்' என்ற ஊரில் இராஜேந்திர சோழன் வேதம் கற்பிக்கும் கல்லூரி ஒன்றை நிறுவினுன். அதில் 340 மாணவர்கட்கு 10 ஆசிரியர்கள் கற்பித்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும் கற்ற மாணவர் தொகையும் தரப்பட்டுள்ளது அக் கல்வெட்டில். 75 மாணவர்கள் ரிக் வேதமும், 75 பேர் யசுர் வேதமும் சாந்தோகசாமன் கற்க 20 பேரும், வியாகரணம் கற்க 25 பேரும் இருந்தனராம். ஒவ்வொரு மாணவனுக்கும் தினந்தோறும் ஆன செலவு $\frac{3}{4}$ குருணி நெல்லும் $\frac{1}{3}$ கழஞ்சு (ரூ. 2/- மதிப்பு) பொன்னுமாம். மீமாம்சை, வேதாந்தம், வியாகரணம் படிக்கின்றவர்கள் இச் செலவைவிட 66% அதிகம் பெற்றனர். ஆசிரியர்கட்குத் தினந்தோறும் ஒரு கலம் நெல் சம்பளம். தமிழ் நாட்டில் அந் நாட்களில் ஆசிரியராக இருப்பதும் சிறந்த தொழிலாக இருந்தது போலும்; வேதாந்தம் கற்பிக்கும் ஆசிரியர் 25% அதிக சம்பளம் பெற்ருர்.

இதேபோல 340 பேர் படிக்கும் மற்ெருரு கல்லூரியும், 190 பேர் கற்கும் மூன்ருவது கல்லூரியும், வியாகரணம் கற்பிக்கும் திருவொற்றியூர்க் கல்லூரி ஒன்றும் இவனுல் நிறுவப்பெற்றன.

குண்டூர் வட்டத்தில் "மல்லாபுரம்" என்ற கிராமத்தில் ஒரு வேதக் கல்லூரி நிறுவ 44 கிராமங்கள் மானியமாக விடப்பட்டன. தமிழ் நாட்டில் காஞ்சிபுரம் கலை மன்றங்கட்கு உறைவிடமாக் இருந்ததுபோல் மைசூர் பகுதியில் "பெல்காம்" என்ற இடம் பிரசித்தி பெற்றதாகும். இவற்றையல்லாமல் சைவ, வைணவ, பௌத்த மடங்களும் இம் முறையிலேயே அக்காலத்தில் தொண்டு செய்தன.

மேலே கூறிய ஹிந்து சமய போதனைக் கலை மன்றங்கள் போக "ஹயாங் சுவாங்" என்ற சீன யாத்ரிகர் குறிப்பிடும் பௌத்த விஹாரங்கள்

பல தென் மொழிகள் வழங்கும் நாடுகளில் இருந்தன. ஆந்திர நாட்டில் 20 விஹாரங்களில் 3000 மாணவர்கள் கல்வி கற்றனர். விஜயவாடாவில் 1000 பேரும், காஞ்சிபுரத்தில் 10,000 பேரும் பௌத்த சமயக் கல்வி பயின்றனர் என அவர் கூறுகிறார்.

மலையாள நாட்டில் ''சபா மடங்கள்'' என்பவை பிரபலமாக இருந்துள்ளன; இன்றும் இவை சில உள்ளன. தென்னலாஸ் சிவன் கோயில் மடம் இன்றும் வேத பாடத்தை பிராமணர்க்குமட்டும் கற்பிக்கின்றது. ஸ்ரீ மூலவாசம் என்பது வட மலையாளத்தில் புத்த சமயக் கல்வி போதித்துவந்தது.

ஓவிய, சிற்பக் கலை மன்றங்கள் அடுத்து அறியப்பட வேண்டுவன. சிற்பக் கலையின் சிறப்பை 7ஆம் நூற்றாண்டு முதல் அறியமுடிகிறது. மகாபலிபுரம் என விளங்கும் மாமல்லபுரத்தை அறியாதார் யார்? மகேந்திர வர்மனும், அவன் மகன் நரசிம்மவர்மனும் கண்ட கனவுகள் சிற்ப வடிவு பெற்று இவ்விடத்தில் இருக்கக் காண்கிறோம். இக் கலைகள் தென்னாட்டில் தோன்றி வடக்கு நோக்கிப் புறப்பட்டன.

எல்லோராக் குகைகளில் உள்ள ஓவியங்களும், சிற்பங்களும் தென்னாட்டுக் கலையின் முதிர்ந்த பயன்களாகும். புதுக்கோட்டையை அடுத்த 'சித்தன்னவாச'லில் உள்ள தாமரைக்குள ஓவியம் உலகம் அறிந்த கலைக் கருவூலங்களில் ஒன்றன்றோ? தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் கருப்பக் கிருஹத்தில் காணப்பெறும் சேரமான் பெருமாள் நாயனாரின் கைலை யாத்திரையும் தமிழர் ஓவியக் கலையின் சிறப்பை உலகறிய எடுத்துக்கூறுவது. மேனாட்டில் 'Fresco Painting' என்ற முறை தோன்றப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே இந்த ஓவியங்கள் எழுதப்பெற்று இன்றும் அழகு குன்றாமல் இருந்துவருகின்றன எனில் இவற்றின் சிறப்பை யார் எடுத்துக் கூறமுடியும்? இலங்கைத் தீவில் உள்ள 'சிகிரியா'வில் தோன்றிய ஓவியங்களும் தமிழ் நாட்டு ஓவியக்கலையில் தோன்றியவையே.

அஜந்தாவில் புத்த சமயத்தின் சிறப்பை விளக்கும் ஓவியங்களும், சிற்பங்களும் இத் தென்னாட்டு ஓவியக்கலையின் சிறப்புக்கு சான்று பகர்கின்றன. எல்லையற்ற அமைதியின் இடையே துக்க நிவாரண மார்க்கம் கண்ட புத்தர் பல்வேறு கோலங்களில் காட்சியளிக்கிறார் அஜந்தாவில். மனித மனத்தில் ஓயாது அடிக்கும் புயல்கள் அனைத்தும் போதிசத்துவரின் எதிரே அடங்கிப் பேரமைதியை விளக்கின்றன. அனைத்திலும் நிர்வாண உணர்வும், விடுதலை உணர்வும் துலங்கக் காண்கிறோம் அஜந்தாவில். உலகமே அநித்யம் என்பதையும் நிர்வாணம் ஒன்றுமட்டுமே நித்தியம் என்பதையும் பார்ப்பவர் மனத்திலே படுமாறு செய்கின்றன இவைகள்.

அஜந்தாவிலிருந்து 70 கல் தொலைவிலுள்ள எல்லோராவிலும் புத்தர் சமயக் குகைகள் 12 உள்ளன. 7ஆம் நூற்றாண்டின் இடையில் இந்து சமயத்தார் இப் பகுதியைக் கண்டு 16 குகைகளை அமைத்தனர். பிற்காலத்தில் 5 சமணக் குகைகளும் இடம் பெற்றன அங்கே.

எல்லோராவும் அஜந்தாவும் எவ்வளவு வேறுபட்டவை? அஜந்தாவின் பேரமைதியின் எதிரே, எல்லோராச் சிற்பங்கள் சக்தியின் வெளிப்பாட்டைக் காட்டி நிற்கின்றன. உலக முழுவதையும் ஆட்டிப்படைக்கும் இயற்கையின் பெருஞ் சக்திகட்கு வடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது அஜந்தாவில். இப்

பெரும் சக்தியின் ஊடே சாதாரண அற்பத்தனமான எண்ணங்கள் விடை பெற்றுக்கொள்கின்றன. பம்பாயை அடுத்துள்ள எலிபெண்டாத் தீவில் உள்ள குகைகளில் உள்ள சிற்பங்களும் சிறந்த திருமூர்த்தியும் எல்லோரா வின் நிழலே ஆகும்.

தென்னக மொழி பேசுவோரின் கலை மன்றங்கள் தனித்தன்மை பெற்று உலகம் போற்றுபவையாய் விளங்குகின்றன.

KUDUMIYAAMALAI INSCRIPTION ON MUSIC

by

Dr. V. PREMALATHA, M.A., (Phd.)

Professor of Music, S. R. College, Tiruchy.

The Kudumiyamalai Inscription on Music, whose Royal patron, if not its creator was the famous Pallava Mahendravarman—I, is situated in Pudukkottai Taluk in Trichirapalli District. The Inscription occupying a space of about 13′×14′ is engraved on the slope of a rock in the Sikhanathaswami Temple in Kudumiyamalai. Although the Inscription was discovered in 1904, its musical import was brought to the notice of Scholars by Dr. T. N. Ramachandran during the session of the Indian Historical Congress held at Bombay in 1931 and published in the *Journal of Oriental Research* Vol. VII. There is also another Inscription on Music in the rock-cut Siva Temple at Tirumayam, 14 miles South of Pudukkottai. This Inscription and the one at Kudumiyamalai belong to the early Seventh Century A. D.

The authorship of these two Inscriptions is to be attributed to Mahendravarman—I for more than one reason as noticed below: (1) The design of King Mahendravarman—I is clearly revealed in the Mamandur Inscription. The King with unquenching zeal wanted to achieve on the *Vina*, what could be achieved by the voice, which in turn refers to another imperative statement made by the King and recorded in Tirumayam "*Gunasena Pramananjeyda Vidya Parivadini*"—*Karkappaduvadu Kan* meaning the *Vidya* established and confirmed by Gunasena should be played on the Parivadini" Similar is the design in the Kudumiyamalai.

(2) The title "Gunasena" which means of myriad qualities means the same as "Gunabhara" and "Gunadhara"—"One who is endowed with all Gunas" and "one who bears all Gunas" respectively titles already known from Trichirapalli as of Mahendravarman—I. Trichirapalli was in the Pallava Teritory. Kudumiyamalai is near Trichirapalli and so within the Pallava Teritory like Mamandur.

(3) Trichirapalli bears the needed reference for Mahendravarman's Musical Talents *Sankirnajati* and change of faith from Jainism to Saivism. Sittannavasal is also near Kudumiyamalai which is a product of the King whose earlier faith to Jainism is alluded to in Trichirapalli Inscription. The sum total of the evidence would point out Pallava Mahendravarman–I as the author of Kudumiyamalai Inscription. The titles that occur in the upper cave at Trichirapalli emphasise our point namely "Sankirna-jati" 'Chitrakarapuli' 'Gunabhara', 'Mattavilasa'.and Mahachettakari'. "Gunabhara" bears comparison with Gunasena, mentioned here and *Sankirnajati* bears reference to his ragas being *Sankirna ragas*, that we find in the text of the kudumiyamalai Inscription. In Ancient India Jati was the term by which *raga* was referred to. In would thus be normal as in the case like this, to attribute this Inscription to Mahendravarman-I. a well-known King than to a less known or, unknown King or chief. The fact that at Mamandur Cave Temple there is a one line Inscription in the late *Grantha* character which reads as *pa - sa - sa - sa - da - sa* indicating svaras, shows the continuity in the practice of reference to the Mahendravarman Inscription at Mamandur by later date Musicians.

(4) The Musical Instrument which was used for such results as have been incised on the adjoining rock was mentioned as *Parivadini* as revealed by a label-Inscription; which is further attested to by the sculptural representation of the *Parivadini* (yal) at Tirumayam Cave Temple nearby (5) Palaeographically the characters point out 7th Century A. D. as the possible date of the Inscription. The evidence of palaeography is supported by the architectare of the cave which is in *Mahendra* style, in which the Temple is a cut-in monolithic Cave Temple with pillars with a central octagonal belt between cubical parts. Thus the external evidence furnished by architecture and palaeography and the internal evidence furnished by the text of the Inscription go to prove that Mahendravarman—I was the author of the Kudumiyamalai Inscription.

The Kudumiyamalai Inscription commences with an auspicious term "Siddham" followed by "Namah Sivaya" meaning "Salutation to Siva". The text is divided into 7 Sections. Each of the seven Sections is arranged in sub-sections with a maximum of 7 in some and a minimum of 4 in some other places, each having 16 sets of 4 notes under headings differently ascribed as-1. *Madhyamagrame Chatushprahara Svaragamah* - the *Svaras* of *Madhyamagrama* arranged in groups of four. (2) *Shadja-grame chatushpraharasvaragamah*. The other Sections bear the names such-as, (3) *Shadava*, (4) *Sadharita*. (5) *Panchma*, (6) *Kaisikimadhyama* and (7) *Kaisika*. On the extreme right end of the bottom of the Inscription is a Colophon at the right hand Margin reading as "Rudracharya sishyena Paramamhesvarena rajna sishya hitartham kritah svaragamah".

Just below this colophon, a note in Tamil character "*Ettirukum Elirkkum Ivai Uriya*" is added.

The Kudumiyamalai Inscription is a notation on *Sankirna Jati* or *Misra ragas* invented by Mahendravarman—I. Most of the *ragas* of the Inscription are met with in the *Devarappans* of the early 7th Century A. D. The first section *Madhyama Grama* approximately corresponds to the *Harikambhoji Mela*; *Shadja Grama* is Kharaharapriya. *Shadaba* (va) corresponds to the *Pan Sikamaram* which is the same as *Nadanamakriya raga*; *Sadharita* of *Sadhari Pan* corresponds to the raga *Pantuvarali* 51st mela); *Panchama* is the *Pan Panchamam* same as *Ahiri raga*; *Kaisikamadhyama* is based on the *svaras* of *Sankarabharana* which was known as *Pan Pazham Panjuram* The last Section is based on the notes of *Mechakalyani raga.*

The Music of the Inscription was mainly intended to be played on the *Vina* and is the result of the experiment that the author of the Inscription conducted on *Yal* (*Parivadini*) and the *Vina*. It is mainly a *sruti prastara* of the *svaras* of the *Grama* and *Jatis* mentioned in the Inscription made by this from which new *ragas* have been evolved. Important contributions made by this Inscription are as follows:

1. The evolution of new *ragas* by the permutation and combination of *srutis*, of *Svaras*, of the basic *ragas* instead of the permutation and combinations of the *svaras* themselves.

editing successfully the records of bygone times. But this is an undertaking which, besides good linguistic attainments, requires careful training in the methods followed by the European school of clssical philology" [3].

This may now be illustrated with some Tamil examples. The form *piḷḷaiyaru koil* 'The temple of Pillaiyar' found in 16th century (S. I. I. VIII. 183. 6) is edited like this: *piḷḷaiya* (*r) (*ru*) *koil*, as the editor thought that *piḷḷaiyar koil* is the correct form and hence *r* is put with an asterisk to indicate its absence and *ru* within parentheses to denote its redudance. But the consonantal endings in Tamil came to have an enunciative *u* even in Sangam period [4] and this is attested in inscriptional records from 7th century onwards [5]

mūḷakku 'three *uḷakku*' found in 9th century (S. I. I. XIV. 38.16) and in 14th century (T. A. S, VI. Pt. I. 93.55) is given in those volumes as *mū* (*vu*) *ḷakku*. The form has been referred to by Naccinarkkiniyar as *marūu* (corrupt) form [6]. So, *mūḷakku* as the colloquial form should have been prevalent from 9th century.

vacca 'that which is put' found in two places in S. I. I. XIV. is edited as *va* (*i*) *cca* in 5 7. and as it is in 93.5. *ai* > *a* change is found from 7th century [7] in the inscriptional records and *tt* > *cc* change from 7th century [8] even in literature The above illustrations indicate that a knowledge of the history of a language is quite essential for epigraphists.

2. 1. 2. The linguistic knowledge can be useful in another way especially to fix the age of the undated records A historical study of the language of the records will reveal the period of the beginning of any changes in the language and the duration of their operation. For instance, *rr* > *tt* is attested from 6th century, *rP* (P is any plosive) > *PP* from 8th century, etc. (See 4.2. for full list). The compilation of these datable changes can be made use of to identify the dates on the basis of the language of the inscriptions [9].

---

3. S. I. I. Vol. I. P. 4. My attention to this is drawn by Dr. G. S. Gai, Government Epigraphist for India.

4. Dr. S. Agasthialingam pillai 'Description of the language of Patirruppattu (unpublished thesis). see. *kamar* 'beauty' > *kamaru* (27—16)

5. V. Jayakumari, The language of the Tamil inscriptions from 7th century upto middle of 11th century. (unpublished thesis).

6. Tolkappiyam-Eluttatikaram-Naccinarkkiniyar Commentary. S. 457.

7. V. Jayakumari, loc. cit.

8. Appar Tevaram. Vacca for vaitta on 5—4—1.

9. Note the statement of Dr. A. C. Sekhar in his 'Evolution of Malayalam: The selection of the inscriptions has been made chiefly on the strength of the opinions expressed by scholars regarding their dates. I have not however taken such opinions on trust but have examined them carefully, particularly from the linguistic point of view before selecting the inscriptions. As a result of such examination. I have found it necessary to reject several inscriptions as probably belonging to a much later date than their editors have supposed" P. 4 (Poona, 1953).

2. 1. 3. The publication of inscriptions in Roman script (for instance in Ephigraphia Indica and in other journals) need revision from the linguistic point of view. The transliteration system is sometimes inconsistent and also misleading and it gives a wrong picture to linguists looking into these records.[10] The Tamil script ச is transliterated as *ś* in the initial position and in the intervocal position. The script *ś* is used to transcribe the grantha script ஶ and Devanagari script श. ச in those two places is pronounced in modern times as *ś* in some dialects and *s* in other dialects.[11] But we do not know from what period ச came to have these phonetic values since it was a palatal stop in Old Tamil period.[12] Anyhow, it is not justified to assume the prevalent phonetic value for the symbol used in early inscriptions.

The stop sounds are transcribed as voiced ones in the intervocal position and after nasals, and as voiceless ones in the initial position and in gemination. But in the case of the script ச்ச, the transliteration used is *chch*. The transcription is misleading since it indicates the phonetic value of a geminated aspirate palatal sound. A more consistent transcription would have been the use of *cc* for geminated ச்ச. The voiced and voiceless pronunciation of the stop sounds only developed from 9th century onwards.[13] Therefore the use of scripts to indicate these differences in the earlier inscriptions would be considered as highly incorrect.

That the transliteration is not consistent is seen in the following example: e. g., the inscription edited E. I. XXI. 17. also published in Tamil, the language of the inscription in S. I. I XVII. The initial sound in the word *cuppiramaṇiyar* is transliterated as *s* but the Tamil script ச is used in the inscriptions; *ka* in words like *makan* (·65), *vicākam* (·65) and *cirakam* (·42) is transcribed as *ka* while in words like *āka* (·25) it is transcibed as *ga* even though க is the only script used in all the cases.

The transliteration now used has already been revised from the one used in S. I. I. Volume I by Hultsch. For the sake of consistency it would be better if the epigraphists use the transliteration system adopted by the Tamil Lexicon.

---

10. Note the statement of Dr. G. S. Gai in his Historical grammar of Old Kannada (based entirely on the Kannada Inscriptions): "As the texts and transliterations sometimes differ from each other and as both of them are sometimes faulty, it becomes difficult for the student of a language to rely upon these speech forms and arrive at conclusion" P. xv. (Poona 1946).

11. My attention is drawn to this dialectal difference by Mr. K. Duraisamy.

12. T. P. Meenakshisundaran, loc. cit. P. 54.

13. Ibid. P. 132.

2. 2. Usefulness of the inscriptions to linguistics:

Recently epigraphists have come to realise the utility of the inscriptions to linguistic studies. B. Ch. Chabra is the first to stress this point in the preface of S. I. I. XIII in 1951[14]. Another epigraphist, Dr. D. C. Sircar has also pointed out the special fearures of the inscriptions from this point of view[15]:

" Another important characteristic of inscriptions is that their texts are generally free from variant reading as they were not usually liable to modification like those of literary works which were copied and recopied by people in later times ".

The language of the inscriptions is free from interpolation and the forms found in them can be authoritatively taken as representing the age to which they belong but it cannot be so in the case of literary records because the poets might have used the archaic forms also and there is a possibility of interpolation by copyists.

Linguists have also emphasised the significance of the inscriptions for linguistic studies. For instance, Prof. T. P Meenakshisundaran has remarked that 'in these (inscriptional) records we have more of the colloquial language as it was current in the varying ages to which the records belong'[16]. Hence the inscriptions preponderate over all other sources for the history of a language in general and Tamil in particular.

3. History of Linguistic Studies of Tamil inscriptions :

Dr. K. Kanapathy pillai may be said to be first to study Tamil inscriptions from the linguistic point of view. The title of his work is 'A study of the language of the Tamil inscriptions of the 7th century and 8th century A. D.', but it is not yet published. Thanks to the effort of Prof. T. P. Meenakshisundaran who has been guiding scholars in the study of the entire Tamil inscriptions, 'A study of the language of the Tamil inscriptions from 7th century upto the middle of 11th century' has been made by Mrs. V. Jayakumari, 'The language of the Tamil inscriptions (1050 to 1250 A. D.)' by Kumari S. Baghirathi, 'The word index of the inscriptions of 1250-1350' by Kumari Kausalya and 'The language of the Tamil inscriptions from the middle of 14th century upto 17th century' by the author. Most of the material of the early iuscriptions useful for the history of Tamil language has been incorporated in 'A history of the Tamil language' by Prof. T. P. Meenakshisundaran[17]. Kamil Zvelebil has published two articles, one on the language of the

---

14. S. I. I. Vol. XIII. Preface.
15. D. C. Circar, 'Indian Epigraphy' P. 20 (Delhi, 1965).
16. T. P. Meenakshisundaran, loc. cit. P. 7.
17. Ibid. PP 119 to 142.

Tamil-Brahmi inscriptions[18] and another on the language of Pallankoil copper plates of Simhavarman[19]. New inscriptions are being discovered and deciphered and there are many unpublished inscriptions still lying in the Office of Government Epigraphist for India It is, therefore, necessary that the linguistic study of the inscriptions has to be undertaken from time to time.

4. Inscriptions and Tamil language:

Any record of the language can be studied linguistically and it will throw light on the evolution of the language. Since inscriptions represent the language spoken in different periods, it is possible that they preserve certain forms which otherwise are not being attested in the literary records. These are of immense value to comparativists.

4. 1. The study of early inscriptions reveal such interesting forms which are very archaic.

Dravidialogists are of the opinion that in the two words of *āḷ* 'rule' and *aḷu* 'weep' Old Tamil should have *y* initially because in many sets where *ā* and *ē* alternate in Dravidian languages, Tamil generally preserves Proto-Dravidian **y-*. In the above two cases Tamil records do not show **y-* forms. Therefore, it is said that the loss of **y* should have started before the period of early literary works in Tamil[20]. Four inscriptions of the 9th century bear evidence to the above fact by preserving initial *y-* in the word *āḷ* as *yāḷ*.

(*caturvētimaṅkalam*) *yāḷuṅkaṇattar* 'Managing members of the village assembly'. S. I. I. VI. 294. 1. Chingleput, S. I. I. XII. 82 4. North Arcot.

(*emmūr*) *yāḷuṅkaṇattār* S. I. I. VI. 285. 1. Chiugleput.

(*ivvūr*) *yāḷuṅkaṇattār* S. I. I. VI. 370. 2 Chingleput.

The changes of Proto-Dravldian **i* and **u* into **e* and **o* respectively when they are followed by the derivative vowel *a* should have taken place during Proto South Dravidian period. The resultant **e* and **o* have again changed into *i* and *u* respectively in the same environment in Tamil (as well as in Malayalam) in Pre-Tamil period. But, there are some forms which have not undergone the later change in Old Tamil[21], but such unchanged forms are attested with changes in early inscriptions.

celavu 'expenditure' (literary form)—*cilavu* (Inscriptional forms). S. I. I. VI. 365. S. 2. Chingleput—8th century.

18. Kamil Zvelebil, 'The Brahmi Hybrid Tamil Inscriptions' Tamil culture, XII. 13-50 (1966)

19. Kamil Zvelebil, 'Tamil in 550 A. D. (An interpretation of early Inscriptional record), Czechcslovakia, 1964. There is one more article, The importance of Tamil epigraphy, Tamil Culture, III. 3. 3-4 (1954) and but it is not available to me.

20. Bh. Krishnamorthy, Telugu verbal bases' P. 90 (Berkeley, 1961).

21. Bh. Krishnamoorthy, 'Alernations i/e and u/o in South Dravidian' language' 34·465 ff. (1958).

peyar 'name' (L. F.) *piyar* (I. F.)—E. I. XVII. 16.108 velvikkudi

toṭaṅku 'start' (L. F.)—*tuṭaṅku* (I. F.)—S. I. I. VI. 348. 3. Chingleput 9th century.

koṅar 'bring' (L. F.)—*kuṅar* (I. F.)—S. I. I. V. 608. Tanjore—8th century.

4 2. The following are the phonological changes attested in the inscriptions so far studied. The first attestation of the change is alone given here, and this is only tentative and it is not exhaustive.

6th Cent.	*ṟṟ>ṭṭ*	:	*ēṟṟam* 'picottah'>*ēṭṭam.* Pallan koil Copper plate 45. Tanjore Dt.
7th Cent.	*a>e*	:	*aracar* 'king'>*aracer.* S. I. I. II. 72, 14. Chingleput.
	u>i	:	*ivaruṭaiya* 'his'>*ivariṭaye.* S. I. I. VIII. 331, 43, S. Arcot.
	ai>a	:	*ainnūṟu* '500'>*aññūṟu.* ".9.
	ai>e	:	*irupattaintu* '25'>*irupatteyintu.* S. I. I. 1, 152, 71. Chingleput.
	-y->yi	:	*ceytu* 'having did'>*ceyitu* ". 9.
8th Cent.	*a>i*	:	*ellāvaṟṟiū* 'all (st.)>*ellāviṟṟiṉ*, S. I. I. XII. 34, 8. Chingleput.
	ey>ai	:	*eṇṇey* 'oil'>*eṇṇay.* E. I. 22, 25. Chittor.
	k>y	:	*tiruppatikam* 'scared hymns'>*tiruppatiyam.* S. I. I. III. 43, 33. North Arcot.
	ṟk>kk	:	*mēṟku* 'west'>*mēkku.* E. I. XVII. 16, 119. Chingleput.
	ñ>n	:	*ñāṉṟu* 'at that time'>*nāṉṟu.* P. S. I. 15, 6. Tiruchy.
	y>c	:	*kuyakkāṇam* 'tax on potter'>*kucakkāṇam.* S. I. I. II. 73, 124. Tanjore.
	r>Ø	:	*kuṇarntu* 'having brought'>*kuṇantu.* S. I. I. V. 608, 19. Tanjore.
9th Cent.	*i>a*	:	*ñayiṟu* 'sun'>*ñayaṟu.* S. I. I. V. 684, 2. Tanjore.
	y>Ø	:	*vāykkāl* 'canal'>*vākkāl.* S. I. I. VI. 294, 3. Chingleput.
	ḷ>ḻ	:	*kiḷamai* 'day'>*kiḻamai.* (Jayakumari's thesis and the reference is not known).

11th Cent.	**y*>*yi*	:	*ikkōyil* 'this temple'>*yikkōyil*. S. I. I. VIII. 756, 6. South Arcot.
12th Cent.	**ṟ*>*r*	:	*niṟutta* 'that which is established'>*nirutta*. S. I. I. VIII. 783, 15. (This should be still earlier).
14th Cent.	**k*>*v*	:	*takappaṉār* 'father'>*tavappaṉār*. S. I. I. VI. 454, 14. Chingleput.
	-*ḷ*>∅	:	*makkaḷ* 'sons'>*makka*. S. I. I. V. 225, 21. Coimbatore.
	-*ṉ*>∅	:	*koḷvāṉ* 'he will get'>*koḷvā*. 61 of 1931–32.
	∅>*r*	:	*kōvai* 'group'>*kōrvai*. S. I. I. VIII. 163, 5. Chingleput.
15th Cent.	*y*>*ḷ*	:	*ārāycci* examination'>*ārāḷcci*. S. I. I. V. 738, 8. Tinnevelly.
16th Cent.	*ṉr*>*ṇṇ*	:	*oṉṟu* 'one'>*oṇṇu*. P. S. I. 852, 11. Trichy.
	ḷ>∅	:	*yāḷppāṉam* 'Ceylon' *yāppāṇam*. 77 of 1950. Madurai.
	u->*vu*	:	*uḷḷiṭṭa* 'that which is included'▷*(Vāram) vuḷḷiṭṭa* 193 of 1936-37. Pondi.

5. **Conclusion :**

It is clear from the above discussion that epigraphy and linguistics can be mutually beneficial to each other. The study of inscriptions will be more fruitful if linguists as well as epigraphists work in closer co-operation.

தொல்காப்பியமும் பண்டைத் தமிழ் எழுத்துக்களும்

டாக்டர் ந. சுப்ரமணியன், எம். ஏ.. பிஎச். டி.,

சி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ.,

இக்காலத்தே தொல்பொருள் இயலார் நிகழ்த்தும் ஆராய்ச்சிகளில் தொல்லெழுத்து ஆராய்ச்சியும் ஒன்று. இவ்வாராய்ச்சி, மொழிக்கு ஆதார மான எழுத்து வடிவு தொன்மைதொட்டு எங்ஙனம் மாறி வந்துள்ளது என் பதை அறிய முயல்வதேயாம். இத்தகைய ஆராய்ச்சியில், தமிழ்த் தொல் லெழுத்து ஆய்வு கல்வெட்டு எழுத்துக்களாலும் தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ள சில விதிவிலக்குக்களாலும் விளக்கமுறும். கல்வெட்டுக்களில் ஒவ்வொரு காலத்தே எழுத்துக்கள் ஒவ்வொரு முறையில் பொறிக்கப் பெறுதல் ஆராய்ச்சியாளர் கண்கூடு. அங்ஙனமே பரிணமித்து வரும் இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுவாரும் அவ்வக்காலத்தே மேற்கொள் ளப்பெறும் எழுத்து முறைகளுக்கே இலக்கணம் வகுப்பர் என்பதும் வெளிப் படை. இவ்விரண்டு உண்மைகளும் உடன்பாடாயின் கல்வெட்டுத் தொல் லெழுத்து (Palaeography) ஆராய்ச்சி, எழுத்தின் வடிவு முதலியவற்றைப் பற்றிக் கூறும் இலக்கண முடிவுகள், அஃதாவது எழுத்ததிகாரம் (Ortho-graphy) என்பவை இரண்டும் ஒன்றேடொன்று நெருங்கிய தொடர்புடை யவை என்பது போதரும்.

தமிழக வரலாற்றில் கல்வெட்டு எழுத்துக்களைப்பற்றிய ஆராய்ச்சி யினை மேற்கொண்டுள்ள இப்பட்டிமண்டபத்தே பண்டைத் தமிழ் இலக்கண நூல்களுள் எழுத்து அமைப்பினைப்பற்றிக் கூறப்பெறும் செய்திகளைத் தொகுத்துக் கூறுதல் பயனுடைத்தாகும் என்று கருதுகிறேன். ஆதலால் அங்ஙனம் கூறுதலே இக் கட்டுரையின் நோக்கமும் ஆகும்.

மிகப் பண்டைக் காலத்தில் மக்கள் கருத்தைப் பரிமாறிக் கொள்ள விழைந்ததன் பயனாகத் தோன்றி வளர்ந்த மொழிகள் பேச்சளவிலேயே இருந்தன என்பதும், அவற்றிற்கு ஒலிவடிவு இருந்ததேயன்றி வரிவடிவு இல்லை என்பதும், நாளடைவிலேயே வரிவடிவு உருவாயிற்று என்பதும், அஃது உருவாகத் தொடங்கியபின்பும் நாளடைவில் பலவகை மாறுதல்கட்கு உட்பட்டு வந்துள்ளது என்பதும் யாவரும் அறிந்தவை. இந்திய வரலாற்றில் ஆதிக்காலத்தில் சிந்துவெளி மக்கள் ஒருவகை எழுத்தினை அறிந்தனர் என் பதும் ஆண்டுக் கண்டெடுக்கப்பெற்ற சில பொறிகளால் அறிகிறோம்; ஆயினும் அவற்றை ஓதும்வகையையும் அவ்வெழுத்துக்களின் தன்மையையும்

இன்றும் நாம் காணவில்லை. பிறகு ஆரியர் வேதகாலந்தொட்டு ஏறத்தாழக் கி. மு ஆறும் நூற்றுண்டுவரையேனும் நம் நாட்டவர் இலக்கியங்களை ஓதி வந்தனரேயன்றி எழுதி வைக்கவும் படிக்கவும் இல்லை என்பதும் பலரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மைகள். பிறகு இந்நாட்டில் எங்ஙனமோ சில எழுத்து முறைகள் தோன்றின. அவற்றில் பிராமி, கரோஷ்டி, தென்னாட்டு வட்டெழுத்து, கிரந்தம், பிற்காலத் தமிழ் எழுத்து என்பவை சில. பௌலிந்தி என்றொரு எழுத்து வகை உண்டு என்றும் அது புளிந்தரோடு தொடர்புடையது என்றும் சிலர் கூறு நிற்பர். 'லலிதவிஸ்தாரம்' என்னும் பௌத்த நூல் 64 வகை எழுத்து முறைகளைக் கூறி அவற்றுள் திராவிட லிபி என்பது ஒன்று என்றும் கூறுகிறது. பதஞ்சலியார் கூறும் 'யவனுளி' என்பது கிரேக்க லிபியாகின் அந்நாட்டு எழுத்து வகையும் நம் நாட்டின் சில பகுதி களில் கி. மு. சில நூற்றுண்டுகளில் பயிற்சியில் இருந்தது என்பது விளங்கும்.

இவ் வெழுத்து வகைகளில் இந்தியநாடு முழுவதிலும் ஆங்காங்குச் சில வேறுபாடுகளுடன் பயிற்சியில் இருந்தது பிராமி என்பதே. இதுவே கால நிலையில் முதன்மையானதான அசோகர் கல்வெட்டுக்களில் கையாளப் பெற்றதாகும். கி. மு. 3, 2, 1, கி. பி. 1, 2, 3 நூற்றுண்டுகளைச் சேர்ந்தவை யாக நிர்ணயிக்கப் பெற்றுள்ள சில தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் பிராமி யில் பொறிக்கப் பெற்றுள்ளன. ஆனால் எழுத்துப் பிராமியாயினும் மொழி தமிழே என்று ஐயமின்றிப் புலனுகின்றது. பெரும்பாலும் வடமொழிகளை எழுதப் பயன்பட்ட பிராமி தமிழை எழுதப்புகும்போது சில இடர்ப் பாடுகளுக்கு ஆளாதல் இயற்கையே; ஏனெனில் பிறமொழிகளில் காணப் பெருத சில எழுத்து ஒலிகள் தமிழ் மொழியில் உள்ளன. அவற்றில் ழ, ற என்பவை சிறப்பானவை. இவற்றைப் பிராமியில் எழுதப் புகுந்தவர் தம் நெடுங்கணக்கில் அவ்வெழுத்துக்கட்கு வரிவடிவு இன்மையால் அக்காலத்தே தமிழர் எழுதிவந்த எழுத்து வரிவடிவினின்றும் ழகர றகரங்களை எடுத்தாண் டனர் என்று தோன்றுகிறது. "அக்காலத்தே தமிழர்க்குத் தனிப்பட்ட நெடுங்கணக்கின் வரிவடிவு ஒன்று இல்லை. அன்றியும் பிராமியையே சில வேறுபாடுகளுடன் பயன்படுத்தினர். அவ்வகைப் பிராமியே பிற்காலத் தமிழ் வரிவடிவிற்கு அடிப்படை" என்றெல்லாம் ஒரு சாராரால் கூறப்படுகின்றது. அன்றி, வேறு சிலர் "தமிழுக்குத் தொன்றுதொட்டுத் தனி எழுத்து வகை யுண்டு" என்றும் "பிராமியை இந்நாட்டில் வந்து கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்தவர்கள் சில விதேசிகளே" என்றும் "தற்காலத் தமிழின் வரிவடிவு பிராமியினின்றும் பிறந்ததன்று. பண்டைத் தமிழ் எழுத்து வகையி னின்றும் பிறந்ததே என்றும் கூறுவர். இவற்றிடையே உண்மை காண்பது எளிதன்று ஆயினும், இவ்வாராய்ச்சிக்குப் பயன்படக் கூடியதாக ஒரு கருத்துக்கூற விரும்புகிறேன். முதற்கண் தமிழ்மொழி திராவிட மொழி களில் மிகப் பண்டைக் காலத்தே (ஏறத்தாழ 2300 ஆண்டுகட்கு முன்பே) இலக்கியச் செம்மை பெற்றுவிட்ட மொழி. அதில் எழுத்தும், சொல்லும், பொருளும், யாப்பும், அணியும் ஆகிய இலக்கிய மரபுகள் வகுக்கப்பெற்று நிலையெய்தி விட்டன. அந்த நிலையிலும் ஒரு மொழி தனக்கு உரிய வரிவடிவு களைக் கொள்ளாதிருத்தல் வியப்பேயாம். இரண்டாவதாக, தற்காலத்தில் நாம் எழுதும் தமிழ் எழுத்துக்களிற் பல பிராமி எழுத்துக்களின் பரிணமங்கள்

போலத் தோன்றுதல் வெளிப்படை. மூன்றுவதாக, இதுவரை நமக்குக் கிடைத்துள்ள முழுமையான தமிழிலக்கியங்கள் யாவற்றுள்ளும் பழமை யானது என்று பெரும்பான்மை அறிஞரால் கருதப்பெறும் தொல்காப்பியத் தில் எழுத்தின் ஒலிவடிவைப் பற்றியேயன்றி வரிவடிவைப்பற்றியும் இலக் கணம் வகுக்கப்பட்டுள்ளமை காணப்பெறும். அப்பண்டைய நூல் தமிழ் எழுத்துக்கட்கு வரிவடிவு கூறுதலான் தமிழ் எழுத்துவகை யொன்று இருந் திருத்தல் சாலும். அது தனிப்படவோ பிராமியோடு கலந்தோ பரிணமித்துப் பிற்காலத்தே வரலாற்றுக் காலத் தமிழ் எழுத்தாக உருமாறியிருத்தல் கூடும். அன்றி, பிராமியே இந்தியாவில் தோன்றிய எழுத்து வகையன்று, மெசபொடேமியா, பினீசியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற ஒரு எழுத்து வகையே என்பார் கூற்று வலியுடைத்து. அங்ஙனமே அந் நாடுகளோடு ஆதிக்காலந்தொட்டுப் பலவகையானும் தொடர்புகள் கொண்டிருந்த தமிழர் அதே மொழி வகையைத் தாமும் தனிப்பட்ட முறை யில் ஏற்றுக்கொண்டு பயின்று வந்தனர் எனல் பொருந்துவதாகும். ஆரியர் இந்நாட்டின் வடக்கே குடியேறிய காலத்திற்கு முன்பே தமிழர் மத்திய தரைக் கிழைக்கரை நாடுகளினின்றும் தென்னிந்தியா வந்தடைந்து விட் டனர் என்பதற்குப் பல சான்றுகள் மேலும் மேலும் தோன்றி வருகின்ற இக் காலத்தில் எமது மேற்கூறிய கருத்து வியப்பை யளிக்காது என்றே கருது கிறோம். அஃதெங்ஙனமாயினும், பழைய தமிழ் நூல்களில் தமிழ் எழுத்துக் களின் வரிவடிவைப் பற்றிய கூற்றுக்களை ஆராய்வோம்.

யாப்பருங்கல விருத்தி முதற்சூத்திர உரையில் ஆசிரியர் அமித சாகரனார்* 'எழுதப்படுதலின் எழுத்தே யவ்வெழுத்து, அசைத்திசை கோடலின் அசையே" என்று மேற்கோள் காட்டினாராயினும், 'எழுதப் படுவது எழுத்து' என்றாயிற்று என்றும் எழுதுதல் என்பது ஒலிக்கு வரிவடிவம் அளித்தல் என்றும் கூறுதல் முற்றிலும் உண்மையாகாது. அதாவது எழுத்து என்பதை (Writing, Script) என்னும் சொற்களோடு சமமாக்க முடியாது. 'அகர முதல எழுத்து' என்றவிடத்துஅகரம் என்னும் ஒலியைக் கூறினரே யன்றி வரிவடிவைக் கூறவில்லை; ஏனெனில் 'அ' என்னும் வரிவடிவினின்றும் பிற வடிவுகள் தோன்றின எனல் பொருந்தாது. அக்குறளில் உள்ள எடுத்துக் காட்டுவமை காரண காரியத் தொடர்பினை எடுத்துக்காட்ட வந்தது. எவ்வுயி ருள்ளும் இருந்து அதன் காரணமாயும் இறைவன் இருப்பதுபோல், அகரம் எல்லா எழுத்திலும் இயல்பாக அமைந்திருந்து அதன் ஒலியையும் இயற்றுதற் கருத்தாவாக அமைகிறது என்றார். 'இதனையே பரிமேலழகரும் 'நாத மாத்திரையான இயல்பு' என்று கூறிப் போந்தார்.

"கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
யுட்கொளற் கிடும் உருவாம் வடிவெழுத்தே"

என்று ஒரு பழைய மேற்கோள் வருகிறது. வடிவெழுத்து, ஒலியெழுத்து என்று பிரித்துக் கூறுவதினின்றும் எழுத்து என்பது ஒலிக்கும் வடிவுக்கும்

---

* இப்பெயரை அமுதசாகரனர், அமிர்தசாகரனர் என்றெல்லாம் எழுதுதல் தவறு; அமிதசாகரனர் என்பதே உண்மைப் பெயர் என்பது அந்நூற்பாயிரத்தின் கண்ணே 'அளப்பருங்கடற்பெயர் அருந்தவத்தோனே' என்பதால் எளிதிற் பெறப்படும்.

பொது என்பதும் விளங்கும். யாப்பருங்கலத்தில் " மாலைமாற்றே " என்று தொடங்கும் ஒழிபியற் சூத்திரத்தின் கீழ் உரையில் "உருவே, உணர்வே. ஒலியே தன்மையென, இருவகையெழுத்தும் ஈரிரண்டாகும்" என்றமையானும், அதனுள் உருவெழுத்தினை விளக்கு முகத்தான்,

" காணப்பட்ட வுருவமெல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினைபோல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்,"

என்றமையானும் எழுத்திற்கு உருவும் உண்டு, ஒலியும் உண்டு என்பதும் அவ்விரண்டிற்கும் எழுத்து என்பதே பெயர் என்பதும் பெற்றும். நன்னூற்கு உரைவகுத்த மயிலைநாதரும் சங்கரநமச்சிவாயரும் எழுதப்பெறுவது எழுத்து' என்றுது 'ஒலியே எழுத்து' என்று கூறி அது ஆகு பெயரால் வடிவெழுத்தைக் குறிக்கும் என்றனர்.

'எழுத்து' என்பது நெடுங்கணக்கின் ஒலி வடிவுகளையேயன்றி ஓவியத்தையும் குறிக்கும் என்பது 'எழுத்து நிலை மண்டபம்' (பரிபாடல் 19), 'கருங்கட்டெய்வம் குடவரை எழுதிய' (குறுந்தொகை 89) என்பவற்றால் விளக்கமுறும். தவிர என்னிற்கும் க, உ, ங, ச, ரு என வரிவடிவு உண்டு' 'எட்டேகால் லட்சணமே......' என்று இடைக்கால ஔவை கூறிய காலத்திலேனும் இவையுண்டு. இது வேறு. நெடுங்கணக்கு எழுத்து வேறு என்பார் "என்னென்ப ஏனை எழுத்தென்ப" என்றார் (குறள் 392).

சிலப்பதிகாரத்தில் 'கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடம்', 'கண்ணெழுத்தாளர்' (வஞ்சிக் காண்டம் 26: 137, 170) என்னும் சொல்லாட்சிகள் காணப் பெறுகின்றன. இவற்றிற்கு உரை வகுத்த அரும்பத உரைகாரர், "கண்ணெழுத்தாளர்: திருமுகம் எழுதுவார்" என்றார். ஆயினும் பிற்கால ஆராய்ச்சியாளரான மு. இராகவ ஐயங்கார் 'கண்ணெழுத்து என்பது ஒருவகைச் சித்திர எழுத்து' என்று உரைத்தார். 'கண் எழுத்து' என்பதை உவமைத் தொகையாக்கி வட்டெழுத்தாகக் கூறுதலும் அமையுமாதலானும், சித்திர எழுத்து நம் நாட்டில் எங்கும் எப்பொழுதும் பயிற்சியில் இருந்ததாக நாம் கேளோமாதலாலும் கண்ணெழுத்து யாது என்பது இன்னும் ஆராய்ச்சிக்கு உரியதே. அஃது ஒரு வகைக்குழுவுக் குறியாகவும் அமையலாம்.

இனித் தொல்காப்பியத்தில் பண்டைத் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவைப் பற்றிக் கூறியவற்றைக் காண்போம். அங்ஙனம் செய்யுமுன் அந்நூல் சங்க இலக்கிய காலத்திற்குச் சற்று முந்தியது என்று காணவேண்டும். அது பின் வருங் காரணங்களாலும் பிற காரணங்களாலும் காணப்பெறும்.

1. முதற்கண் :

" கதநம பவெனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே"

(தொல். எழுத். 61).

என்று கூறிய ஆசிரியர் அடுத்து

'' சகரக் கிளவியும் அவற்ருேர் அற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே ''

(தொல். எழுத். 62).

என்றுங் கூறினர். அதாவது 'சகரமாகிய தனிமெய் அகர ஐகார ஔகாரம் என்று சொல்லப்பட்ட மூன்று உயிரும் அல்லாத இடத்துப்பிற எல்லா உயிரோடுங்கூடிய மொழிக்கு முதலாம்' என்றவாறு; 'சமன் செய்து சீர்தூக்கும்' என்புழி அதனை வடசொல் என்று மறுப்பினும் சட்டி, சமழ்ப்பு, சவட்டல் என்பவை சங்க இலக்கியத்திலும் அதற்குப் பின்னரெழுந்த இலக்கியங்களிலும் ஆளப்பெறுவனவாதலின் அவ்விலக்கணவிலக்கு இவ்விலக்கிய காலத்திற்கு முந்தியது என்பது போதரும்.

2. இரண்டாவதாக:

'' ஞநமவ என்னும் புள்ளி முன்னஞ்
யஃகா னிற்றல் மெய் பெற்றன்றே ''

(தொல். எழுத். 27).

என்னும் சூத்திரம் 'ஞநமவ என்னும் தனிமெய்களின் முன்னர் யஃகான் நிற்றல் கூடும்' என்று பொருள்படும். இதற்கு உரைத்த நச்சினர்க்கினியர்: ''இங்ஙனம் ஆசிரியர் சூத்திரம் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உள என்பது பெற்றும். அவை இக்காலத்து இறந்தன'' என்ருர். இக்காலம் என்பது சங்க காலத்தையும் அடக்கிற்று. இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் காட்டிய உரிஞ் யாது - பொருந் யாது முதலிய இருமொழிப்புணர்ச்சி உதாரணங்களைக் குற்றங்காட்டி முறையே நீக்கினர் நச்சினர்க்கினியர். அவை ஒரு மொழி உதாரணங்களாகவே அமைதல் வேண்டும். அவற்றிற்கு உதாரணங்காட்டல் ஆகாமையின் அவை இறந்தன என்று கொள்ளுதலே பொருந்தும். ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தே ஞ்யாய, ம்ய. வ்ய முதலிய வடசொற்களைப் போன்ற தமிழ்ச் சொற்கள் இலக்கியத்தில் பயின்றிருத்தல் வேண்டும் என்று காண்கிறது.

3. மூன்ருவதாக:

'' மஃகான் புள்ளி முன் வவ்வுந் தோன்றும் ''

(தொல். எழுத். 28).

என்பதும் மேற்காட்டிய சூத்திரம் போன்றது. மகரமாகிய தனிமெய் முன் பகர யகரமே யன்றி வகரமும் வந்து மயங்குவது, நச்சினர்க்கினியர் கூறுவது போலப் பிற்காலத்து இறந்தது.

4. நான்காவதாக:

''ளஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்''

(தொல். எழுத். 24).

இதில் ளஃகான் முன்னர் வத்தோன்றுதற்குச் செல்வம், கள்வன் என்னும் உதாரணங்கள் உண்டேனும் யகரம் தோன்றற்கு உதாரணமின்று என்க. அது தொல்காப்பியர் காலத்தே இருந்து பிறகு இறந்தது என்பது கருத்து.

5. ஐந்தாவதாக: தொல்காப்பியம் மரபியலில் 'மூடுங்கடமையும் யாடலபெறு' (தொல். பொருள். 619) என்புழி மூடு, கடமை என்பவை யாட்டின் பெண்பாலைக் குறிக்கும் என்ற விதியும் பிற்காலத்து இலக்கிய ஆட்சியில் காணப்பெறுதது.

6. ஆறுவதாக: அங்ஙனமே, ''சேவற் பெயர்க்கொடை சிறகொடு—சிவணும், மாயிருந் தூளி மயிலலங் கடையே'' என்றவிடத்துக் குகிரையின் ஆண்பாலைக் சேவல் என்னும் வழக்குப் பெறப்படுகின்றது (தொல். பொருள். 603). அவ்வழக்கும் பிற்காலத்தே விழ்ந்தது.

தொல்காப்பியத்தின் தொன்மையை நிறுவப்பிற பல காரணங்களும் கூறலாமாயினும், ஈண்டைக்கு இவைபோதும் என்று அமைவோம்.

அந்நூல் 'எழுத்து' என்னும் சொல்லால் தொடங்குகின்றது. முதல் அதிகாரத்தின் முதல் இயலின் முதற் சூத்திரத்தின் முதற்சொல் 'எழுத்து' என்பது:

> '' எழுத்தெனப்படுப
> அகரமுதல் னகர இறுவாய் முப்ப∴தென்ப
> சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே''.

இங்கும் 'எழுத்து' என்றும் சொல் எழுத்து என்றும் ஓசையைக் குறிக்கும் என்றும், அது உடம்பொடு புணர்த்தல் என்னும் இலக்கணத்தான் உருவாதல் நிலைபெறும் என்றும் பொருள் கண்டார் நச்சினார்க்கினியர். அன்றியும் 'எழுத்தெனப்படுப அகரமுதல' என்று ஓதினுற் போதாதோ 'னகரஇறுவாய்' என்றும் கூறுவானேன் என்றற்கு ''அகரமுதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழெழுத்தே கூறுகின்றார் என்பது உணர்தற்கு 'னகரவிறுவாய்' என்றார்'' என்று விளக்கினார் உரைகாரர். ஆதலின் தொல்காப்பியர் காலத்தே தமிழுக்கு ஒரு தனி நெடுங்கணக்கு வரிவடிவு உண்டு என்பது அநுமான வகையாற் பெறப்படும்.

இனிச் சில எழுத்துக்கட்குத் தொல்காப்பியர் வடிவம் கூறுமாற்றைக் காண்போம்:

'புள்ளி' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் இரு பொருள்படக் கூறுகின்றார். ''அவைதாம், குற்றிய லிகரம் குற்றிய லுகரம் ஆய்தமென்ற, முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன'' [தொல். எழுத். 2) என்புழி மூன்று புள்ளி வடிவாக ஆய்த எழுத்து எழுதப்படுதலைக் கூறினர். இச்சூத்திரத்திற்கு ''குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் என்னும் மூன்றுவகை எழுத்துக்களும் புள்ளியோடு நிலையும்'' என்று உரைத்தல் சிவஞான முனிவர் மரபு. மற்று ''மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்'' (15) என்புழி தனி மெய்யெழுத்துக்கள் புள்ளி சேர்த்து எழுதப்படுதலைக் கூறினர். இவை வேறாக, ''ட ற ல ள வென்னும் புள்ளி முன்னர்க் க ச ப வென்னும் மூவெழுத் துரிய'' (23), ''மகொன் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்'' (28), ''புள்ளி மயங்கியல்'' என்னுமிடங்கள்தோறும் எழுத்தின் அருகே வரையப்படும் புள்ளியைக் கூறாது தனி மெய்யெழுத்தினையே புள்ளி என்றார். இது ஆகுபெயர் என்க. தொல்காப்பியர் 'புள்ளி' என்னும் சொல்லை ஆளும்போது வரிவடிவான

புள்ளியைக் குறிக்கின்றனரா அன்றித் தனிமெய்யெழுத்தைக் கூறுகிருரா என்பதை உணர்தல் வேண்டும்.

இனி ஆசிரியர் தனி மெய்யெழுத்திற்கு வடிவு கூறுகின்ருர் : ஆசிரியர்

"புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே" (17)

என்ருர். இதில் தனி மெய் எழுத்துக்கள் புள்ளி பெற்று இயங்குவதும், அவை உயிர்மெய் ஆகும்போது அகரமேறின் புள்ளி நீங்கி முன்னைய வடிவோடு நிற்றலும், பிறவுயிர்கள் ஏறும்போது வடிவுமாறி நிற்றலும்' கூறினர். இச்சூத்திரத்திற்கு உரை வகுத்த நச்சினர்க்கினியர் : 'உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கு கூ முதலியன கோடு பெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறுபுள்ளியை வளைத்தெழுதினர். கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியும் கோடும் உடன் பெற்றன" என்ருர். இவ்வுரையாசிரியர் கூற்றினின்றும் மூன்று விசேட முடிவுகள் விளங்குகின்றன.

(1) முற்காலத்தே தனி மெய்யைக்குறிக்க எழுதிய புள்ளி அவ்வெழுத்தின்மேல் இடப்பட்டது; (2) புள்ளி நீங்கிய தனி மெய்யின் நெடிலைக் குறிக்க அவ் எழுத்தின் அருகே ஒரு புள்ளி யிட்டனர்; அதுவே பிற்காலத்தில் காலாக எழுதப்பட்டது; (3) அன்றியும் கொ கோ ஙொ ஙோ முதலிய எழுத்துக்களுக்கு அருகே நாம் இப்போது இடும் கால் முன்பு புள்ளியாக இடப்பட்டது. அக்காலத்தில் அருகே இட்ட புள்ளியைத் தற்காலத்தே சொற்ருெடர் முற்றுப் பெறுவதைக் குறிக்க இடும் முற்றுப்புள்ளியோடு மயங்கிக் கருத இடமில்லை; ஏனெனில் முற்றுப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகள் வீரமா முனிவர்க்கு முற்பட்ட தமிழர் அறியார். ஆயினும் அருகே யிட்ட புள்ளி நச்சினர்க்கினியர் காலத்திலேயே காலாக மாறிவிட்டது என்பது அவர் கூற்ருலேயே அறிகிருேம்.

இனி,

"அரையளவு குறுகள் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை" (13)

என்று கூறி.

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே" (14) என்றும் ஆசிரியர் கூறினர்.

இப்பிற் சூத்திரத்திற்குப் "புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி நகரத்திற்கு வடிவாகும்" என்ருர் நச்சினர்க்கினியர், என்று கூறிய தோடு அமையாது" எனவே புறத்துப் பெறும் புள்ளியாவது மெய்கட்குக் கூறும் புள்ளி" என்றுங் கூறினர். கூறவே நச்சினர்க்கினியர் கூற்றுப்படி.

கப்பி கப் பி எனவரும் என்பதாயிற்று. ஆயினும் ''உள்ளாற் பெறும் புள்ளி குறுகிய மகரத்திற்கு அதாவது மகரக் குறுக்கத்திற்கு வடிவாம்'' என்பதேயச்சூத்திரத்தின் நேர் பொருளாம் என்று தோன்றுகிறது. அதாவது,

கப்பி கம்மி போன்ம வரும் வண்ணக்கன் (மகரக்குறுக்கம்) எனவரும் என்க. ''மகரம் அதிகாரப்பட்டு வருதலின் பகர மகரங்களினிடையே வடிவு வேற்றுமை கூறினர்'' என்று உரைப்பதைவிட ''மகரக்குறுக்கம் அதிகாரப் பட்டு வருதலின் அதற்கு வடிவு கூறினர்'' எனவே பொருந்துவதாம். மேலே நின்ற புள்ளி இழிந்துவந்து உள்ளே நிற்றலே குறுக்கத்தைக் குறித்தது போலும்:

இனி உயிரெழுத்துக்களில்

''எகர ஒகரத் தியற்கையு மற்றே'' (16) என்றதால் ஏகார ஓகாரங் கள் புள்ளியில்லாமலும் எகர ஒகரங்கள் புள்ளியோடும் எழுதப்பட்டன என்பது விளங்கும். அதாவது,

எ் எ ஐ ஒ் ஒ என வடிவு காண்க.

ஈதிவ்வாறாக, நன்னூற்கு உரைவகுத்த சங்கர நமச்சிவாயப் புலவர், அந் நூலில்

''தொல்லை வடிவினவெல்லாவெழுத்து·மாண்
டெய்தும் எகர ஒகர மெய்புள்ளி'' (98)

என்ற சூத்திரத்திற்கு உரை கூறுங்கால் உயிரெழுத்துக்களில் எகர ஒகரங்கள்

எ் எ; ஒ் ஒ; எ்க எக; கொ் கொ; எனவரும் என்றார்.

தனி எகர ஒகரங்களேயன்றி உயிர் மெய்யாக வரும் எகர ஒகரங்களுக்கு இப் புள்ளி விதி பொருந்துமா என்பது ஆராய்ச்சிக்குரியது; பொருந்தாது என்று யாம் கருதுகிறோம்.

''மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்'' (46) என்றதால் மேற்புள்ளி நீங்கிய தனிமெய் எழுத்துக்கள் இயல்பான அகரத்தோடு சேர்ந்து ஒலிக்கும் என்பதும் பெறப்பட்டது. க் க (க் - அ) எனவரும்.

இங்ஙனம் பண்டைத்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திலும், இடைக்கால இலக்கண நூல்களான யாப்பருங்கால விருத்தி, நன்னூல் முதலியவற்றாலும், உரையாசிரியர்கள் உரைகளாலும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவு தொடக்கத்தே இங்ஙனம் இருந்தது என்று ஓரளவு உணர முடி கின்றது.

கல்வெட்டுக்களின் மூலம் கொங்கு நாட்டு வரலாற்றில் சில புதிய கருத்துக்கள்.

வித்துவான் செ. இராசு
சி. எஸ். ஐ. உயர்நிலைப்பள்ளி, ஈரோடு

1. நன்மங்கலஞ் சிறக்க

கல்வெட்டுச் செய்திகளைக் கல்லில் வெட்டும்போது மங்கலச் சொல் லைக் கூறிய பின்னரே செய்தியைக் கூறுவர். மங்கலச் சொற்கள் ஸ்வஸ்திஸ்ரீ, சுபமஸ்து, நமசிவாய, சித்தம், நமோ புத்தாய என எழுதப்பட்டோ அல்லது உ, முக்குடையின் அடையாளமிட்டோ கல்வெட்டின் கருத்திற்கேற்ப இருக்கும்.

ஆதியூர் ஆதீசுவரர் கோயில், பாண்டியர் கல்வெட்டில் 'ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க' என்ற தொடர் காணப்படுகிறது. (தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் 998) பருத்திப்பள்ளி அமிர்தமொழீசுவரர் கோயில், குன்றத்தூர் குன்றமுடையார் கோயில், பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயில் ஆகிய இடங்களில் உள்ள பாண்டியர் கல்வேட்டுக்களில் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கலச்சொல் இன்றி அதன் மொழி பெயர்ப்பாகிய 'நன்மங்கலஞ் சிறக்க' என்ற தொடர்மட்டும் காணப்படுகிறது.

2. நல்ல தொடர்

குன்னத்தூர் லட்சுமிநாராயணர் கோயிலில் சுந்தரபாண்டியதேவனின் 27 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றுள்ளது. இக் கோயில் ஸ்ரீ பண்டாரத்திலிருந்து அருகில் உள்ள வீரசோழவளநாட்டு முகுந்தனூரான விக்கிரம சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் 'அணைக்குக் கல்லிட 260 பணம்' கடன் பெற்றனர். ஆண்டொன்றுக்குப் பணம் இருபத்தாறும், நெல் பதின் மூன்று கலமும் வட்டி கொடுப்பதாகச் சொன்னார்கள். இவ் வட்டி மூலம் திருவாதிரை நட்சத்திரத்தில் குன்னத்தூர்ப் பெருமாளுக்குத் தீர்த்தம் கொண்டாடும் விழா நடத்தவும் அடியவர் சிலருக்கு உணவிடவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகுந்தனூர்ச் சபையார் வட்டி கொடுக்காவிட்டால் திருவாதிரை விழா நடக்காது. அடியவர்கட்கு உணவிடவும் முடியாது. எனவே 'இப் பணமும் நெல்லும் குடுக்குமிடத்து விளையிலும் விளையாதொழியிலும் குடுப் போமாகவும்' என்று கூறியுள்ளார்கள்.

பழமங்கலம் நடுகல் கல்வெட்டில் சில—''கற்பொறி'' என்ற பெயரால் கூறப்படுகிறது. இச் சொற்றொடர்கள் கல்வெட்டில் அரிதாகக் காணப்படும் சொற்றொடர்களாம்.

3. *சமயப் பொறை*

கொங்கு நாட்டில் காணப்படும் பல கல்வெட்டுக்களின்மூலம் மக்கள் சமயப் பொறையுடன் வாழ்ந்தனர் என்பதை அறியலாம்.

சர்க்கார் பெரியபாளையத்திலுள்ள வீரபாண்டியன் கல்வெட்டொன்று சுக்ரீவேசுவரனுக்கு அளிக்கப்பட்ட மானியத்தில் ஒரு பகுதி 'சமண சந்தி யுள்ளிட்ட வேண்டும் வெஞ்சனுதிகளுக்கும் செலவாக்கப்படவேண்டும்' என்று கூறுகிறது. (தெ. இ. கோ. சா. 261).

சேவூர்க் கல்வெட்டொன்றில் 'இந்தச் சீர்மையில் உள்ள சிவதலம், விட்டுணு தலம், குமாரதலம், அமனீசுவரசுவாமிதலம், தேவதானம் பிரம தேயம் நடத்திக்கொண்டு' என்ற தொடர் காணப்படுகிறது. (தெ. இ. கோ. சா. 1.) அமனீசுவரர் என்ற பெயரால் கொங்கு நாட்டவர் இன்றும் சமணக் கோயிலைக் குறிப்பர்.

கொளாநல்லி குழவியம்மன் கோயில் மகாமண்டபத்தைக் 'குழாநிலை காணியாளரில் கண்ணகுல கோத்திரம் திருமலை' கட்டினுர். அதைக் குறிக்கும் கல்வெட்டு 'சிவமயம்' என்று தொடங்கி 'ராமஜெயம்' என்று முடிகிறது.

ஈரோட்டில் சைவ வைணவக் கோயிலுக்கு ஒற்றுமையாக மானியம் விடப்பட்ட செய்தி கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றன. (தெ. இ சா. தொகுதி 4—414; தெ. இ. கோ. சா 245) 'ஸ்ரீமத் வீர வெங்கடபதிராயர் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற சாலிவாகன சகாப்தம் 1501...மேல் கரைப் பூந்துறை நாட்டுக் காஞ்சித் துண்டத்து ஈரோட்டில் தொண்டீசுவர முடைய தம்பிரானுர்க்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் வீரப்ப நாயக்க ஐயன் தன்மமாக அவிஸ்பலிக்கும், அர்ச்சனைக்கும் இரண்டு கோயிலுக்கும் சமமாக இரண்டு திருநாளும் நடப்பதாக தொண்டீசுரமுடையார் பள்ளி கொண்ட பெருமான் சன்னதியிலே தாராபூர்வமாகத் தாரை வார்த்துக் குடுத்தோம்'.

4. *பாடல் சாசனங்கள்*

கொங்கு நாட்டுச் சாசனங்களில் புலவர்கள் பெயரோ, அல்லது நூலைப்பற்றிய குறிப்போ, பாடல்களோ இருப்பதாக விரிவாக ஆய்ந்து கூறினரில்லை.

தாரமங்கலம் ஏழும்பேசுரர் கோயிலில் கெட்டி முதலியாரைச் சிறப் பிக்கும் பாடல் ஒன்றுள்ளது. எண்ணலங்காரம் அமைந்த கட்டளைக் கலித் துறைப் பாடல் அது.

> ''செங்கதிர் பன்னிரண் டீசர் பதினொன்று திக்கும்பத்து
> கங்கையும் ஒன்பது வெற்பெட் டெழுகடல் கார்த்திகை ஆறு
> ஐங்கணை நான்மறை முச்சுடர் சாதி யவையிரண்டே
> மங்கை வரோதயன் கெட்டி முதலியார் வார்த்தைஒன்றே!

நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமிகு. ந நல்ல சேனு பதிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்ருடியார் அவர்களின் குலதெய்வ மாகிய ஆனூர் அம்மன் கோயிலில் பாடல் சாசனம் ஒன்றுள்ளது. 'முன் மண்டபம் வேலே செய்த சிற்பி சோமசுந்தரன் பாடியது' என எழுதப்பட் டுள்ளது.

'உயருபுகழ் ஆனூர்வாழ் உத்தமிமண் டபம்கட்ட உவந்துவந்து
பயிரகுலப் பெரியோர்கள் பணம்மட்டும் தான்கொடுத்தார்
பணியாளர்க்கு
வயிறுநிறையச்சோறும் வாய்க்கு வெற்றிலேபாக்கும் வாங்கித்தந்து
தயிரொடு வேளேயிட்ட தர்மமிது அழகன்சர்க் கரையதாமே'—

என்பதாகும் அப்பாடல்.

வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயிலிலும், உத்தமசோழபுரம் கரபுரநாதர் கோயிலும், (தெ. இ. சா. தொகுதி 4—457) ஈரோடு திருத் தொண்டீசுவரர் கோயிலிலும், நத்தக்காரையூர் ஜெயங்கொண்டீசுவரர் கோயிலிலும் பிடாரியூரிலும் சுவைமிகுந்த பல பாடல் சாசனங்களேக் காணலாம்.

வெள்ளோட்டில் 'அழைப்பிச்சான் பாட்டு கலம்பகம்' என்ற கல் வெட்டுத் தொடரும், பேரூர்ப் பட்டீச்சுரத்தில் 'பாரதப்புரமாக' நிலம் விடப்பட்ட செய்தியும் (தெ. இ சா தொகுதி 5—223) கரூர்ப் பசுபதீசுரர் கோயிலில் உள்ள குலோத்துங்க சோழனின் 24 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் 'பள்ளுப் பாடல்' என்ற தொடரும் காணப்படுகின்றன. (தென்னிந்தியக் கோயில் சாசனம் 1,)

ஆத்தூர் அருகே கருங்காட்டுக் கல்வெட்டில் 'அவ்வையாரம்மை சுவாமியார்க்கு' கள்ளரைய அன்னியப்பரும், நாலு கரை நாட்டாரும் மானி யம் விட்ட செய்தி காணப்படுகிறது. (தெ. இ. சா. தொகுதி 4—457) 'கபிலர் மலேயும்' கொங்கு நாட்டிலுண்டு.

5. இலக்கியச் செய்தி கல்வெட்டால் உறுதிப்படுகின்றது

(அ) கொங்குநாட்டின் பூர்வீகக் குடிகள் வேட்டுவர் குலப் பெருமக் கள். இன்று பெரும்பான்மையினராக உள்ள வேளாளர் குலத்தினர் தொண்டை நாட்டிலிருந்து சோழநாடு வழியாகக் கொங்கில் குடியேறியவர் கள். இதனேக் கள்ளழகர் அம்மானே, குன்றுடையாக் கவுண்டன் கதை, காணிப்பாடல் முதலியவற்ருல் அறிகின்ருேம். பின்வரும் கல்வெட்டால் இச் செய்தி உறுதிப்படுகின்றது.

வடபரிசாரநாட்டு அவையில் 'வெள்ளாள நாட்டாரும்' பூர்வ நாட்டா ரும், இருந்ததாகச் சேலூர் வேங்கடரமணசாமி கோயில் கல்வெட்டுக் கூறும் (தெ. இ. கோ. சா.:211) பூர்வ நாட்டார்—வேட்டுவர் குலத்தினர் ஆவர்.

(ஆ) விசயமங்கலத்தில் இன்று ஒரு குளமும் நல்ல நிலேயில் இல்லே. ஆனல் அருணகிரிநாதர் இவ்வூர் சென்று

'விறல் சுரும்புநற் கிரிதேசி பாடிய
விரைசெய் பங்கயப் பூவோடை மேவிய
விசயமங்கலத் தேவாதி தேவர்கள்—பெருமாளே!'

என்று பாடுகின்றார். இது உயர்வு நவிற்சியல்ல. உண்மையே என்பது இரு கல்வெட்டுக்களால் உறுதிப்படுகின்றது.

கி. பி. 1281 ஆம் ஆண்டு வீரபாண்டியன் காலத்தில் அவ்வூர் வடக்கு வாசலில் இருந்த வாணக்குளம் திருத்திப் பழுது பார்க்கப்பட்டது. (தெ. இ. கோ. சா. 267) கி. பி. 1342-ல் வீர வல்லாளதேவன் அங்கு ஒரு குளத்தை வெட்டியதாக அவ்வூர் நாகேசுரசாமி கோவில் கல்வெட்டுக் கூறுகின்றது. (தெ. இ. கோ. சா. 268).

(இ) ஈரோடு அருகே பவானியிலிருந்து 57 கல் ஓடி நொய்யலாற்றில் கலக்கும் காலிங்கராயன் கால்வாயை வெட்டியவர் காலிங்கராயர். அவர் பணியைப்பற்றிக் கொங்குமண்டல சதகம், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை, சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ், ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு, புதுநகர் நல்லண்ணன் காதல் முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன.

இச்செய்தி பொள்ளாச்சி அருகேயுள்ள அகத்தூர் அம்மன் கோயிலில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டு மூலம் உறுதிப்படுகின்றது. காலிங்கராயன் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் இக்கால்வாய்த் திருப்பணியைச் செய்தான் என்றும் அவன் பரம்பரையினர் இன்றும், பொள்ளாச்சி அருகேயுள்ள ஜமீன் ஊத்துக்குளியில் காலிங்கராயர் என்ற பெயருடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும் இக்கல்வெட்டால் அறிகின்றோம்.

6. இராசகேசரியும் பரகேசரியும்

தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவிய விசயாலயன் காலமுதல் பரகேசரி, இராசகேசரி என்ற பட்டங்களைச் சோழமன்னர் மாறி மாறிப் புனைந்து கொண்டனர். விசயாலயன் பரகேசரி; அடுத்த ஆதித்தன் இராச கேசரி ஆனான். கொங்கு நாட்டில் பல கல்வெட்டுகள் அரசன், பெயரின்றி இராசகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களுடன் இருக்கின்றன; அல்லது எல்லா அரச மரபினரும் பெற்ற பொதுப் பெயராகிய கோநேரின்மை கொண்டான் என்ற பெயரோடு இராசகேசரி, பரகேசரி இணைந்து வருகின்றது. (தெ. இ. கோ. சா. 229)

சோழநாட்டு மரபினை எண்ணி நாம் இக்கல்வெட்டுக்களைச் சோழர்களுடையது என்று மட்டும் கொள்ளக்கூடாது. கொங்கு நாட்டில் சோழர்கள் மட்டுமின்றிச் சேரரும், பாண்டியரும் இப்பட்டப் பெயர்களைத் தாங்கினர். (தெ. இ. கோ. சா. தொகுதி, 192,212, 213,227 தொகுதி 998: தெ. இ. சா. தொகுதி 5,256)

ஈரோடு திருத்தொண்டீசுரத்தில் உள்ள கல்வெட்டு சேரமன்னன் இரவி கோதையினுடையது. (தெ இ. சா. தொகுதி 4·413) "கோவிராச கேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இரவிகோதையான கோக் கலிமுக்கற்குக் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு நாலாவது பூவாணிய நாட்டு ஆவணிப் பேரூரில் வெள்ளாளன் பிள்ளர்களில்

சொக்கன் விக்கிரம சோமயரையன் தன் மகன் அக்கன் சோமன் மாமணி யாழ்வார் திருநாமஞ்சாத்தினமையால் பேருடைச் சிறப்பு இவனுக்கு'' என வரும் தொடர்களால் சேரன் இராசகேசரி ஆனதை அறிகின்றோம்.

பள்ளிகொண்டருளிய பெருமாள் கோயில் கல்வெட்டில் ''கோவிராச கேசரிபன்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு இருபதாவது'' என வருவதால் பாண்டியன் இராசகேசரி ஆனதை அறிகின்றோம். (தெ. இ. கோ, சா. 246)

சேவூர்ப் பெருமாள் கோயிலில் ''கோப்பரகேசரிபன்மரான சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு 27 ஆவது'' எனவரும் தொடரால் சுந்தர பாண்டியன் பரகேசரி ஆனதை அறிகின்றோம். (தெ. இ. கோ, சா. 215)

7. சில செய்திகள்

(அ) கொங்கு நாட்டிற்குக் 'கொங்கு' என்று பழம்பெரும் ஊரிலேயே பெயர் ஏற்பட்டது.

(ஆ) கொங்கு நாட்டில் உள்ள பெருமாள் கோயில்களை 'மேற் கோயில்' என்று அழைத்தனர்.

(இ) ஒரு இடத்திற்குப் பெயரிட்டால் ஊரவர் அனைவரும் அறியும் படியாகப் பொது இடத்தில் வந்து பெயர்கூவி அறிவித்தனர். (''பூலாஞ்செய் என்று பேர் கூவப்பட்ட நிலம்'').

(ஈ) இங்கிருந்த வலங்கை, இடங்கைப் பிரிவினரை இன்றைய வலது சாரி, இடதுசாரி என்ற பெயரால் அழைப்பினும் பொருந்தும்.

(உ) கொங்கு நாட்டு ஊராட்சிமுறை (நாடு, காணி) சோழநாட்டு வாரியங்களைப் போன்றது. ஆனால் வாரியங்களைக் காட்டிலும் அதிக உரிமையுடையது. இன்றைய தலசுய ஆட்சிமுறையைப் போன்றது.

தமிழ்க் கல்வெட்டாராய்ச்சியும் தமிழக வரலாறும்

சி. கோவிந்தராசன்,
தமிழ்ப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

தமிழ்க் கல்வெட்டுகள் என்னும் பொதுமையால் கல்வெட்டுகள் செப்பேடுகள் ஓலைச்சுவடிகள் ஆகியவற்றிலுள்ள எழுத்துக்களைப் பற்றியும், செய்திகளைப் பற்றியும், இவற்றையும் கருவியாகக் கொண்டு வளர்க்கப் பெற்ற தமிழக வரலாற்றினைப் பற்றியும், கல்வெட்டாராய்ச்சித் துறையின் ஆக்கப்பணி பற்றியும், யான் அறிந்த அளவில், சுருக்கமாக, இக்கருத்தரங்கில் எடுத்துக் கூறுவதே நோக்கமாகும்.

1. தமிழெழுத்துக்களின் வரலாறு

தமிழக வரலாற்றுக்குரிய கருவிகளுள் ஒரு பகுதியாகும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள் ஆகியவற்றில் காணப் பெறும் பழைய தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியைப்பற்றி அறிஞர்கள் பல கருத்துரைகளைத் தந்துள்ளனர்.[1] தொல்காப்பியத்துள் தமிழ் எழுத்துக்கட்குரிய வடிவங்கள் திருத்தமுறக் கூறப்பட்டுள்ளன.[2] தொல்காப்பியர் இலக்கணம் கொள்வதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே, தமிழ் நாட்டறிஞர் நுண்ணுணர்வினல் அமைத்த தமிழ் எழுத்துக்கள் நாட்டில் ஏட்டு வழக்கில் புழக்கத்தில் நின்றன. அவற்றின் வளர்ச்சி நிலையிலேயே தொல்காப்பியரும் இலக்கணம் செய்துள்ளார்.[3] அக்காலத்திலேயே தமிழெழுத்துக்களுள் ஒற்றெழுத்துக்கள் சொற்றிறனை விளக்கி நின்றன. அவற்றுள், வல்லின மெய்கள் சிறப்பாக மொழித் திறனுடன் அமைந்திருந்தன. இவ்வாறு தமிழெழுத்துக்கள் தமக்கென உரிய தனித்தன்மையான வடிவங்களுடன் மொழித்திறனும் மெற்று நிலவிய காலங்களிலேயே சங்ககாலப் புலவர்கள் தனி நிலையாகவும் தொடர் நிலையாகவும் செய்த செய்யுட்களும் நூல்களும் தோன்றலாயின. இவ்வாறு வளர்ச்சியுற்று நின்ற தனித்தமிழ் எழுத்துக்களைக் கண்ணெழுத்தென்றும் எழுதுபவர்களைக் கண்ணெழுத்தாளர் என்றும் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளளவில் எழுந்த தமிழ் இலக்கியங்களுள் கூறுகின்றன.[4]

தமிழர்கள் சமணப் பெரியோர்களால் தமிழ்மொழியில் பல இலக்கிய இலக்கண நூல்கள் உண்டானபொழுது நாட்டு வழக்கில் தமக்கே உரிய தமிழெழுத்தாக்கத்துடன் சமயச் சார்பில் பிராமி வடமொழி எழுத்துக்களை

யும் அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப்பில் பிராமி எழுதுக்களைக் கொண்ட சொற்களும் தொடர்களும் அவர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் அமையலாயின. இக்காலங்களில் தமிழகத்தில் வளரத் தொடங்கிய பௌத்த சமய வளர்ச்சியிலும் பிராமி எழுத்துக்கள் தமிழ் எழுத்தொலிகட்கேற்ப எழுத்தாளப்பெற்று தென்னிந்திய பிராமி என்றும், அசோகன் எழுத்தென்றும் இக்காலத்தவர் குறிக்கும் அளவையினைப் பெற்றிருந்தன.[5] சிற்றண்ணல் வாயில் சமணர் குகைப்படுக்கைகளிலும் மலையின் பிற பகுதிகளிலும் பிராமிச் சொற்றொடர்களும் பழந்தமிழ் எழுத்துச் சொற்களும் காணக்கிடைக்கின்றன. இரண்டு வகை மொழி எழுத்துக்கள் ஒரே காலத்தில் அமைக்கப்பட்டிருப்பதே சமணப் பெரியார்கள் இவ்விரண்டு மொழியிலும் எழுதும் திறனைப் பெற்றிருந்த உண்மைக்குச் சான்றாகும். இவ்வாறு தமிழெழுத்துக்களின் ஒலிகட்கு இலக்காக அமைக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் இருமொழியிலும் எழுதுவோரின் கைவன்மையினால் பண்டைத் தமிழ் எழுத்துக்களின் சாயலைப் பெற்றிருக்கின்றன. இதனை, ஆறுநாட்டான் மலையிலுள்ள சமணர் குகைக் கற்படுக்கைகளில் காணப்பெறும் பிராமி எழுத்துக்களைக் கொண்டு ஆராய்ந்து கூற முடிகின்றது. சிறப்பாக, தமிழுக்கே உரிய வல்லின ஒற்றெழுத்துக்கள் இக்கல்வெட்டுகளில் பயன்படுத்தப் பெற்றிருப்பதுடன், வடிவிலும் திருத்தம் பெற்றிருப்பது நோக்கத்தக்கதாகும்.[6]

தொல்காப்பியர் வரையறையோடு வடித்துக் கூறும் புள்ளியுடன் கூடிய மெய்யெழுத்துக்கள்[7] கல்வெட்டு செப்பேடு ஆகியவைகளில் காணப்படவில்லை. இதற்கு மூலகாரணம் பனையோலைகளில் செய்திகளும் நூல்களும் எழுதப்பெற்ற பெருவழக்கேயாகும். காகிதம் பழக்கத்திற்கு எந்த நிலையிலும் இறகு பேனாவினால் எழுதியவர்கள் ஓலையிலெழுதிய பழக்கத்தினாலேயே புள்ளியின்றிய நிலையில் தமிழெழுத்துக்களை எழுதியுள்ளார்கள்.[8] தொல்காப்பியர் கூறியுள்ள மெய்யெழுத்துக்களின் வடிவம் இடைக்காலத்தில் வழக்கொழிந்து நின்றதென்பதில்லை. தமிழ்க் கல்வெட்டுக்களில் எனக்குக் கிடைத்துள்ள கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் 'ஆர்க்காட்டுக்கூற்றம்' என்னும் தொடரில் புள்ளியுடன் மெய்யெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.[9] பிற்கால ஓலைச்சுவடிகளுள் சிலவற்றுள்ளும் புள்ளியிட்ட மெய்யெழுத்துக்கள் கையாளப் பெற்றுள்ளன.

பண்டைத் தமிழெழுத்துக்களைக் கண்ணெழுத்தென்று குறித்துள்ளனர். கண்ணெழுத்துக்களே வட்டெழுத்தென்றும் பெயர் பெற்றன. திருக்குறள், தொல்காப்பியம், தொடர்நிலைச் செய்யுளால் அமைந்த சிலப்பதிகாரம் ஆகிய தமிழ் நூல்கள் இவ்வெழுத்துக்களிலேயே எழுதப்பெற்றன.[10]

கி. பி. 192 க்குரிய சேரமன்னன் பாஸ்கர இரவிவர்மனின் செப்புப் பட்டயத்திற்குரிய மூலமொழி மிகப் பழங்காலத்துத் தமிழெழுத்தாலானதென்று கூறப்பட்டுள்ளது. அவை வட்டெழுத்தின் பழைய நிலையேயாகும்.[11] திருச்செங்கோட்டு மலையின் உச்சிப் பாறையிலுள்ள பழைய வட்டெழுத்துக்களின் வடிவை இதற்குச் சான்றாகச் சொல்லலாகும்.

தமிழகத்தின் புதைபொருள்களாக மறைந்து கிடக்கும் சங்ககாலப் பெருநகரங்களாகிய கொற்கை, புகார், உறந்தை, கரூர், வஞ்சி, மதுரை

ஆகிய இடங்களில் நிலவகட்டில் கண்ணெழுத்துக்களோடு கூடிய பொருள்கள் மறைந்து கிடக்கவேண்டுமென்ற உண்மை நிலையினை அகழ்ந்து ஆராய்ந்தறிதல் இன்றியமையாத தொன்றும்.

வட்டெழுத்துக்கள் காலப்போக்கில் மாறி, ஒரு திருத்தங்கொண்டு வளர்ந்த நிலையிலேயே கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் காணப்பெறும் தமிழ்க் கல்வெட்டெழுத்துக்கள் சிற்பியரின் எழுத்துப் பயிற்சிக்கேற்ப அமைந்து விளங்குகின்றன.[12]

2. செப்பேடுகளும்—வரலாறும்

செப்பேடுகளில் கிடைத்துள்ள செய்திகளே சோழபாண்டியரின் வரலாற்று வளர்ச்சிக்கு மிகவும் துணையாக அமைந்திருக்கின்றன. தமிழரசர்களால் வெளியிடப்பட்ட செப்பேடுகளாயினும் அதன் முதற்பகுதி சுலோகங்களாக, கிரந்த எழுத்துக்களினால் எழுதப்பட்டுள்ள நிலையை பல செப்பேடுகளில் காணப்படுகின்றது. கரந்தைத் தமிழ்ச்சங்க—முதல் இராசேந்திரசோழன் செப்பேட்டுத் தொகுதியின் முற்பகுதி எழுபத்தெட்டு சுலோக வரிசையாகப் பழைய கிரந்த எழுத்துக்களில் அமைந்து, சோழ மன்னரின் மரபுப் புகழ்ச்சியைக் கூறும் பிரசஸ்திப் பகுதியாக அமைந்துளது. அவற்றுள் முதல் இராசராசனுடைய புகழ்ச்சியைக் கூறும் பகுதியில் விளக்கப்பெறும் வரலாற்றுப்பகுதி குறிப்பிடத்தக்கதாகும். தஞ்சைத் பெரிய கோயிலுள்ள முதல் இராசராசன் கல்வெட்டுகளுள் ஒன்று, மேலைச் சளுக்கியமன்னன் சத்தியாசிரயனை இராசராசன் வென்ற செய்தியைப்பற்றி, ''சத்தியாசிரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீபாதபுட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற்பூ'' என்னும் தொடரால் புலப்படுத்துகின்றது. இச் செய்தியைக் கொண்டு, 'சத்தியாசிரயனுடைய படையை இராசராசனுடைய படை வென்றது' என்றும், 'இராசராசனுக்கும் சத்தியாசிரயனுக்கும் போர் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும்' 'முதல் இராசராசன் சத்தியாசிரயனை வென்றான்' என்றும் வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். ஆனால் மேற்கூறிய செப்பேட்டுச் செய்தியுள் இராசராசன் சத்தியாசிரயனோடு நேருக்கு நேராக குதிரைமீதிருந்து வாளாயுதத்தால் வெற்றிகண்ட நிகழ்ச்சி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. புகழ்ச்சியுரையுள் 27 முதல் 35 வரையிலுள்ள சுலோகங்கள் இவ் வரலாற்றுச் செய்திகளை நன்கு புலப்படுத்துகின்றன. ஆயினும், இச் செப்பேட்டினைப்பற்றிக் கூறியுள்ள வரலாற்றாசிரியர்கள் இவ் வரலாற்றுச் சிறப்பினை விளங்கக் கூறினாரில்லை. இதற்குக் காரணம், கல்வெட்டுகள் செப்பேடுகள் ஆகியவற்றிலுள்ள செய்திகள் விளக்கங்களுடன் எளிதில் வெளிவராதிருப்பதேயாகும்.

ஆயினும், இச் செப்பேட்டின் மரபுப் புகழ்ச்சிப் பகுதியினைத் தமிழில் மொழிபெயர்த்தும், பிற பகுதிகளைப் பிரதி செய்தும், திரு. டி. வி சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் முன்னுரை குறிப்புரைகளுடன் கரந்தைத் தமிழ்ச்சங்க வாயிலாக வெளிவரும் ஆராய்ச்சி வெளியீடாகிய ''தமிழ்ப் பொழில்'' என்னும் திங்கள் வெளியீட்டின் வழியாக, 1956-ல் யான் தொடர்ந்து வெளியிட்டுள்ளேன். மற்றும் திருவாலங்காட்டுச் செப்பேட்டுப் புகழ்ச்சியுரையில் கூறப்பெறும் சோழன் விசயாலயன் அமைத்த நிசும்ப

குதலி[13] என்னும் கொற்றவையின் சிலையையும், முதல் இராசராசன் காலத்தில் நின்ற உள்ளூர்ப்பண்டாரம், தஞ்சை மாமணிக்கோயில் ஆகியவற்றைப் பற்றியும், திருமலைராயன் ஆற்றில் புதைந்துகிடக்கும் சந்திரசோழ விண்ணகரத்தையும்,[14] சிதைந்து புதைந்து கிடக்கும் விக்கிரமசோழ விண்ணகரத்தையும், ஆங்காங்கு கிடைத்த கல்வெட்டுச் செய்திகளைக்கொண்டு கண்டு பிடித்து, தமிழ்ப்பொழிலின் வாயிலாகவே வெளியிட்டேன். இவ் வரலாற்று உண்மைப்பகுதிகள் வெளியிடப்பெற்று ஆண்டு பலவாகியும் சோழர் வரலாற்றுள் இடம்பெறாத நிலை வியக்கத்தக்கதாகவுளது.

தமிழக வரலாற்றிற்கு உதவியாகக் கிடைத்துள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றைப்பற்றி இங்கு ஒரு சில சொல்லவேண்டியுளது. தமிழகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தனித்தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நிலையில் பெரும்பான்மையாக இல்லை யென்றே சொல்லலாம். மெய்க்கீர்த்திப் பகுதிகளைத்தவிர, செய்திப்பகுதிகளில் கிரந்த எழுத்துக்களாலான வடமொழிச் சொற்களும் தொடர்களும் இடம் பெற்றிருக்கின்றன. மரபுப் புகழ்ச்சியுரைப் பகுதிகளும், மெய்க்கீர்த்திக்கு முன்னர் அமைக்கப்பெறும் மங்கல வாழ்த்தும் சுலோகங்களாகவே அமைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய பகுதிகட்கெல்லாம் உரையாக்கம் செய்துள்ள பெருமக்கள் ஆங்கில மொழியினையே கையாண்டுள்ளனர்.

தமிழக வரலாற்றியைபுடைய செய்திகள் எந்தவடிவில் எந்த மொழி யெழுத்தில், கல்வெட்டு, செப்பேடுகளில் இருப்பினும், அதனைத் தமிழாக்க மாகவே கொண்ட புதிய வெளியீடுகள் வருதல் வேண்டுமென்பது இன்றைய நாட்டுச் சூழலுக்கு ஏற்றதாகும். ஆங்கிலத்தில் குறிப்பும் கருத்தும் தொடர்ந்து இருக்கலாகும். கல்வெட்டுத் துறையினர் வெளியிடும் தொகுப்பு வெளியீடுகள். (1) மூலப்பிரதி அல்லது நேர் எழுத்துப் பிரதி.[15] (2) வேண்டிய இடத்தில் திருத்தமான தமிழாக்கம் (3) அரும்பத விளக்க அடிக் குறிப்பு ஆகிய பகுதிகளுடன் அச்சிடப்பெற்று, ஆண்டுதோறும் குறிப்பிட்ட திங்களில் வெளிவருதல் வேண்டும். அப்பொழுதுதான் வரலாற்றாராய்ச்சி யில் ஊக்கங்கொள்ளும் எத்தகையாருக்கும் எளிதில் செய்திகள் புலனாதற்கும், தமிழில் வரலாறு வளர்ச்சி பெறுதற்கும் ஏதுவாகும்.

3. பிறநாடுகளில் தமிழக வரலாறு

பிற்காலச் சோழ பாண்டியரின் வரலாறு கடல் கடந்த நாடுகளாகிய பர்மா, மலேயா, சுமத்திரா, சயாம், இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ் நாட்டு அரசர்களாலும் வணிகர்களாலும் உண்டாக்கப்பட்ட கல்வெட்டுக ளாகவும் சின்னங்களாகவும் இருப்பதைச் செய்திகள் வாயிலாக அறியமுடி கின்றது. பர்மாவிலுள்ள 'பெகு' என்னும் பகுதியில் முதல் இராசேந்திரன் நாட்டிய வெற்றித் தூண்கள் தமிழ்க் கல்லெழுத்துக்களுடன் இருப்பதை' அந் நாட்டுக் கல்வெட்டுத் துறையதிகாரி டோ ஸெயன்கோ தமது குறிப் புடன் வெளியிட்டுள்ளதை அறிகிறோம். மற்றும் அங்கிருந்து தமிழ்நாட்டிற் குத் திரும்பியுள்ள அறிஞர் சிலரிடம் பெற்ற செய்திகளும் பர்மாவை முதல் இராசேந்திரன் வென்ற வரலாற்றினை உறுதிப்படுத்துகின்றன. இவற்றால், கடாரம் என்பது பர்மாவிலுள்ள கடற்கரைப் பட்டினமும் அதைச்சார்ந்த

ஆரியப் படையைச் சேர்ந்த ஆரியப் பொருநன் (மல்லன்) ஒருவன், வட ஆர்க்காடு மாவட்டத்தை அக் காலத்தில் அரசாண்டிருந்த பாணன் என்னும் வாண அரசனுடன் மற்போர் (குஸ்தி) செய்தான் என்றும், அந்த மற்போரில் வாணன் ஆரியப் பொருநனுடைய இரண்டு கைகளையுந் தன்னுடைய கைகளில் இறுகப் பிடித்துக் கொண்டான் என்றும், அப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள ஆரியப் பொருநன் முயன்றபோது அவனுடைய கைகள் முறிந்து போயின என்றும், அதனைக் கண்ட ஆரியப் பொருநனுடைய நண்பனான கணையன் என்பவன் நாணங் கொண்டு வெட்கமடைந்தான் என்றும் அகநானூறு 386-ஆம் செய்யுள் கூறுகிறது.

"பாணன்
மல்ல டுமார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத் திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன் வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு."

(அகம் 386 : 3 – 8)

பாண்டி நாட்டின் தலைநகரமான மதுரையின்மேல் ஒரு ஆரியப்படை வந்து போர் செய்தபோது பாண்டியன் நெடுஞ்செழியன் அப் படையுடன் போர் செய்து வென்றான் என்றும் அதனால் அப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றான் என்றும் சங்க நூல்களினால்

அறிகிறேம். (இப் பாண்டியனுக்கு அரசுகட்டிலில் (சிம்மாசனத்தில்) துஞ்சிய நெடுஞ்செழியன் என்னும் பெயரும் உண்டு.)

''வடவாரியர் படை கடந்து
தென்றமிழ் நாடொருங்கு காணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்''

என்று சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் கட்டுரை இப் பாண்டியனைக் கூறுகிறது.

புறநானூறு 183ஆம் செய்யுளின் அடிக்குறிப்பும் இவ்வரசனை, ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் என்று கூறுகின்றது.

இவ்வாறு சங்கச் செய்யுள்கள், ஆரியப்படை தமிழ் நாட்டுக்கு வந்து போர் செய்ததைக் கூறுகின்றன. வட நாட்டிலிருந்து தமிழ் நாட்டின்மேல் யாரேனும் அரசர் படையெடுத்து வந்திருந்தால் அவ்வரசன் பெயரைக் குறிப்பிட்டு இன்ன அரசன் படையெடுத்து வந்தான் என்று கூறுவது வழக்கம். அப்படி அரசன் பெயரைக் கூறுமல் ஆரியப்படை என்று சேனையின் பெயர் மட்டுங் கூறப்படுகிறபடியால், இந்த ஆரியப்படை எந்த அரசனையும் சேராமல் சுதந்தரமாக இருந்த சேனை என்பது தெரிகின்றது.

சங்ககாலத்திலே, வடஇந்தியாவிலே எந்த அரசனுக்குங் கட்டுப்படாமல் சுதந்தரமாக ஒரு கூட்டத்தார் இருந்தார்கள் என்றும் அவர்கள் யுத்தம் (போர்) செய்வதையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களுக்கு யௌத்தெய கணம் (யுத்தம் செய்கிற கூட்டம்) என்பது பெயர் என்றும் அந்த யௌத்தெயகணத்தைச் சங்கச் செய்யுள்கள் ஆரியப்படை என்று பெயர் கூறின என்றும் முன்னமே கூறினேம். யௌத்தெய கணத்தைப் பற்றிய வரலாற்றை இனி ஆராய்வோம்.

எந்த அரசனுடைய ஊழியத்திலும் அமராமல் சுதந்தரமாக வாழ்ந்து வந்த போர்வீரர் கூட்டம் அக்காலத்தில் வடஇந்தியாவில் இருந்தது. இதற்கு இலக்கியச் சான்றும் சாசன எழுத்துச் சான்றும் பழங்காசுச் (நியூமிஸ் மேட்டிக்ஸ்) சான்றும் கிடைத்துள்ளன. அந்தப் போர்வீரர் கூட்டத்துக்கு யௌத்தெய கணம் என்னும் பெயர் வழங்கிவந்தது. யௌத்தெய கணத்தாராகிய போர் வீரர்களுக்கு அரசன் கிடையாது. ஆனல், அவர்கள் தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள், ஒருவிதக் குடியாட்சியை அமைத்துக்கொண்டு தங்களுக்கென செப்புக் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் வெளியிட்டு வழங்கினூர்கள். அவர்கள் வழங்கிவந்த காசுகள் சமீபகாலத்தில் பூமியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பழங்காசுகளிலே பிராமி எழுத்தினுல் எழுதப்பட்ட யௌத்தெய கணஸ்ய ஜய என்னும் வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. யௌத்தெய கணஜய என்ருல் யௌத்தெய கணத்துக்கு வெற்றி என்பது பொருள். அந்தக் காசுகளில் பிராமி எழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறதனுலேயே அவை மிகப் பழங்காலத்துக் காசுகள் என்பது தெரிகின்றது.

(யௌத்தெய கணத்தாரின் பழக்காசுகளிலே எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக்கள். 'யௌதெய கணஸ்ய ஜய' என்பது இதன் வாசகம்)

யௌத்தெய கணத்தாரின் பெயர் பாணினியின் அஷ்டாத்யாயி என்னும் இலக்கண நூலிலும் காணப்படுகிறது.

இப்பெயர் வடமொழி மகாபாரதத்தில் கூறப்படுகிறது இந்த யௌத்தெயரும் அர்ச்சுனீயர் முதலிய குழுவினரும் ஆயுதஜீவி க்ஷத்திரியர் என்று கூறப்படுகின்றனர். ஆயுதஜீவி க்ஷத்திரியர் என்றால் ஆயுதங்களினால் போர் செய்து வாழ்க்கையை நடத்துகிறவர்கள் என்பது பொருள். இவர்கள் கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரையில் சிறப்பாக வாழ்ந்து வந்தனர் என்பது இவர்கள் அந்த நூற்றாண்டுகளில் தங்கள் பெயரினால் வழங்கி வந்த காசுகளிலிருந்து தெரிகின்றது.

ஆயுத ஜீவி க்ஷத்திரியர்களான யௌத்தெய கணத்தார் ஆதிகாலத்தில் கிழக்குப் பஞ்சாபு நாட்டில் வசித்து வந்தார்கள். பிற்காலத்தில் இவர்கள் தெற்கே உத்தரப் பிரதேசத்திலும் இராஜபுதனத்திலும் மேற்கு இந்தியாவிலும் பரவி இருந்தார்கள். இவர்கள் மூன்று பிரிவினராகப் பிரிந்து இருந்தனர். இவர்களுடை சந்ததியார் இக்காலத்திலும் வாழ்ந்து வருகின்றனர். இராஜபுதனத்தில் சத்லஜ் நதிக்கரையில் உள்ள ஜோஹிய பார் என்னும் இடத்திலே இவர்கள் ஜோஹிய ராஜபுத்திரர் என்னும் பெயர்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களும் மூன்று பிரிவினராகக் காணப்படுகின்றனர்.

பண்டைக் காலத்தில் இந்த ஆயுதஜீவி க்ஷத்திரியர்களான யௌத்தெய கணத்தார் சில காலங்களில் சிறப்பாகவும் சில காலங்களில் சிறப்புக் குன்றியும் இருந்தார்கள். உயர்வும் தாழ்வும் வாழ்க்கையில் உள்ளதுதானே.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் மேற்கு இந்தியாவை யரசாண்ட சாக அரசனாகிய ருத்திரத்தாமன் என்னும் அரசன் யௌத்தெய கணத்தை வென்று அடக்கினான் என்று அவ்வரசன் கி. பி 150-இல் எழுதி வைத்துள்ள ஜுனகர் சாசனம் கூறுகிறது. கி பி. மூன்றும் நூற்றாண்டில் குப்த அரசர் யௌத்தெய கணத்தை வென்று அடக்கினர் என்று குப்த அரசர் சாசன எழுத்து கூறுகிறது.

இதுகாறும் கூறியவற்றால் யௌத்தெய கணம் என்னும் பெயருள்ள போர்வீரர் கூட்டம் ஒன்று இருந்தது என்றும் அந்தக் கூட்டம் எந்த அரசருக்கும் அடங்காமல் சுதந்தரமாக வாழ்ந்து வந்தது என்றும் இலக்கியச் சான்று கல்வெட்டு எழுத்துச் சான்று பழங்காசுச் சான்றுகளினால் அறிந்தோம்.

ஆரியப்படையும் யௌத்தெயரும்

ஆயுத ஜீவி க்ஷத்திரியர்களாகிய யௌத்தெய கணத்தாரைச் சங்கச் செய்யுள்கள் ஆரியப்படை என்னும் பெயர்கொடுத்துக் கூறுகிறது. யௌத்தெயராகிய ஆரியப்படை அடிக்கடி தமிழகத்தின்மேல் படையெடுத்துவந்து போர் செய்தது என்பது சங்கச்செய்யுள்களினால் அறிகிறோம். வடநாட்டிலிருந்துவந்த அரசன் பெயரைக் கூறாமல் போர்வீரர் கூட்டத்தைமட்டும் கூறுகிறபடியால், சங்கச் செய்யுள்கள் கூறுகிற ஆரியப்படை என்பது ஆயுத

ஜீவி க்ஷத்திரியராகிய யௌத்தெயகணம்தான் என்று துணிந்து கூறலாம். ஆரிய அரசன் பிரகத்தன் என்று ஒரு அரசன் சங்க இலக்கியத்தில் கூறப்படு கிருன். அவ்வாறு ஆரிய அரசன் பெயரைக் கூருமல் ஆரியப்படையின் பெயரைமட்டும் கூறுகிறபடியால் ஆரியப்படை என்பது யௌத்தெய கணத் தைத்தான் என்பது நன்கு தெரிகின்றது.

பிற்காலத்திலே தமிழ்நாட்டின்மேல் படையெடுத்துவந்த களபரர் பல்ல வர், சாளுக்கியர், குப்தர் முதலிய அரசபரம்பரையினர் பெயரைச் சரித்திரத் தில் படிக்கிருேம். சங்க காலத்தில் ஆரிய அரசர்கள் தமிழகத்தின்மேல் படை யெடுத்து வந்திருந்தால் அவ் வரசர்களின் பெயரைச் சங்கச் செய்யுளில் கூறியிருக்கும். அப்படி அரசர் பெயரைக் கூருமல் போர்வீரர் கூட்டத்தின் பெயரைக் கூறுகிறபடியால் சங்கச் செய்யுள்கள் கூறுகிற ஆரியப்படை என்பது ஆயுதஜீவி க்ஷத்திரியராகிய யௌத்தெயகணத்தார் என்பதூ நன்கு விளங்குகிறது. எனவே ஆரியப்படையும் யௌத்தெயகணமும் ஒன்றே என்று துணிந்து கூறலாம்.

ஒரு சரித்திரஆசிரியர், ஆரியப்படை என்பது பல்லவ அரசருடைய சேனே என்று எழுதியிருக்கிருர். ஆரியப்படை யொன்று மலேயமானுடைய முள்ளூரின்மேல் படையெடுத்துவந்த செய்தியை நற்றிணை 170 ஆம் செய் யுள் கூறுவதை முன்னமே காட்டினேம். இந்த ஆரியப்படை பல்லவ அரச ருடைய சேனேயாக இருக்கக்கூடும் என்று திரு. பி. டி. ஸ்ரீநிவாச அய்யங் கார் யூகிக்கிருர். அவர் தாம் எழுதிய தமிழர் சரித்திரம் என்னும் ஆங்கில நூலில் 509 ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிருர்: முள்ளூர் மன்னனுக் குத் தோற்றுப்போன ஆரியப்படை பல்லவ அரசனுடைய சேனேயாக இருக்கக்கூடும் என்றும் பல்லவ அரசன் கி. பி. 6 ஆம் நூற்ருண்டில் களபர அரசனே வென்ற பிறகு தன்னுடைய இராச்சியத்தை விரிவு படுத்த எண் ணித் தன்னுடைய சேனேயை முள்ளூரின்மேல் போர்செய்ய அனுப்பியிருக்கக் கூடும் என்றும் அய்யங்கார் எழுதுகிருர்.*

இவர் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனேன்ருல், சங்க காலத் தில் (கி. பி. 2 ஆம் நூற்ருண்டில்) பல்லவர் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்பட வில்லே. சங்கச் செய்யுள்களில் பல்லவரைப்பற்றி ஓரிடத்திலாவது கூறப்பட வில்லே. மேலும், பல்லவ அரசன் முள்ளூரின்மேல் படையெடுத்துச் சென் றிருந்தால் அதைத் தெளிவாகப் பல்லவர் சேனே என்று கூறப்பட்டிருக்கும். அப்படிக்கூருமல் ஆரியப்படை வந்தது என்று கூறியிருப்பதனுல் அது பல்ல வர் சேனே என்று கருதமுடியாது. பல்லவ அரசர் 'ஆரியப்படை' என்னும் பெயருள்ள படையை வைத்திருந்ததாக எந்தக் கல்வெட்டுச் சாசனத்திலும் காணப்படவில்லே. பல்லவ அரசர் ஆரியப்படை என்னும் பெயருள்ள சேனேயை வைத்திருக்கவில்லே. எனவே ஸ்ரீநிவாச அய்யங்கார் யூகிக்கிற யூகம் தவருகும்.

ஆரியப்படை என்று சங்க இலக்கியங்கள் கூறுவது அக்காலத்தில் வட இந்தியாவில் இருந்த பேர்போன யௌத்தெயகணம் என்னும் கூட்டத் தையே குறிக்கிறது என்பதில் சற்றும் ஐயமில்லே.

---

* The History of the Tamils (p. 509) P. T. Srinivasa Iyengar.

இதுகாறும், ஆரியப்படையும் யௌத்தெயகணமும் ஒன்றே என்பதையும், ஆரியப்படையினராகிய யௌத்தெயகணத்தார் சங்க காலத்தில் அடிக்கடி தமிழ்நாட்டின்மேல் படையெடுத்து வந்தனர் என்பதையும் கூறினோம். வாணிகம், சமயம், அரசியல், போர் முதலிய காரணங்களினால் அடிக்கடி இரு வேறு சமூகத்தாருக்கு தொடர்பு அடிக்கடி ஏற்படுமானால், அவ்விரு சமூகங்களின் நாகரிகம் பண்பாடு கலை முதலியவைகளில் ஏதேனும் சில இரு சாராரிடமும் புகுந்துவிடுவது வழக்கம். இதன்படி ஆரியப்படையினரின் பண்பாடு ஏதேனும் தமிழரிடம் புகுந்ததா என்பதை ஆராய்வோம்.

தமிழரிடமிருந்து யௌத்தெய ஆரியப்படையினர் எதைக் கற்றுக் கொண்டார்கள் என்பதை ஆராய்வதற்குச் சான்றுகள் ஒன்றும் இல்லை. ஆனால், யௌத்தெயரிடமிருந்து தமிழர் சமயத்துறையில் கார்த்திகேயன் (சுப்பிரமணியன்) வணக்கத்தைக் பெற்றுக்கொண்டனர் என்பது தெரிகின்றது. இதனை விளக்கிக் கூறுவோம்.

தமிழர் முருகன் என்னும் தெய்வத்தை இக்காலத்திலும் வணங்கி வருவதுபோலவே அக்காலத்திலும் வணங்கி வந்தார்கள். முருகன் வழிபாடு தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் இருந்துவருகிறது சங்க இலக்கியங்களிலே முருகனைப்பற்றிப் பல இடங்களில் கூறப்படுகிறது. குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகன் வேலன் என்றும் சேவற்கொடியோன் என்றும் 'பெரும் பெயர் முருகன்' கூறப்படுகின்றார். முருகன், போர்த்தெய்வமாகவும் இளமையும் அழகும் வாய்ந்தவராகவும் கருதப்பட்டு வருகிறார்.

போர் செய்வதையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டிருந்த யௌத்தெயகணத்தாராகிய ஆரியப்படையினரும் தங்களுக்கென்று போர்த் தெய்வம் ஒன்றை வணங்கினார்கள். அவர்கள் அந்தத் தெய்வத்திற்குக் கார்த்திகேயன் என்றும் ப்ரமண்யன் (சுப்பிரமணியன்) என்றும் சண்முகன் என்றும் ஸ்கந்தன் என்றும் பெயர் வழங்கினார்கள். யௌத்தெயகணத்தார் தங்கள் பெயரினால் செம்பு நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் வழங்கினார்கள் என்றும் அந்நாணயங்களிலே 'யௌத்தெய கணஸ்ய ஜெய' என்று பிராமி எழுத்தினால் பொறித்திருந்தார்கள் என்றும் முன்னமே கூறினோம். அவர்களுடைய சில நாணயங்களிலே சுப்பிரமணியன் உருவத்தைப் பொறித்து வைத்ததோடு அமையாமல் பிராமி எழுத்தினாலே பகவத ஸ்வாமினோ ப்ரஹ்மண்ய தேவஸ்ய யௌத்தெயனும் என்பது முதலிய வாசகங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இதனால் அவர்கள் குமரக்கடவுளைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது.

(யௌத்தெய கணத்தாரின் காசுகளிலே எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துகள். 'பகவத ஸ்வாமினோ ப்ரஹ்மண்ய குமாரஸ்ய' என்பது இதன் வாசகம்.)

தமிழரின் பழந்தெய்வம் முருகன் என்று கூறினோம். முருகனாகிய வேலனுக்கு அக்காலத்தில் சுப்பிரமணியன், கார்த்திகேயன், சண்முகன், ஸ்கந்தன் முதலிய வேறு பெயர்கள் இல்லை. இப்பெயர்கள் பிற்காலத்திலே முருகன் பெயருடன் இணைக்கப்பட்டன. தமிழருக்கும் யௌத்தெயராகிய ஆரியப் படையினருக்கும் போர் காரணமாக அடிக்கடி தொடர்பு ஏற்பட்டிருந்த

படியினாலே தமிழருடைய முருகனுக்கும் யௌத்தெயருடைய சுப்பிரமணிய னுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கக்கூடும்.

இந்தத் தொடர்பு காரணமாக சுப்பிரமணியனும் முருகனும் ஒருவனே எனக்கொண்டார்கள். ஆகவே, கார்த்திகேயன், குமரன், சுப்பிரமணி யன், ஸ்கந்தன் முதலிய பெயர்கள் முருகன் பெயராக இணைக்கப்பட்டன. சரவணப் பொய்கையில் ஆறுபேருக்குச் சண்முகன் பிறந்தான் என்பது போன்ற வடநாட்டுப் புராணக் கதைகள் முருகனுக்குக் கற்பிக்கப்பட்டன. ஆரிய-திராவிட கலாசார பண்பாடுகள் ஒன்றாகக் கலந்த காலத்திலே திராவிடச் சிவனுடன் ஆரிய ருத்திரன் இணைக்கப்பட்டது போலவும் திருமாலாகிய மாயோனுடன் விஷ்ணு இணைக்கப்பட்டது போலவும் முருகனுடன் சுப்பிரமணியன் இணைக்கப்பட்டான்.

இந்த முருக-சுப்பிரமணிய இணைப்பு யௌத்தெய கணத்தாரான ஆரியப்படையின் தொடர்பினாலே ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தத் தொடர்பு கடைச்சங்க காலத்தின் இறுதியிலே அதாவது கி. பி. முதல் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டிலே ஏற்பட்டிருக்கக்கூடும். திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய சங்க நூல்களிலே முருக - சுப்பிர மணியக் கலப்பு காணப்படுகிறபடியினாலே, கடைச்சங்க காலத்து இறுதியில் இந்த உறவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று துணிந்து கூறலாம்.

[குறிப்பு: தமிழரின் முருக வழிபாட்டுடன் யௌத்தெயரின் கார்த்தி கேய சண்முக வழிபாடு கலந்ததென்று கூறினோம். இந்தக் குமார கார்த்தி கேய வழிபாட்டுக் கலப்பு இன்னொரு வழியாகவும் நேர்ந்திருக்கக்கூடும். உஞ்சை என்னும் உஜ்ஜனி நாட்டிலும் குமார - சண்முக - கார்த்திகேய வழி பாடு அக் காலத்தில் சிறப்பாக நடந்துவந்தது. இதற்குச் சான்று, அக் காலத்து உஜ்ஜனி நாட்டுக் காசுகளிலே சண்முகன் உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வழங்கியிருந்ததே யாகும். ஆறுமுகமுடைய சண்முகனின் உருவங்கள் அக் காலத்து நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அந்த உருவத்தின் காலடியில் சண்முகன் வாகனமாகிய சேவல் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. பேர்பெற்ற காளிதாசன் உஜ்ஜனியி லிருந்தபோது தான் அவன் குமார சம்பவம் என்னும் நூலை இயற்றினான். குமாரக் கடவுள் வழிபாடு சிறப்பாக இருந்த உஜ்ஜனி நாட்டில் இருந்த காளிதாசன் குமார சம்பவம் என்னும் நூலை இயற்றியது பொருத்தமாகும். எனவே, தமிழ் நாட்டு முருகனுடன் குமார கார்த்திகேய - சண்முக - சுப்பிரமணிய வழிபாடு இணைக்கப்பட்டது யௌத்தெயர் மூலமாகவும் உஜ்ஜனி நாட்டு மக்கள் மூல மாகவும் இருக்கக்கூடும். சேர அரசர்களும் சோழ அரசர்களும் சங்க காலத்தில் உஜ்ஜனியுடன் தொடர்புகொண்டிருந்ததைச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.]

INSCRIPTIONS OF SRI VARADARAJASWAMI TEMPLE, KANCHIPURAM

by

Sri K. V. RAMAN

Archaeological Survey of India

The temple of Sri Varadaraja or Arulalaperumal at Kanchi is a magnificent temple of historic importance. It is one of the three most sacred shrines for the Vaishnavites of Tamilnad. Kovil, Tirumalai and Perumalakovil which refer respectively to Srirangam, Tirupati and Kanchipuram, are considered to be the holiest of the holies. The word "Perumalakovil" in the Sri Vaishnavite parlance has come to mean only the Arulalaperumal Temple at Kanchi.

We do not know much about the origin or genesis of this great temple apart from the legendary account contained in the *Hastigiri Mahatmiyam*. But we however know that this temple has elicited the devotional praise from one of the earliest Alvars viz Budattalvar who mentioned the deity as *Athiyuran Pullaiyurvan* (அத்தியூரான் புள்ளையூர் வான்).[1] Tirumangai Alvar who came later (8th Century A. D.) and who has devoted separate *padikams* on smaller temples like Uragam, Padagam etc. has almost nothing to say about this temple except perhaps the one passing reference to *Varam Tarum Mamani Vannan* (வரம் தரும் மாமணிவண்ணன்)[1] which is taken by some as a reference to Lord Varadaraja.

Incidentally, it may be mentioned that Vishnu Kanchi or Little Conjeevaram of today was known by the name Attiyur in olden times. Inscriptions found in this temple call the presiding deity as 'Attiyur Alvar' or 'Tiruvattiyur Alvar'[2].

The temple attained great prominence during and after the time of Ramanuja who lived at Kanchi and did service to the temple for some considerable time. Many of Ramanuja's contemporaries like Kurattalvar

1. 1. *Iyarpa*, II Tiruvandadi, verses 95 and 96.
   2. *Peria Tirumoli*, 2, 9.
2. *Epigraphia Indica* IV., p. 145—147.

and Tirukkachinambi have waxed eloquent about the spiritual inspiration they derived from this temple. Kurattalvar's *Varadarajastavam* and Tirukkachinambi's *Devarajashtavam* have inspired many similar works on the presiding deity. Sri Vedanta Desika's reverence and affection for this temple were unique which impelled him to compose remarkable poems in Sanskrit and Tamil such as *Varadarajapanchasat Satyvrata Mahatmiyam, Adaikkalapathu* etc. Two other great celebrities Appayya Dikshitar and Manavala Mahamuni have also paid their respectful homage to this temple through their—*Varadarajastavam* and *Devaraja—Mangalam*,

Inscriptions : The works of the great Acharyas, mentioned above clearly show the importance of the temple in the religious sphere. But to appreciate the fuller story of this temple, the political vicissitudes it had passed through, the economic and social functions it had performed, its administrative set-up, its association with royal dynasties, and the common folk, in short to unfold the panorama of its full history, we have to turn to the inscriptions found in this temple.

There are about four hundred inscriptions in this temple which are mostly written in Tamil, while a few are in Sanskrit, Telugu and Kannada. The inscriptions are uniformly well carved in bold and legible hand. One special advantage the engravers of this temple had, was the vast wall below the *main* sanctum. The *Garbhagriha* of this temple is placed on the top floor of a huge rectangular enclosure locally called "Malai" or hill, made up of walls about 30 feet high. The four high walls of this enclosure are studded with epigraphs, as also the surrounding verandah walls, the *prakara*-walls and other subshrines and *mandapas*. Many of the inscriptions of the Chola times were signed or authenticated by the 'Koilkanakku' or the Temple Accountant. Among the many interesting names of these Accountants are Tiruvattiyur Piriyan[3] and Perarulaladasan.

It is however rather curious that the earliest inscriptions of this temple do not seem to go before eleventh century A D. Probably this temple underwent a thorough reconstruction or renovation during this time. The extant architectural features also tend to support this date.

The stormy political scenes witnessed by Kanchi find recurring echoes in the inscriptions of this temple which belong to different Kings and dynasties. These inscriptions belong to later Chola Kings from Rajadhiraja I to Rajaraja III; Pandyan Kings like Jatavarman Sundara Pandya, Vira Pandya, Maravarman Kulasekhara etc, Hoysala Kings like Ballala III; Kakatiya Kings like Ganapati and Prataparudra II; Telugu - Chola Kings like Vijayagandagopala and Viragandagopala; the Kadava King Kopperunjingadeva; Sambuvaraya Kings like Rajanarayana

---

3. 383 of 1919

Sambuvarayan and the Chera King Ravivarman Kulasekhara. But the major bulk of the inscriptions belongs to the Vijayanagar Kings from Sayana Udaiyar down to Venkata II. It is evident from the epigraphs that possession of Kanchi was considered a coveted honour by the successive monarchs.

Political Importance of the Inscriptions :

Now let me briefly touch upon the significance of the inscriptions of this temple for the political history of Kanchi. About the middle of the 13th century, when the Chola power was waning, the political fate of Kanchi and its surroundings was tossing like a pendulam from one dynasty to another. The Kakatiya King Ganapati took hold of Kanchi in A. D. 1249. His inscription at Varadarajaswami Temple records a gift by his minister Brahma Setti.[4] Two other interesting inscriptions belonging to Kadava Kopperunjinga and Vijayagandagopala are dated in the same year 1254. But while the inscription of the former is dated July, 1254 that of the latter is September of the same year.[5] The change of rulers within two months of the same year clearly indicates the political instability and the dynastic rivalry that were characteristic of the period. Again, in 1257, the ruler of Kanchi was Vijayagandagopala while in the month of May of the same year Kopperunjinga took possession of the city.[6] From the hands of these Kings, Kanchi was captured by the Pandyas whose inscriptions are found in the Varadarajaswami Temple. This Pandyan hegemony was cut short by Malik Kafur's invasion right upto Madurai in A. D. 1310. We do not find any reference to this invasion in the inscriptions of this temple. But we have an inscription dated 1312 i.e., soon after Malikkafur's raid was over, which informs us that the Chera King Ravivarman Kulasekhara seized the city of Kanchi.[7] His inscription which is partly in Sanskrit and partly in Tamil proclaims that he crowned himself a second time in his 46th year at Kanchi, on the banks of the Vegavati. The King donated a village to Arulala Perumal Temple, for repairs and festivals. But this Chera interlude was only short-lived, for we find that after three years i.e. 1316, Prataparudra III, the Kakatiya King, sent his General Muppudi Nayaka who invaded and captured Kanchi. The Kakatiya General assigned the revenues of a village as gift to Arulala Perumal Temple.[8]

4. 47 of 1893
5. 450 and 538 of 1919
6. Sewell, Historical Inscriptions of South India p. 152
7. Epigraphia Indica IV, pp. 145-148
8. 43 of 1893

Royal Personages associated with the temple :

The inscriptions of this temple clearly prove that through the ages, the Kings, ministers and nobles vied with one another in extending patronage to this temple. Let me briefly refer to a few important royal personalities who have either visited this temple or extended their patronage to it. In 1334 A. D. the Hoysala King Ballala III visited this temple and presented a throne named "Vira Vallalan" which was placed in the Abhishekamandapa. The throne was placed under a canopy called "Ariyannavallan". The deity was placed under the canopy and on this throne on festive days when Nammalvar's *Tiruvaimoḻi* was chanted and honours distributed to those who rendered meritorious service to the temple.[9]

The Telugu Chola chieftains were devout Bhaktas of this temple, Rajagandagopala calls himself as "Arulalapada lanchanasya" "he who bears the stamp of Arulalanatha". He gave innumerable gifts for the repairs of the temple and instituted a special service called Rajagandagopalan- Sandi.[10]

In S 1438 Krishnadeva Raya Visited this temple in the course of his religious tour. On that occasion, he ordered for the re-gilting of the Punyakotivimana over the main sanctum with gold for which he gave 1,000 varahas of gold. This particular endowment has been engraved in three languages—Tamil, Telugu and Kannada[11]. Three months later, on his way back, the king paid another visit to Kanchi. This time he met the representatives of Varadarajaswami and Ekambareswarar temples and fixed the routes to be followed by the *Vahanas* (vehicles) of the two temples during festival days. On this occasion, Krishnadevaraya donated cars (*Ther*) to both the temples[12].

In S 1454, Achyutaraya visited this temple with his wife Varada-Devi and son Chinna Venkatadri. He performed his 'Muktatulabhara'. (weighed himself against pearls) and the Mahadana Sahasragodhana and other ceremonies.[13] Another interesting incident of Achyuta's time is recorded. At the time of his coronation, he granted certain lands to Arulalaperumal and Ekambareswarar temples at Kanchi and ordered his governor Saluva—Narasimha to distribute them equally to the two temples. But the latter became a notorious rebel and defied the king's orders. He gave a bigger portion of the lands to the Siva temple. This irregularity in distribution was brought to the king's notice when

9. 572 to 574 of 1919.
10. MER, 1919, p. 118.
11. 478, 513 and 569 of 1919.
12. 664 of 1919.
13. 511 and 543 of 1919.

he was camping at Kanchi and he ordered a revised allocation to be made and had the necessary documents drawn up in his presence[14].

Vaishnavite Acharyas associated with the temple.

The inscriptions give us some information about the association of some important Vaishnavite leaders with this temple. Thus, the great Madhva Guru Vyasa Tirtha, who is considered as the second founder of the Madhva sect and who was the spiritual adviser to the Vijayanagara Kings Saluva Narasimha and Krishnadevaraya had visited this temple and gave the gift of a village for conducting a festival for Arulalaperumal in the month of Avani. The Madhva Guru also presented a Seshavahana (Serpent—vehicle) of gold to be used on the fourth day of the festival[15].

Some of the Vaishnavite Jiyars like Parankusa Jiyar and Van Satagopa Jiyar had also given donations to the temple. The latter used to recite *Kausika Purana* on Kausika Dwadasi days. He was a contemporary of Achyutadeva and was probably the pontiff of the Ahobila Matha[16].

Sri Vaishnavite families associated with the temple:

The epigraphs of this temple are replete with the names of the members of several distinguished Sri Vaishnavite families such as Kandadai, Paravastu Tallapakkam, Doddacharya, Tatacharya, Nallan Chakravarti, Prativati Bhayangaram Annan etc.[17].

The members of the famous Tallapakkam family who were poets, greatly honoured by Vijayanagar kings, have given gifts to this temple. The members mentioned are Periatirumalai Ayengar, Siria Tirumalai Ayengar and Tiruvengalappar[18]. The latter, it may be noted, was the author of the well-known Telugu work *Paramayogivilasamu.* Evidently he had considerable influence with the ruling Vijayanagar king because he gave the revenues of a village as gift to this temple.

Another Vaishnavite celebrity who was closely associated with this temple was the famous Ettur Kumara Tatacharya, the royal preceptor for Venkata II. He was the Manager-General (Sri Karya-Durandara) of the Vaishnavite temples of Kanchi, including Arulalaperumal Temple. Many of his benefactions are recorded in the inscriptions. He weighed himself against gold and silver and used all this wealth for erecting the Kalyanakotivimana in gold over the Tayar shrine. He also got the

---

14. 584 of 1919.
15. 370 of 1919.
16. 373 and 374 of 1919.
17. MER 1920 p. 114.
18. 495 and 496 of 1919.

Punyakotivimana over the main sanctum repaired and regilt in gold[19]. He gave a number of *Vāhanas* (vehicles) to the temple [20]. He built a temple for Hanuman on the bank of the tank, now called Ayyangulam and composed a Sanskrit poem of 20 verses called *Hanumadvimsati*, which is inscribed on the walls of the Varadarajaswami Temple[21].

Popular Festivals :

The festivals of Sri Varadarajaswami Temple, particularly the annual 'Garudotsavam' and 'Tiruther', are very popular and impressive and attract a large gathering of people. It is interesting to find that these festivals have been going on there for centuries. An inscription of 13th century, belonging to Rajanarayana Sambuvarayan mentions these annual festivals and the various *Vāhanas* like the elephant, horse, Garuda Tiruther etc., and enumerates the localities through which the deity was taken in procession[22]. A number of other festivals like the *Toppu Tirunal* (Vasantōtsavam) etc. are also mentioned[23].

Special services for the kings:

Apart from the festivals distributed all over the year, a number of special services were instituted by the kings and chiefs to receive the blessings of Lord *Aruḷāla*. Some of the services mentioned are Kulottunga-Solan Sandi, Sundara Pandya Sandi, Gandagopalan-Sandi, Alappirandan-Sandi (instituted by Edirilisola Alappirandan Sambuvarayan) etc.[24].

Temple-Administration and establishment :

This temple, had a large establishment and a number of servants. In the time of Kulottunga III, there were 200 men in the service of the temple and they were called "Tribhuvanaviran Padiyilar "[25]. The temple was managed by a Sabha in the Chola times and by a Board of Trustees or *Sthanikas* in Vijayanagar times[26]. The latter were appointed by the king or his deputy, acting on his behalf. Inscriptions of the temple often mention the Temple-treasury or *Sri Bandāra.* All the money-income which accrued to the temple from its estates and cash-gifts was deposited in the vaults of the treasury. Of course, the money was not kept idle but invested in a profitable manner to the temple. The treasurers are called *Sri Bandarattar*[27].

Thus, from this brief review of the inscriptions, it can be gathered that Sri Varadarajaswami Temple at Kanchi was an important centre of religion and culture which was held in high esteem by the learned men, kings, nobles and the commonfolk.

---

19. 363 of 1919. 20. 475 of 1919. 21. 651 of 1919. 22. 604 of 1919.
23. 530 of 1919. 24. 517, 477, 461, 566, of 1919. 25. 417 of 1919.
26. 392 of 1919. 27. 383 of 1919.

“கல்வெட்டில் நீர்ப்பாசனம்”

by

C. J. AMALANATHAN, M.A.,

பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைக்கும் கல்வெட்டுக்களுள் தமிழ் நாட்டிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டுக்களே அதிகம் என்று சொல்லலாம். அவற்றுள் ஏதோ சிலவற்றைத் தவிர மற்றவை அனைத்தும் நில உடைமையின் ஆதாரச் சீட்டுக்கள் போல்வனவே. கோயில்களில் திருப்பணி பூசை நடத்துவதற்காகவும், அறச்சாலை, கல்விச்சாலை போன்ற நிறுவனங்கள் நடைபெறுவதற்காகவும், அந்தணர் முதலிய அறிஞர்கள் வாழ்க்கைக்காகவும், தானமாக அளிக்கப்பெற்ற நிலங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிவிப்பனவே அவற்றுள் பெரும்பகுதியாகும். இன்றும் கற்பூரவிலை சண்டேசுவரப் பெருவிலை முதலியவற்றாலும், பரிவர்த்தனையாலும், தனியார் அடைந்த நிலங்களைப் பற்றிய விவரங்களைக் கொடுக்கும் கல்வெட்டுக்களும் உண்டு. பாழ் நிலங்களாகக் கிடந்தவற்றைத் திருத்திப் பயிரேற்றப்பட்டவைகளின் விவரங்களைத் தெரிவிப்பனவும் உண்டு.

அத்தகைய கல்வெட்டுக்களைக் கூர்ந்து கவனித்தால் அந்நாளிலே அரசாங்கம் நடைபெற்று வந்த முறையைப் பற்றிய விவரங்களையும் நாம் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். சாசனங்களிலே அரசனுடைய கட்டளைகளைப் பெற்றவர்களாகவும், கையெழுத்திட்டவர்களாகவும், அதிகாரிகள் பலருடைய பெயர்கள் காணப்படுகின்றன. அவர்களில் பெரும்பாலோர் மந்திரப் பதவி வகித்தனர், கணக்கர், புரவு வரி அதிகாரிகள் போன்றோரே ஆவர். அவர்களை அல்லாமல் போர்ப்படையைச் சேர்ந்தவர்களைப் பற்றிய விவ்ரங்களும், அங்கங்கே சிற்சில இடங்களில் கிடைக்கின்றன. அரசாங்கத்தின் மற்றத் துறைகளிலே பணிபுரிந்தோரைப் பற்றிய விவரங்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. நிலஉடைமைகளின் ஆதாரச் சீட்டுகள்போல் அமைந்த கல்வெட்டுக்கள் அந்தத் துறைபற்றிய அதிகாரிகளைப் பற்றி அறிவிக்குமே தவிர, மற்றவர்களைப் பற்றித் தெரிவிக்காது.

உழவுத் தொழிலையே முக்கியமானதாகக் கொண்டது நம் பாரத நாடு. நீர்வளம் முதலிய இன்றியமையாத பல வசதிகள் நன்றாக அமைந்திருந்தால் தான், உழவுத் தொழில் செம்மையாக நடைபெறும். ஆறு, குளம், வாய்க்கால், போன்ற நீர்ப்பாசன சாதனங்கள், நல்ல முறையில் சீராக அமைந்திருத்தல் அவசியம். நிலத்தின் விளைபொருள்களுக்கு வரி வசூல் செய்யும் அரசாங்கம் இன்றைக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது.

இதற்கென்று அரசாங்கத்திலே ஒரு தனித்துறையும் இன்று உண்டு. தேர்ச்சியும், அனுபவமும் வாய்ந்த அதிகாரிகள் பலர் அந்தத் துறையிலே இருந்து காரியங்களைச் செவ்வனே நடத்தி வருகிறார்கள். முன்னாளிலும் அவ் விதமேதான் இருந்திருத்தல் வேண்டும். எனினும் அவ்விதம் பணிபுரிந்த அதிகாரிகளைப பற்றிய விவரம் நமக்குத் தெரியவில்லை. அத்தகைய துறை ஒன்று அந்நாளிலே அரசாங்கத்தில் இருந்ததா என்பதைச் சிலர் சந்தேகிக் கவும் கூடும். பெரும்பாலும் அப் பணிகள் தனியார் செயலுக்கே விடப்பட் டிருந்தன என்றும் அவர்கள் கருதுவர்.

ஒவ்வோரூரிலும் உள்ள ஏரி, குளங்களைப் பராமரிப்பது அந்தந்த ஊர்ச் சபையாரின் பொறுப்பாக இருந்ததைப் பல கல்வெட்டுக்களிலிருந்து அறிய லாம். அதற்கென ஏரிவாரியம் என்ற குழுவும் செயல்பட்டு வந்திருக்கிறது. அந்தக் குழுவினர் அவ்வப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டனர், என்பதும் முதற்பராந்தகச் சோழன் காலத்துச் செதுக்கிய உத்திரமேரூர் கல்வெட்டி லிருந்து தெரிகிறது. சிறு ஊர்களிலே குளங்களில் கிடைக்கும் மச்ச மாகூலைக் (மீன் விற்பனையைக்) கொண்டு, அந்தக் குளங்களைச் சீர்படுத்த வேண்டும் என்ற பழக்கம் இருந்ததையும் அறிகிறோம். இன்னும் புதுச் சேரிக்குப் பக்கத்திலுள்ள பாகூர், திரிபுவனி போன்ற இடங்களில் கிடைக் கும் கல்வெட்டுக்களிலே குளங்களின் பராமரிப்புக்கென்று சில நிவந்தங்கள் ஏற்பட்டிருந்தன என்பது தெரிகிறது. இன்னும் ஏரி ஆயம் என்னும் ஒரு சிறிய வரியையும் வசூலித்து வந்திருக்கிறார்கள். அது ஒரு மாவுக்குப் பதக்கு நெல்லாக இருந்திருக்கிறது. அந்தந்த கிராமங்களில் மற்றும் பயன்படக் கூடிய சின்னஞ்சிறு வாய்க்கால்களைச் செப்பனிடுதல் போன்றவைகளை ஊர் மக்களே கூடி, செய்து முடித்திருத்தல் கூடும். எனினும் பல ஊர்களுக்குப் பயன்படக்கூடிய ஆறு, குளங்கள், நிர்மாணிப்பது, தனியாரின் செயலாக இருந்திருக்க முடியாது. அரசாங்கம் அதிலே நிச்சயமாக ஈடுபட்டிருந் திருக்கும்.

திருக்கச்சூருக்குப் பக்கத்தில் உள்ள சிறு ஏரி ஒன்று, முன்னாளிலே திருத்தப்பட்ட விவரம் ஒரு கல்வெட்டிலிருந்து கிடைக்கிறது. அந்த ஏரி பக்கத்து ஊரான செங்குன்றத்தைச் சேர்ந்தது. அதனை விசாலப்படுத்தி, மதகுகள் கட்டி, திருக்கச்சூர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தண்ணீர் பாயும்படியாகச் செய்ய நினைத்தார்கள். செங்குன்றத்து ஊரார் சம்மதத்தைப் பெற்று, அந்த வேலை, திருக்கச்சூர் கோயில் பணத்தைக் கொண்டு செய்து முடிக்கப்பட்டது, திருக்கச்சூர் கோயிலும் செங்குன்றத்து ஊராரும், தங்களுடைய நிலத்தின் அளவுப்படியே, நீரைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டுமென்னும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பக்கத்தூர்களானால் அவ்விதம் செய்துகொண்டு விடலாம். ஆனால் பல ஊர்களைப் பொறுத்த விஷயமானால் அது தனியாரால் செய்து முடிக்கப் பெறுவது கஷ்டமான காரியமே.

உதாரணமாகத் தஞ்சை ஜில்லாவில் உள்ள நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொள்வோம். காவிரியாறு அங்கே பல கிளைகளாகப் பிரிந்து பாய்ந்து கடலில் கலக்கிறது. ஆற்றின் அடித்தளத்திற்கும் பக்கத்தில் உள்ள கிளை நிலங்களின் மட்டத்துக்கும் அதிக வேறுபாடு இல்லை. இரண்டும் ஏறக்

குறைய ஒரே மட்டத்தில்தான் உள்ளன. ஆறு பள்ளமாக இருந்தால் அதன் நீர் மேட்டு நிலத்திற்குப் பாயாது. அதனால் ஆறு வாய்க்கால் போன்றவை அவற்றின் கரைகளுடைய பலத்தாலேயே நீரை அடக்கிக் கொண்டிருக்கின்றன. ஏரிகளின் நிலையும் ஏறக்குறைய அதே நிலைதான். அவற்றின் கரைகள் எவ்வளவுக்கெவ்வளவு உயரமாகவும், கெட்டியாகவும் உள்ளனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் நீர், பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும். காவிரிக்கு அவ்விதம் முதன்முதல் கரையை அமைத்தவன் சோழன் கரிகாலன் ஆவன். அவனுடைய இந்தச் சாதனை இலக்கியத்தில் பல படியாக புகழ்பெற்றுள்ளது. புண்ணிய குமாரன் போன்ற தெலுங்குச் சோழர்கள் ''காவிரிக்குக் கரை கட்டிய கரிகாலன் வழிவந்தோர்'' என தங்களைத் சாசனங்களில் புகழ்ந்து கொள்கின்றனர். கரிகாலன் கட்டிய கரையும் கல்வெட்டுக்களிலே குறிக்கப் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டத்திலே உள்ள திருப்பழனத்திலிருந்து மதுரை கொண்ட பரகேசரியான முதற்பராந்தகச் சோழன் ஆட்சியின் 31-ம் ஆண்டு கொண்டதாகக் கிடைக்கும் கல்வெட்டிலே, அம்மன்னனுடைய தாதி ஒருத்தி நிலம் வழங்கிய செய்தி கொடுக்கப்பட்டுள்ளது, அந்த நிலத்தின் நான்கெல்லையும் காரிகாலக்கரையும் இடம் பெற்றிருக்கிறது. (தென்னிந்திய சாசனங்கள் தொகுதி 5. எண். 693) அவ்வாறே தில்லைத்தானத்திலிருந்து கிடைக்கும் இராஜகேசரிவர்மனுடைய 13-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றில், புஞ்சையிலிருந்து நஞ்சையாக மாற்றப்பட்ட நிலத்திற்கு, கரிகாலக்கரை எல்லையாக அமைந்து காணப்படுகிறது (தெ.இ சா. தொகுதி 3. எண். 113)

காவிரியின் நீரைப் பங்குபோட்டுக் கொள்வதிலே கருத்து வேறுபாடு பழங்காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. கி. பி. 12-ம் நூற்றாண்டின் மத்தியில் அத்தகைய மனவேற்றுமை ஒன்று ஏற்பட்டது. மைசூரை ஆண்ட போசலர் மன்னன் காவிரிக்குக் குறுக்கே அணைபோட்டு நீரை வேறு திசையில் திருப்பி விட்டான். அதனால் சோழநாட்டுப் பாசனத்திற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. அப்பொழுது சோழ மன்னனான இரண்டாம் இராஜராஜன் படை எடுத்துச்சென்று அந்த அணையை உடைத்துக் காவிரியின் தண்ணீரைச் சோழநாட்டிற்குக் கொணர்ந்தான். இந்தச் செய்தி அவன் அவைப் புலவரும் ஆசிரியப் பெருமானும் ஆன ஒட்டக்கூத்தராலே தக்கயாகப் பரணியில்

'' அலைகொன்று வருகங்கை வரராமன்மேன்
மேல் அடைகின்ற குன்றாடறுக் கின்ற பூதம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராசன் ராசன் கை வாளென்ன வந்தே.''

(தாழிசை—549)

என்றும்,

இராஜராஜசோழன் உலாவிலே,

''சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வான்காண வாரீர்'' (கண்ணி—85)

என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெற்ற பழம்பாடல் ஒன்றிலும்,

— சைய

"மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணி நாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்"

(பொருள், புறத்திணை, சூத்திரம் 36)

என்று இது குறிக்கப் பெற்றுள்ளது. காவிரியின் குறுக்கே அணைபோட்டு நீரை வேறு வழியில் திருப்பியதைப்பற்றிச் சரித்திர பூர்வமாக நமக்குக் கிடைக்கும் முதற்குறிப்பு இதுவேயாகும். இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலே இயற்றப்பெற்ற பெரிய புராணத்திலே அதன் ஆசிரியர் சேக்கிழார் தம்மை ஆதரித்த சோழன் அநபாயனைப் பற்றி,

"பொன்மலைப் புலிநின் றோங்கப் புதுமலை யிடித்துப் போற்றும்
அந்நெறி வழியேயாக அயல்வழி யடைத்த சோழன்
மன்னிய அனபா யன்சீர் மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூ ரென்னுஞ் சுடர்மணி வீதி மூதூர்"

(எறிபத்த நாயனார் புராணம். பாடல்-2)

என்று பாடியிருக்கிறார். இவ் விரண்டும் ஒரே நிகழ்ச்சியைக் குறிப்பன.

ஆற்றுப்பாசனம் இல்லாத இடங்களிலே, ஏரிகளையும், குளங்களையும் அமைத்து உபயோகித்து இருக்கிறார்கள். அவற்றுள் பெரும்பாலானவை அரசனாலோ. அதிகாரிகளாலோ, செல்வந்தர்களாலோ, ஓரளவு அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று நிர்மாணிக்கப்பட்டவை என்னலாம். சோழ வாருதி (சோளிங்கபுரம்) வயிரமேகத் தடாகம் (உத்திரமேரூர்) கன்னி நங்கை (சோழபுரம) இராஜேந்திர சோழப் பெரிய ஏரி [புங்கனூர்) இவை அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டுவந்தன. மண்ணால் அமைந்த கரையானது பாழ்பட்ட நிலையிலிருக்கும்போது, அதை நீக்கி, கற்படை அமைத்த செய்திகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்களும் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் தாலுக்காவில் உள்ள எருக்கங்குடியிலிருந்து கிடைக்கும் சடையமாறனுடைய ஆட்சியின் 18 ம் ஆண்டுக் கல்வெட்டொன்று முக்கியமானது. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் ஆட்சியிலே இருப்பக்குடிக் கிழவன் என்ற விருதைப்பெற்ற எட்டி சாத்தன் என்னும் அதிகாரி, அத்தகைய திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளான். இருஞ்சோழ நாட்டிலே. அவன் புதுப்பித்தும், புதியதாகத் தோண்டியும் கிழவனேரி என்ற பெயரில் பல நீர்நிலைகள் உள்ளன.

"ஆலங்குடிப் பெருங்குளத்து மடை
வைத்தும் அதன் குளவாய்
நிலப் பெருங்கற் பிளந்து சாயப்
புனல்வரக் கண்டும் அம்பலத்தொடு
கிழவனேரியும்"

(தெ. இ. சா. தொ. 14. எண் - 44)

என்பது போன்ற பல செய்திகளைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வடக்கே இப்பொழுது பொன்னேரி என்று கூறப்படும் இடத்தில் ஒரு பெரிய ஏரி இருந்தது. தற்காலத்தில் அது எக்கர் அடித்து மேடாக உள்ளது. அந்த ஏரியின் நீளம் தெற்கு வடக்காகப் பதினறு மைல். ஏரிக்கரை மிகவும் பலமாகப் போடப்பட்டிருந்தது. இதற்கு நீர் வருவதற்காகத் தென்புறத்தில் கொள்ளிடத்திலிருந்து ஒரு கால்வாய் இருந்தது. அதன் நீளம் அறுபது மைல். வடக்கிலும் வெள்ளாற்றிலிருந்து, மற்ருெரு கால்வாய் இருந்தது. இவ் விரு கால்வாய்களும் இருந்தன என்பதற்கு அறிகுறியாக அவற்றின் சுவர்கள் இன்றைக்கும் காணப்படுகின்றன; தென்னுற்காடு மாவட்டத்தில் உள்ளதும் மிகவும் பெரிய ஏரியாகக் கருதப் படுவதும், எழுபத்து நான்கு மதகுகளையுடையதுமான வீராணம் என்னும் ஏரி ஒரு காலத்தில் இப் பொன்னேரியின் வடிகாலாகவே உபயோகிக்கப் பட்டு வந்தது. நீர்ப்பாசனத்திற்காக இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏரிகளுள், வடநாட்டில் மாளவ தேசத்து அரசனுன போஜன் என்பவனுல் ஏற்படுத்தப்பட்ட போஜபுரத்து ஏரியே மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று இதுகாறும் ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தார்கள். ஆயினும் இப்பொன்னேரியை நன்கு கவனித்தவர்களுக்குப் போஜபுரத்து ஏரியைவிட இதுவே மிகவும் சிறந்தது என்பது நன்கு விளங்கும். முதலில், போஜபுரத்து ஏரியை அமைப்பதற்கு வேண்டிய இயற்கை வசதிகள் இருந்தன. இரு குன்றுகளுக்கு இடையில் உள்ள பள்ளத்தாக்கை அடைத்து அணைக்கட்டித் தண்ணீரைத் தேக்க வேண்டியதே தேவையாக இருந்தது. ஆனுல் தென்னிந்தியாவிலோ சுற்றுப் புறங்களில் வெகுதூரம் வரைக்கும் மலைகள் இல்லாத ஒரு இடத்தில் அதுவும் சமதளமான இடத்தில் பதினறு மைல் தூரம் பலமான கரைகளைக் கட்டி அணைத்துச் சுமார் அறுபது மைல் தூரத்திற்குக் கால்வாய் வெட்டிப் பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீரைக் கொணர்ந்து தேக்கி ஏரியை அமைக்கவேண்டி இருந்தது. இதைமட்டும் நாம் சற்று கவனித்தால் இதன் பெருமை நன்கு விளங்கும். முன்னுளில், அதற்குச் சோழகங்கம் என்று பெயர் வழங்கிவந்தது. தவத்தின் வலிமையால் கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்த பகிரதனைக்காட்டிலும் தன்னுடைய தோள்வலியால் கங்கையை அங்கே கொணர்ந்த இராசேந்திரசோழன் பெருமை வாய்ந்தவன் அல்லவா என்று அவனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் சமஸ்கிருத பிரஸஸ்தியைப் பாடிய கவிஞர் உரைப்பது சாலப் பொருத்தமானது.

ஆற்றிலே பெருவெள்ளம் வருங்காலங்களில், கரைகள் உடைந்து பக்கத்து நிலங்கள் எக்கர் அடித்துப் பாழாக்கிவிடுவதுண்டு. அதேபோல், கிளைகள் பிரியுமிடங்களில் நடுப்பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதுமுண்டு. அதற்காக கிளைகள் பிரியுமிடங்களிலே வெள்ளத்தடுப்புக்கான காரியங்களை முன்னுளிலே மக்கள் கவனித்து வந்திருக்கிருர்கள். ஸ்ரீரங்கத்திலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டால் அது தெரிய வருகின்றது. அத்தகைய அபாயத்தைத் தடுக்க நலந்திகழ் நாராயணஜீயர் என்பார், காவிரியும், கொள்ளிடமும் பிரியுமிடத்திலே ஒரு நீர் இயக்கியை (ஜல இயந்திரத்தை) அமைக்க முற்பட்டார். ஸ்ரீரங்கத்தை வெள்ளத்திலிருந்து காப்பாற்ற அது அவசியமானது, ஆனுல் அது பக்கத்து ஊர் ஒன்றுக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. ஆகவே அந்த ஊரார், நாராயணஜீயர் அவ்வியந்திரம்

அமைப்பதற்கு ஒப்பவில்லை. கடைசியில் சமரசம் ஏற்பட்டு இயந்திரம் அமைக்கப்பட்டது என்பது வரலாறு.

அது அமைக்கப் பெறுவதற்கு முன்னால் வெள்ளத்தால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப்பற்றி ஸ்ரீரங்கத்திலே கிடைக்கும் வேறு பல கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. வெள்ளத்தால் மணல் மேடிட்ட விளை நிலங்கள் பாழாகி விட்டன. அவற்றைச் சீர்திருத்தி மறுபடியும் பயிரிடுவதற்குத் தகுதியாகச் செய்ய பெருஞ்செலவு பிடிக்கும். அவ்வளவையும் சுலபமாகச் செய்ய முடியாது; அதனால் கோயில் அதிகாரிகள், அந்த நிலங்களைப் பல கூறுக ளாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியே ஒவ்வொருவரிடம் ஒப்படைத்தார்கள். அவ்விதம் நிலங்களைப் பெற்றவர்கள் மேட்டை அழித்து, பயிரிடுவதற்காக அவர்களுக்கு பலவகையான நீண்ட காலச் சலுகைகளையும் அளித்திருக்கிறார்கள். அதேபோல பாழ் நிலங்களைப் பயிராக்கிக் கொண்டுவரச் சலுகைகள் அளித்த விவரங்களைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் வேறு பல இடங்களிலும் கிடைத்துள்ளன.

இத்தகையத் திருப்பணிகள் பலவற்றையும் செய்வதற்குத் திட்டமிட்டு வழி வகுத்து, நிறைவேற்றிய புரவலர்கள் பலருடைய பெயர்களே கல்வெட் டுக்களிலே காணப்படுகின்றன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு முக்கிய புருஷர்களாகத் திகழ்ந்த அதிகாரிகளின் பெயர் சில இடங்களில் மட்டும் காணப்படுகிறது.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலுகாவில் உள்ள இராமநாதபுரம் என்ற ஊரிலிருந்து கிடைக்கும் கல்வெட்டொன்று, இதை எடுத்துக் காட்டுவ தாக உள்ளது. மாறஞ்சடையன் என்னும் பாண்டிய அரசனுடைய அதிகாரி யான நக்கன் புள்ளன் என்பான் தன் பெயரால் புள்ளனேரி என்ற நீர்நிலையை அங்கே உண்டாக்கினான். அது முடிவதற்குள், அவன் காலமாகி விடவே அவன் மகன் புள்ளன்நக்கன் அதை முற்றுவித்தான். அதைப்போலவே, அந்த ஏரியை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருந்த தச்சன், வடுகங்கூற்றன் அந்தப் பணியை முடிக்காமல் இறந்துவிடவே, அவன் மகன் குறைப்பணியை முற்றுவித்தானும்.

A PALLAVA METAL IMAGE: EPIGRAPHICAL EVIDENCE

by

V. R. MANI,

Research Fellow, Government Museum, Madras.

A controversial albeit lively question confronting an art-historian of South India relates to the casting of metal images during the Pallava period. There has been a tendency[1] to ascribe a few of the well-known Pallava metal images to the period of transition from the Pallava to the Chola or to the Chola itself which may create the impression that the art of making metal images had not attained great heights under the Pallavas, if not altogether unknown to them. Considering the fact that under the early Cholas the output of metal icons was prodigious in quantity and unparalleled in quality it is difficult to assume that this art had suddenly blossomed under them with out any antecedent evolution. The happily-extant, Buddhist metal icons unearthed at Amaravati and Buddhapad[2] in the heart of the Satavahana kingdom warrant the conclusion that the art was in a flourishing state even in the early centuries of the Christian era in South India. If, in spite of this hard fact, a doubt has been entertained as to the existence of metal icons which could be indisputably assigned to the Pallava period, it is due primarily to the fact that stylistic features do not always offer wholly dependable clues for chronological classification.

By their detailed and analytical study of the sculptures in Pallava monuments, art-historians have found certain features common to them and which, generally speaking, distinguish them from the carvings of the earlier and later periods. These are the stylistic clues invaluable for dating; and these clues include the pose and physiognomical traits, decorative details like costumes and ornaments, the positions of the *yajñōpavita* and the weapons held, to mention only the most important

1. Douglas Barret in his *Early Cola Bronzes* attempts to place a few famous Pallava bronzes in the transitional period.

2. *Journal of the Royal Asiatic Society*, 1895, pp. 618 ff.

among them. Useful as these features are for the determination of date, the risk involved in exclusively depending on them can hardly be exaggerated. For example the position of the *yajñōpavita* – i.e. its running over the right arm—which is taken to offer an important clue for dating a Pallava image is also to be found in several images in stone and metal of incontrovertibly later periods. A recondite example of this is a demonstrably Chola image of a Tripurantaka in the temple at Kodumudi;[3] and similar instances could be multiplied. Not only this. A few features that are considered to be characteristic of the Chola period are discernible in some Pallava specimens. It has been the general feeling that the lion-head clasp which is invariably found in the Chola images is absent among Pallava figures;[4] but, one should note, this detail is seen in the Pallava sculptures in the Kailasanatha temple at Kanchipuram built under Narasimhavarman II Rajasimha. This feature is also to be found rather prominently in the famous bronze image of Vishapaharana[5] in the Government Museum, Madras, which by a consensus of considered opinion is a Pallava icon. If anything is apparent from these considerations it is the somewhat undependable nature of stylistic characteristics making our attitudes towards them ambivalent and uncertain. It is perhaps this which makes discerning critics feel that there are no extant metal images which could be authoritatively called Pallava.

It is therefore very obvious that one has to be supported by positive and authentic evidence in his statement regarding the existence of the Pallava metal icons. And of such evidences we are fortunate to possess one. All the previous writers on this subject do not seem to have taken necessary notice of an apparently obscure inscription in the Vaikuntanatha temple at Kanchipuram, built probably under Nandivarman II Pallavamalla. This inscription makes a useful reference to a metal image and indicates thereby that the art and technique of metal casting was not unknown to the Pallavas.

This epigraph with many a letter in typical florid Pallava-Grantha characters is incised on the tier of the base of the central shrine. The text of the inscription has been published in the *South Indian Inscriptions*, Volume IV (No. 131) and reads thus:

Line 1. *āvuḷ śirppa[ra]meśvara viṇṇagarattavarkkorāyiram poṉ palittālam paḍimemukuḍuttā ṉeṉṟarimingaḷe.*

---

3. R. Nagaswamy, *Lalitkala No. 9.*
4. C. Sivaramamurti, *South Indian Bronzes*, p. 34.
5. Karl Khandalavala, *Marg*, IV, No. 4, p. 19. F. H. Gravely and T. N. Ramachandran, *Catalogue of Hindu Metal Images in the Madras Government Museum* p. 108.

Line 2. *āyiram śempoṉ.........yirappatterumāṉappoṉ Abimāna-siddhiyāyi [ṉa] Pallavaṉrā [ṉe].*

It is evident from this inscription that a certain Abhimana Siddi who was a Pallava, gave one thousand *pon* (gold) obviously for the making of a plate for offering *bali* and also for a *padimam.* The Tamil word *padimam* is a derivative from the Sanskrit *prathima* and denotes an image which can be in stone, wood or metal. But here the image in question is undoubtedly one in gold as the inscription says that gold was given for making a plate and a *padimam.* This is the earliest known inscriptional reference to a metal icon.

It has been the practice in temples at least right from the Pallava times to offer *bali* to metal images which are referred to in inscriptions as *Sribalideva* or *Kolgaidevar.* In the light of the present Pallava inscription and a few later inscriptions of the Chola period it is possible to conclude that in several cases these images could have been made of gold. An inscription of Uttamacola from Tiruvorriyur in the Chingleput district dated in his fifteenth regnal year (corresponding to A. D. 984) records that the king made an order for making a gold image of Sribalideva and presenting it to the temple of Mahadeva at Tiruvorriyur and that the order was carried out by a certain Senni-yeripadai-chcholan Uttamasolan.[6] Another inscription of the famous Rajaraja I from Tanjore dated in the 312th day of his twenty-fifth regnal year (corresponding to 1010 A. D.) records that the king gave one gold image of Kolgaidevar to be present at the sacred offerings (*Sribali*); the image is said to have weighed 829 *kalanju* and three quarters and three *manjadi* [7]. A still later inscription from Tiruvarur in the Tanjore district dated in the forty-eighth year of Kulottunga I (corresponding to 1117–18 A. D.) refers twice to an image of Chandrasekharadeva as *śrībali eḻundaruḷum* i. e. who was pleased to be present during the offering of the sacred *bali*;[8] this inscription is silent about the metal in which the image of Chandrasekharadeva was made. It is very clear from the above that a metal image was the recipient of *śrībali* through the ages and the earliest reference to such an image is provided by the Pallava inscription under discussion.

Apart from palaeography there is another clue to the dating of the present epigraph. By the side of the inscription on the tier of the base of this temple there is a lithic record of the Pallava king Dantivarman dated in his seventeenth regnal year[9] and the position on stone of the former to that of the later shows that the first is earlier in time than

6. *South Indian Inscriptions,* Volume III, No. 143
7. *South Indian Inscriptions,* Volume, II, No. 1.
8. *South Indian Inscriptions,* Volume, XVII, No. 624.
9. *South Indian Inscriptions,* Volume IV, No. 132,

the second. In other words the Pallava Abhimana Siddhi figuring in our inscription should be assigned to a date preceding the seventeenth regnal year of Dantivarman. The last known year of Dantivarman's father, Nandivarman II Pallavamalla, is A. D. 796—the date of the Mamallapuram inscription of his sixty-fifth regnal year—and if Dantivarman is taken to have ascended the throne in the same year his seventeenth regnal year should fall in A. D. 813. Therefore Abhimana Siddhi Pallava and the metal image referred to in his inscription should be anterior to A. D. 813.

Generally, endowments made to temples were in the form of lands, money or cattle. They were made for various purposes, like burning lamps, conducting worship (including specified services and festivals), feeding of ascetics and others and keeping the temple premises in good repair.

Epigraphs record that sheep, cows and bull were endowed to temples. It is interesting to note that for furnishing the ghee necessary for burning a perpetual lamp, (*nundha vilakku*) a unit of 96 sheep was considered necessary. In the case of cows a unit consisted of 32 members and occasionally a bull was also added on to the unit. The cattle so endowed was known by the special appellation *Sava-muva-p-per-adu*. The term meant that the cattle had neither death nor senility. This implied that the specified number was regularly maintained by the replacement of the dead and old ones with the young.

---

1. See: *South Indian Inscriptions* Volume VII, Inscription number 68.

Some of the inscriptions from Madhurantakam in the Chingleput District provide good illustrations of records of gifts of cattle for lamps. An inscription relating to the period of Kullottunga I (1070-1120 A. D.) records a gift of 32 cows and one bull for a lamp in the temple at *Madhukrantaka-Chaturvedimangalam.* Another inscription belonging to the period of Vikrama Chola (1118-1135 A. D.) refers to a gift of 96 sheep for a lamp by Sambuvaroyar.

Gifts of gold were also made to temples. For instance, an inscription (No. 460 of 1905)[2] in the Tiruvalangadu: temple (Chingleput District) of the period of the "Ganga-Pallava King", Nirpatungadeva, records that Queen Kadavanmadeviyar made a gift of 1C8 *Kalanju* of gold to the temple. Endowments were also made for the conduct of special services in temples by kings on the days which had their natal stars and those of theirs spouses. In the names of the sovereigns, sometimes, even their subordinates made such endowments.

The chanting of *Thiruppadigams* (sacred hymns) before deities was a regular and important feature of worship in the temples and therefore endowments were made for this specific purpose also. The references to such endowments date back to the days of Parantaka I (907–955 A. D.) (No. 176 of 1923 and No. 349 of 1918. etc.) Epigraphs record that endowments were also made for the recitation of *Vedas* and other sacred works in the temple during worship (No. 123 of 1926). There are also records which show that specific endowments were made for the feeding of pilgrims and *tapasvins,* who frequented temples. This practice of feeding appears to be one of the regular features of temple-management in those days and, for the purpose, mostly lands were endowed.

The inscriptions of Tamil Nad reveal that *land endowments* constituted the most substantial part of all the varied types of endowments made to temples. Small and large units of agricultural lands were endowed to temples for various purposes. The endowment sometimes consisted of a whole village or a number of villages. For instance, the famous Tiruvalangadu Copper Plate Grant of Rajendrachola I (1012–1044 A. D.) registers the grant of the village Palaiyanur to the Siva temple at Tiruvalangadu in the Chingleput District. Generally, the families, who lived on such *Devadana* lands and held house-sites and house-gardens, were in some way or other connected with the services of the temple. The grant of the *Kuram* village in the Chingleput District, which acquired the name *Paramesvaramangalam,* may be cited as

2. The number denotes the number of the inscription copied in the particular year and published in the appendix of the *Annual Report on South-Indian Epigraphy* (A. R. E.).

an illustration in point (see S. I. I., Vol. I.). Generally, when endowments of lands or villages were made, the donors got them exempted from taxes also. When endowments were made by the State, they were made as tax-free gifts. An inscription from Tiruttani (No. 435 of 1905) belonging to the period of Aparajita Vikramavarman (879-897 A, D.) relates how Nambi Appi, the builder of the Tiruthani Siva temple, while endowing the God therein with 1,000 *kulis* of land, also freed it perpetually from land-tax by paying the *Sabha* in gold.

A study of land endowments in early times shows that even among them there were a considerable number of varieties. Each particular variety of land endowment was for a specific purpose and it carried a special appellation.

SALAIS IN SOUTH INDIAN INSCRIPTIONS

V. S. RAJAM, M.A.,

The temple in South India has played a unique role in the promotion of Hindu culture and learning. Particularly notable is the facility for religious education that the temple provided. South Indian inscriptions speak of 'Salais' in the extreme south. We hear of the Srivallabhapperunjalai in Kanyakumari, the Parthivasekharapuram Salai (in the Vishnu temple at Parthivasekharapuram near Minchirai) and the famous Kandalur Salai in Trivandrum.

The term 'Salai' is found used in several senses. It meant a public institution of a charitable nature. Thus Arachalai was a place of feeding and Adular Salai was an asylum for indigent persons[1]. But in respect of the Salai closely connected with the temple, it denoted a boarding house of scholars, described as 'Sattars', 'Saranattar' and, in other inscriptions, as 'bhattar'. Their duty was to learn, chant and teach the Vedas.

The earliest Salai, that we hear of in epigraphy, is the one at Kanyakumari, known as Srivallabhapperunjalai. It is not known who founded this Salai. It is probable that Sri Mara Srivallabha, the early Pandya King (C. A. D. 835-62), was the founder of this institution, as the name would suggest[2]. Kanyakumari, the celebrated place of sanctity, was included in Purattayanadu of the Pandyan dominion and it is natural that the Pandyan monarch established this sacred institution in the temple. From the Huzur Office Plates[3], it is learnt that Kokkarunandadakkan purchased from the Sabha of Minchirai (near modren Eraniel) a plot of land where he had a temple erected, in which he set up an image of Vishnu in A. D. 866. In this temple, at a new village which he named as Parthivasekharapuram, the King established a Salai, in which arrangement was

1. Salai also denoted in a general sense a street of a villiage. See for example 'Valiya Salai' and 'Arya Salai' in Trivandrum.

2. In this connection it is notable that the Ay King Kokkarunandadakkan had assumed the name Srivallabha. He was the founder of a Salai at Parthivasekharapuram. Could he have established one at Kanyakumari and called it after his assumed name?.

3. Travancore Archaeological Series. Vol. I. pp 5-9.

made to feed ninety Sattars. The Plates describe the duties of the Sattar, which included the study of the Vedas. Thus it would mean that the Salai here denoted a boarding school of Vedic study. The famous Kandalur Salai is now known to have been identical with Valiya Chalai of Trivandrum Town[4]. Who founded it is not known. But since the Huzur Office Plates state that the salai at Parthivasekharapuram was set up on the pattern of Kandalur Salai, it is obvious that it was established sometime prior to A. D. 866. It was founded either by a Chera King or by an Ay predecessor of Kokkarunandadakkan.[5]

The expression, 'Kandalur Salai Kalamaruttaruli', occurring in South Indian inscriptions has defied a clear interpretation. The earliest inscription which refers to it is the Darsanankopu record of the 8th year of the reign of Rajaraja I. In one of his later epigraphs, the King is extolled as 'Kandalur Salai Kalamarutta Rajarajadevan'. Several later Chola and Pandya Kings also assumed this as an honorific title. These show that it was a great achievement. Naturally the meaning of the term 'Salai' in this context has been a subject of controversy.

What is the significance of the word 'Salai' here? Does it refer to a charitable institution or to a road-stead? Dr. Hultzsch took it at first to mean a 'hall' and afterwards gave it up in favour of a 'road stead' or port, leading to the conclusion that a fleet of ships was destroyed at the part of Kandalur. 'Kalam' was taken as a shortened form of Marakkalam, meaning a ship.

T. A. Gopinatha Rao rightly questioned the validity of this interpretation and explained the word 'Salai' as a charitable institution, where Brahmins were fed. This view has received support from Kavimani S. Desikavinayakam Pillay, T. K. Joseph and others. The use of the word 'Salai', as a charitable institution of learning, is borne out by reference in literature and epigraphy. The Kanyakumari inscription of Parantaka Pandya mentions, for instance, the King's endowment to the Salai. The words 'Maraiyavar', 'Ayirattenmar', 'Aramvalarppa' etc. suggest that it specified a centre of learning. Maniambalam here meant only the meeting place or the hall of the scholars. 'Ayirathenmar' denotes the number of Brahmins who resided there and the word

---

4. K. V. Subramania Ayyar, the epigraphist, identified it with a village in the Kulathur Pakuti of the Neyyattinkara Taluk. In that village the temple of Kandalur Salai Mahadevar stands. But that does not mean that the village was identical with Kandalur Salai. See Kerala Society Papers, Series 2, p. 101, "A Short Note on Kandalur Salai" by S. Desivinayakam Pillay.

5. The Kanyakumari inscription of Rajadhiraja refers to the Salai of the Chera. "வீரபாண்டியன் தலையும் சேரலன் சாலையும் இலங்கையும் தண்டாக்கொண்ட......ஸ்ரீ ராஜாதி ராஜ தேவர்க்கு" This suggests that Kandalur Salai was established by a Chera King.

'aramvalarppa' indicates their work of studying the sacred literature. Salai is also used in the sense of a hall in the inscriptions. We hear of the Akkirasalai, the feeding place.

Therefore, in the light of the explanation of the above passage, 'Kandalur Salai Kalamarutharuli' may be taken as the King, having been pleased to make an endowment and fix the number of Kalams, namely, the number of Brahmins to be fed in the institution at Kandalur.

Sri Vallabhapperunjalai, the Salai at Kanyakumari, was later renamed as Rajarajapperunjalai by Rajaraja Chola.[7] For this Salai the provision of a regular income was made by the Chola Kings.[8] A number of villages were endowed for the maintenance of the institution. These inscriptions throw some light on the work done by the Sattars. They were entrusted with the duty of collecting the paddy according to the accounts as laid down by the King. The education provided by the temple through this Salai was exclusively for Brahmins; but this was in pursuance of the prevalent traditions of the day. This is evident from the inscription of Kulottunga Chola.[10]

Further the inscription of Rajadhirajadeva, 30th year at Kanyakumari, records that the supply of Salt (urai salt)[11] that was received from the saltpans of Manarkudi for the Srivallabhapperunjalai alias Rajarajapperunjalai, had for sometime been discontinued, and that this charity was revived by the Chola King. In the olden days it was the practice of the owners of the Manarkudi saltpans to set apart a nali of salt for each kalam of it that came in or went out of the pans, as urai for the use of Srivallabhapperunjalai. The King ordered that this custom should be once more adopted. Here the village of Manarkudi is called as Mahipalakulaperalam.

---

6. T. A. S. Vol. I No. III. p. 4.

கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச் சாலைக்
கலமறுத்து மன்னுபுகழ் மறையவர் தம்
மணியம்பலத் துளினிதிருந்து ஆயிரத்தென்மர்.

7. Travancore Archaelogical Series Vol. I p. 164.

8. ராஜராஜேசுவரத்து சட்டபெருமக்கள் வசம் ஆண்டாண்டுதோறும் இந்நெல்லு அடிக்கக் கடவோகமாக இசைந்து இக்காசு கொண்டோ மனற்குடி ஊரோம்'—T. A S. Vol. VI p. 150

9. இவ்வூர் (குமரி) ராஜராஜன் சாலைக்கு சாலா போகமான் ஊர்கள் (T.A.S. Vol. I p. 165.

10. போகத்தில் ஐம்பத்து பிராம்மணர் அமர்ந்து வரியில் இட்டுக்குடுத்தும்—Epigrapica Indica Vol. XXVI No. 37 pp. 274, 275.

11. The term 'Urai' is even now used in some districts of Tamiland like those of Trichinopoly and Tanjore. When paddy or other things are measured, for every stated quantity, say sixty marakkals, a handful of articles measured is kept as a mark in a small heap. Therefore the number of such heaps gives the number of sixty marakkals measured. That quantity of the grain that is kept as an index of measure, is called the urai.

Apart from these pieces of information, we are unable to determine the number of Sattars and the exact pattern of education that they were given. In all probability, the Vedas and other sacred literature were taught and discussed there.[12] The recitation of the Vedas played an important part in the Salai set up by Kokkarunandadakkan.[13]

Apart from Kandalur Salai, Srivallabhapperunjalai and Parthivasekharapuram Salai, there were other centres of learning, like the celebrated Ghatikas at Kanchi. The Velurpalayam inscriptions reveal that King Narasimhavarman established a Ghatika at Kanchipuram and also constructed the Kailasanatha temple. Ghatikas appear to have flourished in places other than Kanchi also. When digging a tank, known as Atikavaam in Sikkulla Agraharam in Tunu Taluk of the Godavari District, a Copper Plate of Vikramendravarman II (A. D. 525), belonging to Vishnukundin dynasty, was recovered, which states that the donor earned merit by establishing Ghatikas according to Sastrasampradaya.[14] Tradition has it that there existed a Ghatika in Vembattur, now known as Veppattur in Tanjore District, with well-versed Vedic Scholars, Somayajis and Bhattars.[15]

Some of the other centres in South India were known as Vidyasthanas, where also the Atharvaveda was taught and chanted. There was one such centre at Bahur (about 868 A. D.), a place midway between Cuddalore and Pondicherry. With reference to the number of students benefitted by Ghatikas, the words 'Ghatikai Ezhayiravar' (7000) are found in one place, "Ghatikaasahasram" (1000) in another place, and 'Ghatikai Madhyasta Moovayiravar (3000) in a third place. In the Ghatika referred to in the Kasakudi inscriptions, all the four Vedas appear to have been studied.[16] There also existed another centre of learning at a place called Ennayiram, othervise known as Rajarajachatur-vedimangalam (between Viluppuram and Tindivanam), The existence of another centre of learning at Tirubhuvanam near Bahur can be inferred from the inscriptions in the Varadaraja Perumal temple in Kanchi, The year of these inscriptions is determined as 1084 A. D., which fell during the reign of Rajadhiraja. These inscriptions say that there were

---

12. The Huzur Office Plates show that seats were allotted to members of the various sections of the Vedas T. A. S. Vol. p. 8. Further, the conditions of entrance into the Salai included a knowledge of Vyakarana, Mimamsa and Paurohitya. It is interesting to note that penalties for misconduct were laid down and that strict discipline was enforced. See Ibid. p. 9.

13. T. A. S. Vol. I. p. 8.

"இச்சாலைக்குப் பெய்த கலத்தில்
பனிழிய சாரணத்தார் உடைய கலம்
நாற்பத்தைந்து தபிப்திரிய சா
ணத்தார்.................................

14. Epigraphica Indica Vol. p. 196.

12 teachers, teaching different branches of religious learning. There was also one teacher each for the subjects, Vedanta, Grammar, Mahabharatha, Ramayana, Manu Dharma and Vaikhanasa. The total number of students was 190.

In all probability the earliest Ghatikas and Salais appeared in South India beginning from the time of the Pallavas. They were established in the extreme south by the Ay Kings and the Pandya sovereigns. They seem to have reached the height of their influence under the Cholas. We do not hear of them prominently thereafter, although Mahabharatha Kalagams[17] flourished in some temples till recently.

15. A. R. E. 293 of 1908.
16. S. I. I. Vol. II Part III p. 349.
17. Place where the Mahabharatha is expounded.

நாஞ்சில் நாட்டில் நாயக்கர் படை

வித்வான் மு. சண்முகம்பிள்ளை
தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

நாஞ்சில் நாடு என்பது இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி. இந்நாட்டின் வரலாறே மிகப்பழமையானது. சங்க நூலாகிய புறநானூற்றில் 'நாஞ்சில் வள்ளுவன்' என்னும் குறுநில மன்னனைக் காண் கிறோம் (புறம். 137—140, 380). இவன்,

> செவ்வரைப் படப்பை நாஞ்சில் பொருந !
> சிறுவெள் அருவிப் பெருங் கல் நாடனை !
>
> (புறம். 137 : 12-13)

> ஓடாப் பூட்கை உரவோர் மருக !
> உயர் சிமைய உழா அ நாஞ்சில் பொருந !
>
> (புறம். 139 : 7-8)

> தீம் சுளைப் பலவின் நாஞ்சில் பொருநன்
>
> (புறம். 380 : 9)

என்று புலவர்களால் போற்றப்படுகின்றான். உழுதல் செய்யாத நாஞ்சில் உயர்ந்த சிகரத்தையுடைய நாஞ்சில் எனப்படுதலால், இங்கே நாஞ்சில் என்பது மலையைக் குறிப்பது. நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்ட நாடு 'நாஞ்சில் நாடு' என வழங்கப்பட்டது.

நாஞ்சில் வள்ளுவன் பெருவீரன்; பகைவர்க்கு அணுக அரியவன்; நட்பாளர்க்கோ மிக நெருங்கிய உறவினன்போல விளங்கினான்.

> துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையன் ;
> நட்பு எதிர்ந்தோர்க்கே அங்கை நண்மையன்
>
> (புறம். 380 : 10-11)

என்று கருவூர் கதப்பிள்ளை என்பார் பாராட்டுகின்றார். இவன் அந்நாளில்' தன் நாட்டை அடுத்துள்ள பாண்டியப் பேரரசர்க்குப் படைத்துணைவனாய் விளங்கினான். போரில் பேரரசர் இவன் உதவியை நாடினர். எனவே, இவன் போர்களிலேயே பெரும்பொழுதைச் செலவிட வேண்டியவனாயினன். ஆகவே, மருதனிள நாகனார். 'போர் வருவதன் முன்பே பரிசில் தந்துவிடுவா யாக' என்று வேண்டுகின்றார்.

ஈதல் ஆனுன், வேந்தே ; வேந்தற்குச்
சாதல் அஞ்சாய், நீயே ; ஆயிடை,
இரு நிலம் மிளிர்ந்தி சினு அங்கு, ஒரு நாள்,
அருஞ் சமம் வருகுவது ஆயின்,
வருந்தலும் உண்டு, என் பைதல் அம் கடும்பே

(புறம். 139 : 11-15)

என்பது புலவர் வாக்கு. இங்கே ' வேந்து ' என்றது 'சேரனை' என்பர் புறநானூற்றுப் பழைய உரைகாரர். ஆனல், கருவூர்க் கதப்பிள்ளை என்பார் இவன் பாண்டிய மன்னனுடைய பெருவீரன் என்னும் கருத்தில்,

'தென்னவர் வய மறவன்'

(புறம். 380 : 5)

என்கிருர். ஆதலால், இவன் பாண்டியனைச் சார்ந்தவன் என்பது புலனும். பாண்டிய சேர நாடுகளுக்கு இடைப்பட்ட நாட்டுத் தலைவனுகிய இவன் ஒரு வேளை தென்னவர்க்கும் சேரவர்க்கும் துணைவனுயும் இருந்திருக்கலாம் .

தென்குமரியை உள்ளிட்ட நாஞ்சில் நாடு பாண்டியர்க்குரியதாய் முற் காலத்தில் விளங்கியது.

தென்குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப

என மதுரைக் காஞ்சியில் (70-72) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சிறப்பிக்கப்படுகின்ருன். 'பழமையாகப் பாண்டியனே டுள்ள தொடர்பைக் கூறி' என்னும் கருத்தில் 'தொன்று மொழிந்து' எனப் படுவதால், பழமையாகவே பாண்டியர்க்குரியதாய்க் குமரியைச் சார்ந்த நாடு விளங்கியமை போதரும். பழைய நிகண்டு நூலாகிய திவாகரம் (கி. பி 8-ஆம் நூற்ருண்டு)

பொதியப் பொருப்பன், புனல் வையைத் துனறவன்,
குமரிச் சேர்ப்பன் கோப் பாண்டியனே (மக்கட் பெயர்)

எனப் பாண்டிய மன்னனுக்குரிய பெயர்களுள் ஒன்ருகக் 'குமரிச் சேர்ப்பன்' என்பதையும் குறிப்பிடுகிறது. கன்னியாகுமரி ஆலயத்திலுள்ள பராந்தக பாண்டியன் சாசனம், தேவியை 'தென்னவர்தம் குல தெய்வம்' எனச் சுட்டுகிறது.

இங்ஙனம், தென்னவர்க்குரிய குமரியைக் கொண்ட இந் நாஞ்சில் நாடு சங்க காலத்தில்தானே சேரர்களாலும் பல முறை கைப்பற்றப் பட்டமை பதினேழாம் புறப்பாட்டாலும், பதிற்றுப் பத்துப் பாடல்களாலும் (11,12) தெரியவருகிறது. எனவே, சேர பாண்டிய நாடுகளுக்கு இடைப்பட்ட இந் நாடு அடிக்கடி இருபெரு வேந்தரது படையெடுப்புக்களுக்கும் உள்ளாகி வந்தமை தவிர்க்க இயலாததாயிற்று. பிற்காலத்தில் தஞ்சைச் சோழர் ஆதிக்கம் பெருகியபோது அவர்களுடைய ஆளுகைக்கும் இந்நாடு உட்பட நேர்ந்தது. முதற் பராந்தகன், கேரளாந்தகன் என்னும் சிறப்புப் பெயர்

புனைந்த முதல் இராசராசன், ஆகியோருடைய சாசனங்கள் நாஞ்சில் நாட்டில் பல இடங்களில் உள. வீரராஜேந்திர சோழன் கேரளனை வென்றதாக, ஒரு சாசனம் உரைக்கின்றது. முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1118),

‘கன்னியுங் கைக்கொண்டு புனிதத் தென்னாட்டு
எல்லை காட்டிக் குடமலை நாடுள்ள
சாவேறு எல்லாம் விசும்பு ஏற...
குறுகலர் குலையக் கோட்டாறு உட்பட
நெறிதொறும் நிலைகளிட்டு அருளினன்’

என்று சாசனத்தால் தெரியவருகிறது. ஆகவே, சோழர் தம் படை

*குடவர்கோ மாந்தரஞ் சேரலிரும் பொறை,
தென் குமரி வட பெருங்கல்
குணகுட கடலா எல்லை
குன்றுமலை, நாடு காடு.
ஒன்றுபட்டு வழிமொழிய (புறம் 7 : 4)

என்று சிறப்பித்துக் கூறப்படுகிறான்,

யெடுப்புக்கும் இந் நாடு இலக்காக நேர்ந்தமை புலனாகும். தமிழ் நாட்டின் தென் எல்லையாக உள்ள இந் நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டப் பெருவேந்தர்கள் ஒவ்வொருவரும் முயலுவது இயற்கையே. இதனால் அடிக்கடி படைகளின் தலையீடுகள் இந் நாட்டினரின் வாழ்வுக்கு இடையூறுகள் விளைத்தன.

போரினால் காஞ்சிப் புனனாடு வட்சிக்கோ
சேரவே, ‘தென்குமரிச் சேர்ப்பனெனும்—பேரதனைத்
தென்னன் இழந்ததொடு சீர்த்தியிழந் தான்வஞ்சி
மன்னர்க்குக் கோடி வர.

(நாஞ்சில் வெண்பா-97)

எனவும்,

அடைசேர் மலைநாடும் அந்தமிழ்நா டுந்தன்
புடைசேரப் போந்தமையால் நாஞ்சில்—படைசேரும்
நன்னாடாம் நாஞ்சிரண்டு நாட்டினல முங்கனிய
என்னா டெதிரா மிதற்கு ?

(நாஞ்சில் வெண்பா. 236)

எனவும் வரும் நாஞ்சில் வெண்பாப் பாடல்களில் பேராசிரியர் கே. என். சிவராஜ பிள்ளை அவர்கள் இந்த அரசியல் சூழ்நிலையைச் சித்திரிக்கின்றார்.

இங்ஙனமே பிற்காலத்தில் வளர்ந்தோங்கிய விஜய நகரப் பேரரசர்களின் பிரதிநிதிகளாலும், மதுரைப் பிரதேசத்தை ஆண்ட நாயக்கர்களாலும் அடிக்கடி இந் நாட்டிற்குத் துன்பம் விளைந்தது. நாயக்கர் படை கொல்லம் 810 முதல், அதாவது கி. பி. 1635 முதல் பல ஆண்டுகள் அடிக்கடி வந்து, இந்நாட்டிற்குச் சேதம் விளைவித்துவந்தனர். இக் காலத்தில் இந் நாட்டைப் பரிபாலித்துவந்த தலைவர்கள் சேரமன்னரின் சார்பாய், அம்

மன்னரின் துணையை நாடி, அவருக்குக் கீழ்ப்பட்டு வாழத் தலைப்பட்டனர். இந்த நாட்டுத் தலைவர்களில் அந்நாளில் சிறந்து விளங்கியவர் அழகிய பாண்டிபுரம் பெரியவீட்டு முதலியார் என்பார் ஆவர். இவர்தம் ஆணைக்கு மங்கலம்முதல் மணக்குடிவரை பரந்துள்ள நாஞ்சில் நாட்டுப் பன்னிரு படாகையும் கட்டுப்பட்டிருந்தது.

முதன்முதல் திருமலை நாயக்கரின் படை கொல்லம் 810, அதாவது கி. பி. 1635 ஆம் ஆண்டு நாஞ்சில் நாட்டில் புகுந்து கொள்ளைகொண்டது. இதனால் நாட்டு மக்களின் வாழ்க்கை சீர் குலைந்தது.

1. திருமலை நாயக்கர் படை கொண்டுவந்த ஏதுவாய் 810 ஆம் ஆன்டு.
2. கார் தரிசு விழுந்து பசானம் பயிர் ஏற்றுவான் காலப் பிற்பா டாழ்கை.
3. கொண்டு மணவாரியும் சம்பாவும் அதிக்கிராவியும் விதைச்சு புழுக் கொளாயப் போகை.
4. கொண்டும் போதரவு இல்வாழ்க்கை கொண்டும் நாட்டினு நோவு நொம்பிலம் ஒண்டாயி. (T. A. S. Vol. V, p. 208)

என்று ஒரு சாசனம் குறிப்பிடுகிறது. இவ்வாறே பின்னரும், மதுரை நாயக்கர் படைகள் அடிக்கடி இந் நாட்டிற்குத் தொல்லை கொடுத்துவந்தன. கொல்லம் 873, அதாவது கி. பி. 1698-ம் ஆண்டுள்ள கல்வெட்டு படை நிகழ்ச்சியை விரிவாகக் கூறுகிறது. நாயக்கர் படைகள் கொல்லம் 852, அதாவது கி. பி. 1677 முதற்கொண்டு பல ஆண்டுகள் அடிக்கடி நாஞ்சில் நாட்டிற்கு வந்து சேதம் விளைத்ததால் மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளானார்கள், நாட்டின் வளம் பல இடங்களில் சிதைந்தது; மக்கள் மன்னருக்குச் செலுத்த வேண்டிய பல வரிகளைச் செலுத்த இயலாதவரானார்கள். நாஞ்சில் நாட்டு மக்களுக்கு நேர்ந்த துயரங்களைப் போக்கும்பொருட்டு மன்னர் பல வரிகளைக் குறைத்தும், மேல் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்றும் அரசாணையாகிய நீட்டு கொல்லம் 870-ஆம் ஆண்டு ஐப்பசி 17-ஆம் தேதியும், 871-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13-ஆம் தேதியும் மன்னரால் விடுக்கப்பெற்றது. இந் நீட்டே இரண்டு ஆண்டுகளுக்குப்பின். 873-ல் கல்லிலும் வெட்டி வைக்கப்பட்டது. இக் கல்வெட்டு 'வீரவிளையிலும் வடசேரி குதிரைப் பந்தி விளையிலும், வய்யாளி (வையாளி) விளையிலும்' அமைக்கப்பட்டிருந்தது (T. A. S. Vol V, p 210-212). நாயக்கர் படையெடுப்பு வரலாற்றையும், நாஞ்சில் நாட்டு மக்களின் அவலநிலையையும், அந்நாளில் அரசாங்கத்திற்கு அவர்கள்செலுத்திவந்த பலவகையான வரிகளையும் இக் கல்வெட்டு குறிப்பிடுவதால், இது வரலாற்றுச் சிறப்புடையதாகும். அதோடு மொழி வரலாற்றிலும் செந்தமிழ் செழித்து வழங்கிய நாஞ்சில் நாட்டில் மலையாளமும் அரசியலால் வந்து புகுந்து ஊடாடுவதையும் காணலாம்.

இந்தக் கல்வெட்டு நாஞ்சில் நாட்டாருக்குச் சேரமன்னர் அளித்த ஓர் உரிமைப் பட்டயமாகவும் திகழ்கிறது, பின்பு ஒருசமயம் நாஞ்சில் நாட்டாருக்கு மன்னர் அளித்திருந்த விருதுகள், தான-மானங்கள் முதலியவற்றை நீக்கியதோடு அதிகமான வரியும் விதிக்கப்பட்டபோது, இந்நாட்டு மக்கள் கூடி, கர்னல் மன்றோ துரைக்கு விண்ணப்பம் விடுத்தார்கள். அதோடு

தங்கள் உரிமைகளைப் புலப்படுத்த இந்தச் சாசனத்தின் நகலும் உடன் அனுப்பி வைத்தார்கள்.

'நாங்கள் எழுதிவச்ச பிட்டுசத்தின்படிக்கு விசாரிச்சு தரவேண்டியது. இந்த வகையழுக்கு 870ஆ அல்ப்பசிமீ 17உயும் 871ஆ வைகாசி மாதம் 13 தியதியும் கல்ப்பிச்க எழுதித்தந்த நீட்டுக்கும் கல்வெட்டு நாட்டுக்குமாயுள்ள பேற்ப்புகூட குடுத்தனுப்பியிருக்கிறோம்.'

(முதலியார் ஓலைகள், 105-பக்கம் 75).

எனவரும் ஓலைப் பிரமாணத்தால் இச் செய்தி தெரியவருகிறது. அரசனுடைய நீட்டை எல்லாரும் அறியும் வகையிலே கல்லில் வெட்டி நாட்டியிருந்தமையால் இச் சாசனத்தைக் 'கல்வெட்டு நாட்டு' என்று மேல்கண்ட பிரமாணம் குறிப்பிடுகிறது.

கல்வெட்டில் காணும் செய்திகள் வருமாறு: நாயக்கருடைய படை நாஞ்சில் நாட்டில் கொல்லம் 852 முதல் (அதாவது கி. பி. 1671) பலநாளும் வந்து, அப் படைகளினால் நாட்டில் அழிவு நேர்ந்ததன் காரணமாக, கொல்லம் 849முதல் 869வரை. (கி. பி. 1674-1695) இருபது ஆண்டுக் காலத்தில் அஞ்சாலி வரி கொடுத்ததுபோக, மேலும் அடைக்கவேண்டியதில் கன்னிப்பூ இரண்டும் கும்பப்பூ பதின்மூன்றும் ஆக பதினைந்து பூவுக்குரிய வரிகளை நீக்கிக் கொடுக்கிறோம். இந்தப் பதினைந்து பூவுகளுக்கும் செலுத்தவேண்டிய அஞ்சாலிவரி, குத்தகை, கோட்டைப்பதிவு காணிக்கை, செலுத்தவேண்டும் ஆமணக்கெண்ணெய், அப் பந்தத்திற்குரிய துணிக்கச்சை, மன்னரீ பிறந்த நாளுக்காகச் செலுத்தவேண்டிய நெல் ஆகியவற்றை குறைத்துக் கொடுத்திருக்கிறோம்.

(வடக்கே) மங்கலம் முதல் (தெற்கே) மணக்குடி எல்லை வரையிலான நாஞ்சில் நாட்டில் உரிமைப் பத்திரங்கள் வைக்கப்பெற்றுள்ள ஓலைப்பெட்டிகளும் மற்றும் குறிப்புச் சீட்டுக்களும் தவறிப்போய் ஒருத்தருக்குரிய ஓலைகள் வேறு ஒருத்தர் கையில் கிடைத்தால், அப்பொழுதே (இனம் தெரிய இயலாத அவை) தும்பு தும்பாகக் கிழித்துப் போடப்படவேண்டும். ஒருவன் தனக்கே உரிமையாகவோ தெத்து வாயிலாகவோ அனுபவித்துவருகிற நிலம், உரிமைப் பணி சம்பந்தப்பட்ட ஓலைப் பிரமாணங்களைத் தாம் வைத்திராது உரியவர்களிடம் சேர்ப்பிக்கவும். படைக் கலவரத்தினாலும் மனக்கவலையாலும் தவறவிட்ட பிரமாணங்களையோ காணம் ஓலைகளையோ உரிமையுடையவனல்லாத பிறன் தனக்குரியதாகக் கொண்டுவந்தால் அந்த ஓலைகள் பிரமாணம் ஆக மாட்டா.

பாட்டம், மேல்வாரம், தழி, சங்கேதம் உட்பட்ட வரிகளுக்குக் கார்ப்பூவில் ஐப்பசி காத்திகையிலும், பசானம் பூவில் பங்குனி சித்திரையிலும் நெல்லாகக் கொடுக்கிறதல்லாமல், விலை நிரக்கிற்குத் தக்கபடி பணம் கொடுக்கக் கூடாது; பணத்தை வாங்கவும் கூடாது.

படுகலம், கடன்குறி, உபயம் பலிசை வகைகளில் அதுவரை தீர்க்கப் படாத படுகலமும் கடனும் தீர்க்கவேண்டுவதில்லை. தனி அபராதங்களும் சாவு காணிக்கையும் செலுத்தவேண்டா. சங்கேதப் பற்றிலும் பெரும்பற்றிலும், ஈடாகவேண்டிய பொருளுக்கான ஆதாரத்தைக்காட்டி, உற்பத்தியைத் தடுத்தால் தடையாகமாட்டாது; அந்தச் சங்கேதக்காரர் கொண்ட கடத்திற்

காக நிலத்தின் மேல்வாரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாது, அவர்களுடைய பிரவேசத்தில் தடை செய்யக்கூடாது.

மேல்வாரத்திற்கும் பாட்டத்திற்கும் அந்த நடப்பு ஆண்டுக் குறிப்புச் சீட்டும் அதற்கு முக்கிய ஆண்டுக் குறிப்புச் சீட்டும் காட்டி, உரியவரிடம் சேர்க்கவும். நமது அதிகாரிகள் வந்தால், பிராமணராயின் செலவிற்காக ஒரு நாளைக்குப் பன்னிரண்டு நாழி நெல்லும், சூத்திரராயின் செலவிற்காக ஒரு நாளுக்கு ஒன்பது நாழி நெல்லும் அல்லாமல் எதுவும் கொடுக்கக்கூடாது.

இவை குறித்து, கொல்லம் 870 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் தேதியும், 871-ம ஆண்டு வைகாசி மாதம் 13ஆம் தேதியும் கொடுத்த நீட்டின்படி வீரவிளையிலும், வடசேரிக் குதிரைப்பந்தி விளையிலும், வையாளி விளையிலும் கல்லுவெட்டி நாட்டப்பட்டது. இதன்படியே பிரமாணமாக நடந்துகொள்ளவேண்டும்.

நாஞ்சில் நாட்டு வடவகை தென்மீதி நாட்டில் வாழ்வார்க்கு இந்தக் கல் வெட்டு

இக் கல்வெட்டினால் அந்நாளைய வரலாற்றுச் செய்திகள் சிலவும், நாட்டுப் பழக்க வழக்கங்களும், மன்னருக்கும் மக்களுக்கும் இடையே அமைந்திருந்த உறவு நிலைமையும் தெரிய வருகின்றன. நாஞ்சில் நாட்டின் உள்நாட்டு நிலைமை நாயக்கர் படையெடுப்புக்களின் காரணமாக பெருங் குழப்பத்தில் இருந்தமை புலப்படுகிறது. சொத்துரிமைப் பிரமாணங்கள்கூடத் தவறிப்போகும் அளவுக்கு மக்களிடையே அச்சமும் கலவரமும் நிறைந்திருந்தன. அடிக்கடி மக்கள் இடம்விட்டுக் குடிபெரும் நிலையும் இருந்தது. எனினும், அவர்கள் திருவாங்கூர் மன்னரிடம் விசுவாசமாயிருந்தனர்; மன்னர் விதித்த பல வரிகளையும் செய்து வந்தனர். மன்னரும் மக்களுடைய குறைகளை நன்கு தெரிந்து, அதற்கு வேண்டும் பரிகாரங்களைத்தாம் ஆணையிட்டு, அதிகாரங்களைக் கொண்டு செய்வித்தனர்.

அந்நாளில் மக்களால் செலுத்தப்பட்டு வந்த வரிகள் பல; இவை அவர்கள் விளைவிக்கும் நெல்லாகவே வாங்கிக்கொள்ளப் பெற்றன. அஞ்சாலி, குத்தகை, கோட்டைப் பதிவு காணிக்கை, பந்தத்திற்கு ஆமணக்கெண்ணெய், பந்தத்திற்குத் துணிக்கச்சை, மன்னர் பிறந்த நாள் விரைவாக, பாட்டம், மேல்வாரம், தழி (தளி), சங்கேதம், படுகலம், கடன்முறி, உபயம், பலிசை, சாவு காணிக்கை முதலியனவாம்.

கல்வெட்டுக்களால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு

[க. த. திருநாவுக்கரசு]

ஒரு நாட்டின் வரலாற்றை வரைவதற்கு அந்நாட்டு இலக்கியம். தொல்பொருள் சின்னங்கள், கல்வெட்டுக்கள், பழங்காசுகள் முதலியன வற்றை ஆதாரங்களாகக் கொள்ளுகிறோம். வரலாறு எனும் மாளிகையைக் கட்டுவதற்குத் தேவைப்படும் மண்ணாக இலக்கியத்தையும், செங்கற்களாகத் தொல்பொருள் சின்னங்களையும், சுண்ணாம்பாகக் கல்வெட்டுக்களையும் கூறலாம். இவற்றுள் கல்வெட்டுக்கள் வரலாற்று மாளிகையைக் கட்டுக் கோப்புடையதாகவும், கவர்ச்சி உடையதாகவும் செய்வதற்குப் பயன்படும் சாந்தாக விளங்குகின்றன, என்று சொன்னால் அது தவறாகாது. ஒரு நிகழ்ச்சியையோ, செய்தியையோ, பொருளைப்பற்றியோ கல்லில் வெட்டி, அக்கல்லை மக்கள் பலரும் சேர்ந்து பார்க்கத்தக்க பொதுவிடங் களிலோ, கோயில்களிலோ பதித்து, மக்களைக் காணுமாறு செய்வது, தொன்றுதொட்டு நம்நாட்டில் இருந்து வரும் வழக்கமாகும். அவ்வழக்கம் சோழப்பேரரசர்கள் காலத்தில் பெரு வழக்காயிற்று.

இந்திய வரலாற்றில் சோழப்பேரரசு தனிப்பெரும் சிறப்புடையதாக விளங்குகிறது. சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குத் தென்னிந்தி யாவை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்து, சோழப்பேரரசர்கள் ஆட்சி செய் தனர். அக்காலத்தில் அவர்கள் வழங்கிய செப்புப்பட்டயங்களும் பொறித்த கல்வெட்டுக்களும் எண்ணற்றவை. அவர்கள் ஆட்சிக்காலத்தில் பொறிக்கப் பெற்ற பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் இன்று நமக்குக் கிடைத் துள்ளன. அக்கல்வெட்டுக்களை அரசரால் பொறிக்கப்பட்டவை என்றும், அரசாங்க அதிகாரிகளாலும் குறுநில மன்னர்களாலும் வெளியிடப்பட்டவை என்றும் பலவகையாக நாம் பாகுபாடு செய்யலாம். அவையாவும் அன்றைய அரசியல் நிலையையும், நாகரிகப்பண்பாட்டு வரலாற்றையும் அறிவதற்குப் பேருதவியாக உள்ளன. அவற்றின் துணையைக்கொண்டு நாம் சோழர் காலத்தில் சமுதாய அமைப்பினை இப்பொழுது காணலாம்.

சமுதாயம் என்பது நெறிமுறைகளையும், மரபுகளையும் பழக்க வழக்கங் களையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு எனலாம். அவ்வமைப்பு அதிகாரமும், ஒருவர் மற்றொருவருக்கு உதவும் இயல்பையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அது மக்கள் இனத்தின் பல்வேறு பிரிவுகளையும் குழுக் களையும் கொண்டு விளங்குவதாகும். மக்களுடைய நடத்தையும் உரிமை

களையும் கட்டுப்படுத்தும் அமைப்பாகவும் அது இயங்குகிறது. தனி மனிதனின் வாழ்க்கை முழுமைத்தன்மையை அடைவதற்குக் கருவியாக இருப்பதும் அதுவே. மனிதரின் செயல்களை உரிமையுடையனவாகச் செய்வதோடு அவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதும், மக்கள் தவறுமல் பின்பற்றுவதற்குத் தேவையான வாழ்க்கைக்குரிய விதிமுறைகளை வகுத்துக் கொடுப்பதும் சமுதாயமெனில் அது மிகையாகாது.

சமுதாய அமைப்பு :

சோழர் காலத்திய தமிழ்ச்சமுதாயம் நெகிழ்ச்சிமிக்க ஒன்றுக இருந்தது. அச்சமுதாய அமைப்பின் அடிப்படையாகச் சாதி அமைந்திருந்தது. சாதி அடிப்படையில் அமைத்த குழுக்கள் பல அக்காலத்தில் சிறப்புற்று விளங்கின. ஒவ்வொரு சாதியும் குறிப்பிட்ட ஒரு தொழிலைத் தலைமுறை தலைமுறையாகச் செய்துவரும் தொழிற்குழுக்களின் பரிணும வளர்ச்சியாகக் காணப்பட்டது. ஒவ்வொரு சாதியும் அதனுடைய பொருளாதார, சமூக உரிமைகளைக் காத்துக் கொள்ளுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தன. வைதிக நெறிபற்றிய நான்கு வகை சாதிப்பாகுபாடு தமிழகத்தில் அதேமுறையில் கால்கொண்டதாகத் தெரியவில்லை. க்ஷத்திரியர்கள் என்னும் வகுப்பினர் சோழர் காலத்திய கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. மேலும் சோழ அரசர்கள் உழுதுண்ட வேளாளர் குடிகளில் பெண் கொண்ட செய்தியைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வேளிர் குடியினரே சோழர் காலத்திற்குப் பெரிதும் பெண் கொடுத்து வந்ததோடு, அப்பேரரசைக் கட்டிக் காப்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர் என்பதை அறிகிறோம். சோழப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில்தான் இன்றைக்குத் தமிழகத்தில் காணப்படும் பல்வேறு சாதிகள் அரும்பின. அவை காலப்போக்கில் மலர்ச்சியுறத் தொடங்கின. இதற்கு முன்பு எல்லாம் தொழில்முறை பாகுபாடாக இருந்த வகுப்பு நிலைமாறிப் பிறப்பால் சாதிவேறுபாடு பாராட்டப்படும் நிலை நன்கு வேருன்றத் தொடங்கியதை நாம் காண்கிறோம். அக்காலத்தில் மேல் வகுப்பினர், கீழ் வகுப்பினர் என்ற பாகுபாடுகள் நிலைபெற்றிருந்தன என்பதை எடுத்துரைக்கும் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. ஆயினும் சோழர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு வகையான சாதியினரும் தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்து கொண்டிருந்தனர் என்பதையும் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

சமுதாயத்தின் தலைமை யிடத்தில் பிராமணர்கள் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் வேதங்களில் வல்லுநர்களாகவும், சாத்திரங்களில் தெளிந்த அறிவுடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் அம்பலங்களிலும் திருக்கோயில்களிலும் இரவில் மாபாரதம் பதினெண்புராணம் முதலியவற்றைப் படித்துப் பொது மக்கள் புரிந்து கொள்ளுமாறு விளக்கி வந்தனர். அவர்களுடைய சமஸ்கிருத மொழிப்புலமையும் வேதசாத்திர அறிவையும் கண்டு வியந்த மக்கள் அவர்களுடைய நல்வாழ்க்கையைக் கருதி அவர்களுக்கு வேத விருத்தி, பாரத விருத்தி, பட்ட விருத்தி, புராண விருத்தி என்ற பெயர்களால் ஊர்ப்பொது நிலங்களை மானியமாக வழங்கினர்.

மேலும் திருக்கோயில்களில் நாள்தோறும் நண்பகற்பொழுதில் பிராமணர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு அரசர்களும், அதிகாரிகளும், செல்வர்களும் அறக்கட்டளைகள் பல அமைத்ததைப்பற்றிக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

பிராமணர்களுக்குத் தானமாக அமைக்கப் பெற்ற பிரமதேயங்களும் சதுர்வேதிமங்கலங்களும் அக்காலத்தில் மிகப்பலவாக இருந்தன. அவ்வூர்களில் பிராமண சமூகத்தினரே வாழ்ந்து வந்தனர். மற்ற ஊர்களில் அவர்கள் வாழ நேரிட்டால் அவர்கள் தனித்த பகுதிகளில் தனித்த ஓர் குழுவினராக வாழ்ந்து வந்தனர்.[1] அத்தனித்த பகுதிக்கு 'அகரம்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. 'அக்கிரகாரம்' எனும் வடமொழிச்சொல்லின் திரிபாக 'அகரம்' வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது கல்வெட்டாராய்ச்சியாளர்களின் கருத்தாகும். சோழப்பேரரசன் இராஜேந்திரனுக்கு ஆசாரியராக விளங்கியவர் சர்வசிவ பண்டிதர் என்பவராவர். அவருக்கு ஆசாரிய போகமாக இரண்டாயிரம் கலநெல் ஆண்டு தோறும் அளிக்குமாறு அவ்வரசன் ஏற்பாடு செய்திருந்தான் என்பதைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.[2] விக்கரம சோழனுக்கு ஸ்ரீ கண்ட சம்பு என்ற வேத விற்பன்னர் ஒருவர் அரசகுருவாக இருந்து வந்தார். அவருடைய மகனை ஈசுவரசிவன் எனப்படும் சோமேசுவரர் மூன்றும் குலோத்துங்கனுக்கு அரச குருவாக இருந்தார் என்றும் அவர் 'சித்தாந்தரத் நாகரம்' எனும் சித்தாந்த நூலை இயற்றினர் என்றும், மூன்றும் குலோத்துங்கனுடைய திரிபுவனத்து வடமொழிக் கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது.[3] "ஸ்ரீ கண்ட சம்பு என்பவருடைய குமாரரும், தன்னுடைய குருவுமான ஈசுவர சிவன் எனும் சோமேச்வரரைக் கொண்டு இவ்வுலகத்துக்கே பெற்றோர்களாக விளங்கும் பரமசிவன் பார்வதியாகிய இருவரையும் மிகச்சிறந்த முறையில் பிரதிஷ்டை செய்வித்தான். அரசகுருவான அந்த ஈசுவரசிவர் சித்தாந்த ரத்நாகரம் எனும் நூலை இயற்றியவர்".[4] இவ்வாறு சோழர் காலத்திய சமுதாயத்தில் பிராமணர்கள் சீரும் சிறப்பும் பெற்றவர்களாகவும், கல்வியிலும் கலை ஞானங்களிலும் தெளிந்த அறிவுடையவர்களாகவும், மன்னர்களால் போற்றிப் பாராட்டப்படும் நிகரற்ற பெருமையுடையவர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

வணிகர் :

வாணிகம் செய்து வந்த மக்கள் "வாணியர்" என்றும் "செட்டிகள்" என்றும் பெயர் பெற்றிருந்தனர். "எயில் கோட்டத்து எயில்நாட்டு நகரம் காஞ்சிபுரத்து அருமொழி தேவப் பெருந்தெருவில் வியாபாரி குமாரப் பெருவாணியன் தேவன்"[5] என்னும் கல்வெட்டின் வாசகத்தாலும் "மலை மண்டலத்து வள்ளுவ நாட்டு முரஞைத்த மங்கலத்து சாத்தன் பேராயிர செட்டி வைத்த திரு நந்தா விளக்கு" என்னும் தொடராலும்[6] வாணிகம் செய்து

(1) 311 of 1911.
2. 190 of 1907
3. S.I.I. Vol II No. 20
4. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் II பக்கம் 950.
5. S. I. I. Vol III எண் 68.
6. தெ. இ. கோ. சா. பாகம் I. பக்கம் 366

வந்தவர்களுக்கு வழங்கிய சாதிப் பெயரினை அறிகிறோம். வாணிகர்களுள் நானாதேச திசை யாயிரத்தைந் நூற்றுவர், மணிக் கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தர் என்ற பல குழுவினர் இருந்து வந்தனர் என்பது அக்காலத்திய கல்வெட்டுகளால் தெரிய வருகிறது.[7] முதலாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1088 ஆம் ஆண்டில்) சுமத்திராவில் பொறிக்கப் பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் 'திசை யாயிரத்தைந்நூற்றுவர்' என்ற வாணிகக் குழுவினர் குறிக்கப் பெற்றிருக் கின்றனர்.[8] அவர்களுள் 'நகரத்தார்' என்று அழைக்கப்பட்டோர் பெரிய நகரங்களுள் வாணிகத் தொழில் நடத்திக்கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த ஊர்களில் இருந்து வந்த ஊராட்சி மன்றத்திற்கு 'நகரம்' எனும் பெயர் வழங்கி வந்ததையும் நாம் காணுகிறோம். இவ்வணிகர்கள் சோழப் பேரரசின் பொருளாதார வாழ்விற்கு முதுகெலும்பு போன்றிருந்தனர்.

பிற சாதியினர் :

பண்டைக்காலம் முதல் நிலத்தினை உழுது பயிரிட்டு வந்த உழவர்களும், உழுவித்துண்டு வாழ்ந்த வேளாளர்களும், சோழப் பேரரசில் சிறப்புற்று விளங்கினர். உழுவித்துண்போர் குறுநில மன்னர்களாகவும், சிற்றரசர்களாக வும், அரசியல் அதிகாரிகளாகவும், படைத்தலைவர்களாகவும் பணியாற்றி வந்தனர். நிலத்தை உழுது பயிரிட்டு வந்த உழவர் 'வெள்ளாளன்' என்று பெயர் பெற்றிருந்தனர் என்பது ''திரிபுவன செக்கிற வந்திகள் விக்கிரம சோழ தேவற்கு யாண்டு யிருபத்தி ரெண்டாவது பொங்கலூர் காலனட்டு கிறன்னூற் வடக்கே கோயில் வெள்ளாளன் புகையறில் சோளன் புள்ளி னேன்.''[9] என்பன போன்ற கல்வெட்டுத் தொடர்களால் அறியலாம். 'அகமுடையார்' என்னும் ஒரு பிரிவு அக்காலத்தில் சிறப்புற்றிருந்ததை ''திருமுதுகுன்றமுடைய நாயனார்க்குப் பல்லவன் கோப்பெருஞ்சிங்கனுடைய 'அகம்படி முதலிகளில் எதிரி கணையன்'[10] என வரும் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது.

அன்றைய தமிழ்ச் சமூகத்தின் மற்றொரு முக்கிய சாதியினராகக் ''கைக் கோளர்கள்'' கல் வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளனர். இப்பெயர் தொடக்க காலத்தில் தோள்வலி மிகுந்த காலாட் படையினரைக் குறிப்பிட் டாலும் காலப்போக்கில் அது தனிப்பட்ட சாதியினரைக் குறிக்கும் பெய ராகவே வழங்கத் தலைப்பட்டதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ''திருப்பாசூர் கிராமத்து கைக்கோளன் கண்ணன் அரசு என்பான்''[11] என் பதனுலும், ''உகண்ணுட்டுடையார் அருமொழி தேவ தெரிஞ்ச கைக்கோள ரில் கற்றளி பட்டாலகன்'' என்பதனுலும் அறியலாம். இக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் சிறப்புப் பெயர் சாதியைக் குறிப்பதாகாது என்றும், அவை காலாட் படையினரைக் குறிக்கும் அடைமொழிகளேயாகும் என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். தொழிற்பெயர் நாளடைவில்

7. 193, 402 of 1934-40.
8. Colas P. 596.
9. தெ. இ. கோ. சா. II பக்கம் 834.
10. S. I. I. Vol VII. No. 149
11. 144 of 1928.

சாதிப் பெயராக மாறியதை இது குறிக்கிறது என்று கொள்ளுதல் தவறு காது. மேலும் ஒரு கிராமத்தில் இருந்த எட்டுவகையான சாதியினர் ஒன்ருகச் சேர்ந்து கோயிலுக்குச் செய்த அறத்தைப்பற்றி "பூண்டிக் கிராமத்து எட்டு சாதியாரும் கூடி வடபரிசார நாட்டு வடக்கே பள்ளியின் கோதைப் பிராட்டீசுவரம் உடையாருக்கு இசைக்கிடாயும் பண்குறுணியும்[12] அளித்தனர்" என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டினுல் ஓர் ஊரில் எட்டுச் சாதியார் இருந்தனர் என்பது தெளிவாகப் புலனுகின்றது. எனவே, ஓர் ஊரில் சாதி அடிப்படையில் தமிழ்ச் சமுதாயம் பல குழுக்க ளாகப் பிரிந்திருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இரண்டாம் இராசாதிராசனுடைய பதினுன்காம் ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழ சதுர்வேதிமங்கலச் சபையார் செய்த முடிவு ஒன்று ஆச்சாள் புரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. அந்தக் கல்வெட்டு[13] சிறு விளக்கு களும், பானைகளும் செய்து விற்கும் குயவர்கள் 'ஒரு மேலாடை அணிந்து கொள்ளலாம்' என்று குறிப்பிடுகின்றது. திரிபுவனி வரதராசப் பெருமாள் கோயிலில் காணப்படும் முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் (கி.பி. 1113 இல்) பொறிக்கப்பெற்ற கல்வெட்டொன்று கிராமத்திலுள்ள பட்டர், உபாத்தியாயர், கணக்கர், தச்சர், கொல்லர் முதலானோர் தத்தமக் குரிய தொழில்களை அவ்வூரிலேயே செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்று இராம சபையார் செய்த முடிவினை அறிவிக்கின்றது.[14] இவற்ருல் அக்காலத் தில் சாதி வேறுபாடுகள் தலைதூக்கத் தொடங்கின என்பது நமக்குப் புலனுகி றது.

கலப்பு சாதியினர்:

அனுலோமர், பிரதிலோமர் என்ற கலப்பு சாதியினர் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளனர். அக்கலப்புச் சாதியினருக்குரிய கடமைகளும் ஒழுகலாறு களும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அனுலோம வகுப்பினருள் ஒரு பிரிவினர் கட்டிடவேலை, தேர் செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபடலாம் என்றும், கோபுரங்கட்டல், மண்பாண்டங்களிலும் கோபுரங்களிலும் சிற்பங் களை அமைத்தல் முதலிய பணிகளைச் செய்யலாம் என்றும், பிரதிலோமரைக் காட்டிலும் உயர்ந்தவர்களான அனுலோமர் வகுப்பைச் சார்ந்தவர்கள் இவர்கள் என்றும், இவர்கள் சாத்திர விதிப்படி பூணூல் அணிந்துகொள்ளும் உரிமையுடையவர்கள் என்றும், இவர்கள் அக்னிஹோத்திரம் ஔபாசனம் முதலியவற்றைச் செய்தல் கூடாது என்றும், திருக்குடிக் கோயிலில் காணப் படும் முதலாம் குலோத்துங்க சோழனது நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.[15] இவ்வாறு உரிமைகளைப் புதியதாகப் பெற்றவர்கள் கொத்தரும், இரும்புக் கொல்லரும், பொற்கொல்லரும், தச்ச ரும், கல் தச்சரும் ஆகிய ஐந்து வகைப்பட்ட கம்மாளர்களாவார்கள். இவர் கள் 'இரதகாரர்' ஆவார்கள் என்று மற்ருெரு கல்வெட்டொன்று' கூறுகிறது.

---

12. 442 of 1920.
13. A. R. E. 1919, Part II P. P. 9298.
14. 205 of 1919.
15. A. R. E. 1908-9, P P 95-96.

அரசகுலப் பெண்ணுக்கும் வணிகர் குடி ஆணுக்கும் பிறந்தவன் 'ஆயோகவன்' எனப்பட்டான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[16] 'ஆயோகர்' பிரதிலோம வகுப்பினரைச் சேர்ந்தவராவார். இவர்கள் ஆடைகளை நெய்து அரசர்க்கும், அந்தணருக்கும், கடவுளுக்கும் கொடுத்து வந்தனர். இவருட் சிலர் திரிபுவனம் போன்ற இடங்களில் இறைபிலியாக நிலங்களைப் பெற்று கோவிலுக்கும் மறையவர்க்கும் வேண்டிய ஆடைகளை நெய்து வந்தனர்.[17]

புதிய உரிமைகள் :

கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பேரூரிலும் கருவூரிலும் காணப்படும் இரு கல்வெட்டுக்கள் தென் கொங்கு நாட்டுக் கம்மாளர்களுக்கும், வெங்கால நாட்டுக் கம்மாளர்களுக்கும் சோழப்பேரரசன் மூன்றும் குலோத்துங்கன் வழங்கியுள்ள சில உரிமைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. கம்மாளர்கள் நன்மை தீமைகளுக்குச் சடங்குகள் செய்கின்ற பொழுது "இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை, முரசு முதலியனவற்றைக் கொட்டுவித்துக் கொள்ளலாம். தம் வீடுகளுக்குச் சுண்ணும்புச் சாந்து பூசிக்கொள்ளலாம்[18] என்பது அரசன் அளித்த புதிய உரிமைகளாகும். இதைப் போன்றே வீட்டைவிட்டு வெளியே செல்லும்பொழுது கம்மாளர் மிதியடி அணிதலுக்குக்கூட அரசனிடம் இருந்து உரிமைபெற வேண்டியிருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[19] பாண்டிய நாட்டு இடையர்களுக்கு விக்கிரம சோழன் அளித்த உரிமைகளைக் கிரனூர் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. இடையர்கள் வீடுகட்டும்பொழுது இருபுறமும் வாசற்படிகள் வைத்துக் கொள்ளலாம் என்றும், நன்மைகளுக்குப் பல்லக்கேறிச் செல்லலாம் என்றும், இழவுகளுக்கு மேல்வளைவுள்ள பாடைகட்டி அதன்மேல் பச்சைப்பட்டு, புலியூர்ப்பட்டு என்பனவற்றைக் கட்டிக்கொள்ளலாம் என்றும், நன்மை தீமைகளுக்குப் பேரிகை கொட்டலாம் என்றும், கிரனூர் நாட்டு இடையர்கள் பெற்ற உரிமைகளைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இவ்வாறு அரசர்களால் மனமுவந்து வழங்கப்பெற்ற உரிமைகளிலிருந்து அக்காலத்தில் சாதிவேற்றுமை எத்துணை அளவிற்குச் சமுதாயத்தில் ஆழவேரூன்றி இருந்தது என்பதையும், எல்லோர்க்கும் பொதுவாக அனுபவிக்க வேண்டிய வாழ்க்கை வசதிகள் எவ்வாறு ஒரு சிலரால் மட்டும் அனுபவிக்கப்பட்டு வந்தன என்பதையும், மற்ற சாதியினர் அவற்றைத் தாங்களும் பெற வேண்டும் என்னும் ஆர்வத்தால் வாய்ப்புக் கிடைக்கின்ற போதெல்லாம் அரசரிடத்துத் தங்களுக்கு அவ்வுரிமைகளை அளிக்குமாறு பணிவுடன் வேண்டிப் பெற்றனர் என்பதையும் நாம் அறிய முடிகிறது. இத்தகைய நிலை சோழர் காலத்திய சமூக அமைப்பின் சிறப்பிற்குக் காரணமாக இருந்தது.

---

16. 508 of 1922.
17. 189 of 1925, 208 of 1919.
18. 151 of 1905
19. 562 of 1893, 66 of 1890

வலங்கை இடங்கை வகுப்பினர் :

இனி, அக்காலத்திய தமிழ்ச் சமுதாயத்தில் வலங்கை இடங்கை என்னும் வகுப்புக்கள் இருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். வலங்கையர் சோழப் பேரரசின் சிறப்புமிக்க படைவீரர்களாக விளங்கினர். இப் பிரிவு களும், வகுப்புக்களும் எவ்வாறு தோன்றின என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை, இடங்கையர் காசியப முனிவரது வேள்வியைக் காக்கத் தீக் குழியிலிருந்து படைக்கப்பட்டனர். சோழமன்னன் அரிந்தமன் என்பான் வடநாட்டிலிருந்து மறையவரைத் தமிழகத்திற்கு அழைத்து வந்தபோது. அவர்தம் மிதியடிகளையும் உடைகளையும் தாங்கிக்கொண்டு இடங்கையர் தென்னாட்டிற்கு வந்தனர் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.[20] தம் மினத்தவர்க்கு ஏதேனும் துன்பம் வருமாயின் இனத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து அவற்றைப் போக்க முயலவேண்டும் என்றும், கொக்கின் இறகினை, முடிக்கப்பெறாத கூந்தலிலே அணிந்துகொள்வதே இவர்களுக்குரிய அடையா ளம் என்றும், இவர்கள் பவனி வருகிறபோது முன்பாகத் தாரைக்கொம்பும், சங்கும் ஊதப்படல் வேண்டும் என்றும், இவ் விதிக்கு மாறுபட நடக்கும் இடங்கையர் தம் இனத்தினின்றும் வெளியேற்றப்படுவார்கள் என்றும் அவர் கள் தங்களுக்குள்ளே[21] ஒரு முடிவிற்கு வந்ததை மற்றொரு கல்வெட்டு அறி விக்கிறது. இடங்கை வகுப்பினருக்கு 'சுருதி மான்கள்' எனும் பெயர் வழங் கியதாகத் தெரிகிறது. ஆடுதுறைக் கல்வெட்டு ஒன்று இடங்கை வகுப்பின ருள் 98 உட்பிரிவுகள் இருந்தன என்றும் செய்தியைத் தெரிவிக்கிறது.[22] இவ் வலங்கை, இடங்கை இனத்தவருக்கு இடையே தீராதப் பகைமை தோன்றி வளர்ந்ததைப் பிற்காலத்திய கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

சோழர் காலத்திய தமிழ்ச்சமுதாய அமைப்பில் வேறு சாதிகளை யுடையதாக அமைந்திருந்ததை இக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சங்க காலத்தில் தமிழ்ச்சமுதாயத்தில் காணப்படாத பல பிரிவுகளும், உட்பிரிவு களும் தோன்றி வளர்ந்ததைச் சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் தெரிவிக் கின்றன. ஒவ்வொரு சாதியினரும் தத்தம் கடமைகளை நெறி பிறழாது செய் வதில் கருத்துடையவர்களாக வாழ்ந்தனர் என்பதையும். அரசனும் குடி மக்கள் குலவொழுக்கம் தவறாமல் ஒழுகுமாறு கண்காணித்து வந்தான் என் பதையும்

“ மன்னுயிர்க்கெல்லாம் இன்னுயிர்த் தாய்போல்
தண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து
மண் முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாசல் புறத்து
மணிநா வொடுங்க முரசுகள் முழங்க
விசையமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழிஇம் மாநிலங் காக்க”

எனும் விக்கிரம சோழனின் மெய்கீர்த்தியால் அறிகிறோம்.

---

20. 341 of 1907, 489 of 1907
21. 34 of 1913, A. R. E. 1921 Para 47.
22. 34 of 1918.